www.padippakam.com

HOONDIE
Südasien Büro
Große Heimstr. 58
4600 Dortmund 1

# தாயகம்

கலை இலக்கிய மாத இதழ்



21

- முருகையன்
- சி. தில்லைநாதன்
- சி. சிவசேகரம்
- ந. சுரேந்திரன்
- கே. எஸ். சிவகுமாரன்
- நெடுந்தீவு லக்ஷ்மன்
- சாவகச்சேரி ...முருகதாசன்
- எஸ். சுருதிகரன்
- எஸ். ரீ. குமார்
- இப்னு அஸூமத்
- இ. அனுரதன்
- சுமண்யன்
- விநாயகன்
- சேயோன்
- சி. கா. செ.
- பி. எஸ். பி.
- சிவகாமி
- ஸ்வப்னு
- நேசகுர்
- நோவலி
- சங்கர்
- சிவா

ஜனவரி — பெப்ரவரி

1990

விலை ரூபா: 10-00

புதிய ஜனநாயகம் புதிய நாகரிகம் புதிய வாழ்வு

படிப்பகம்

www.padippakam.com


# நியூ வீனஸ் றெக்கோடிங்
# அன் றேடியோ வாச் வேக்ஸ்

யாழ்நகரில், சிறந்த வீடியோ படப்பிடிப்பிற்கும்
T. V. அன்ரனு இணைப்பிற்கும்
மற்றும் சகல விதமான
T. V., டெக், றேடியோக்கள், மணிக்கூடுகள்
எலக்ரோனிக் சாதனங்கள்
உத்தரவாதத்துடன் திருத்திக்கொள்ள
நாடவேண்டிய இடம்

## NEW VENUS RECORDING & RADIO WATCH WORKS

No. 60. Stanley Road,
JAFFNA

# லிங்கம் வெல்டேர்ஸ்

மரவேலை ஃ இரும்புவேலை
சகல வகையான
வெல்டிங் வேலைகட்கும்
தொடர்புகொள்க

## லிங்கம் வெல்டேர்ஸ்

நிச்சாமம்
சங்கானை

www.padippakam.com

THOONDIL
Südasien Büro
Große Heimstr. 58
4600 Dortmund 1

தாயகம்

புதிய ஜனநாயகம்!
புதிய வாழ்வு!
புதிய நாகரிகம்!

இதழ் 21 1990 ஜனவரி - பெப்ரவரி

# நண்பர் கே. ஏ. சுப்பிரமணியம் நினைவாக

நண்பர் கே. ஏ. சுப்பிரமணியம் அவர்களுடைய இதயம் தனது இயக்கத்தை 27-11-89 அன்று நிறுத்திக்கொண்டு விட்டது. அவர் அரசியல்வாதியாக மட்டுமன்றி கலை- இலக்கிய ஆர்வலராகவும் திகழ்ந்தவர். தேசிய கலை இலக்கிய பேரவையின் ஸ்தாபகர்களில் ஒருவரும் தாயகம் ஆசிரியர் குழுவின்சார்பாக தொடர்ந்து இப்பகுதியை எழுதிவந்தவருமாவார்.

நண்பர் கே. ஏ. எஸ். தனது அரசியல் சித்தாந்தங்களை இலக்கியத்தினுள் திணிக்கும் செயலை ஒருபோதும் செய்ததில்லை. அதேவேளை மனிதகுல விடுதலைக்கான வெகுஜன மார்க்கம் ஒன்றிற்கு கலை – இலக்கியம் பணி செய்யவேண்டும் என்ற கருத்துடையவராயிருந்தார்.

தாயகம் ஒரு குழுவின் நலனுக்கு அப்பால் மக்கள் நலன் சார்ந்ததாக தனது கருத்துகளை வகுத்துவழங்கி



படிப்பகம்

www.padippakam.com

வந்ததற்கு அவருடைய இத்தெளிந்த சிந்தனை காலாயிற்று. கால நேச வர்த்தமானங்களை கவனத்திற் கொண்டு காலத்திற்குக் காலம் தாயகத்தின் ஆசிரியர் தலையங்கங்களினூடாக ஆணித்தரமாக அவர் வெளிப்படுத்திய கருத்துக்களில் அநேகமானவை இன்னமும் வலியுறுத்தப்பட வேண்டிய தேவையுடையன.

தாயகம் முதற்தொடர் 1974 சித்திரையில் முதல் இதழை வெளியிட்டபோது, அதன் ஆசிரிய தலையங்கத்தில், "புதிய ஜனநாயகத்தையும், புதிய வாழ்வையும் புதிய நாகரிகத்தையும் தோற்றுவிக்கும் சக்திகள் தாங்கள் எதிர்பார்த்த அல்லது எடுத்த முயற்சி காலம் அறிந்து தங்களிடம் வந்திருப்பதைக்காண மகிழ்வடைவர்'' எனக் கூறியிருந்தார் கே. ஏ. எஸ். அவர் இறப்பதற்கு முன்னர் ''புதிய ஜனநாயகம் புதிய வாழ்வு, புதிய நாகரிகம்'' தாயகத்தின் பதாகையாக அமைய வேண்டுமென வலியுறுத்தியிருந்தார். இவ்வாறு, தாயகத்தின் உடனடிப் பணியை தெளிவாக அவர் வரையறுத்துத் தந்தார்.

தாயகத்தின் புதிய தொடர் 1983 சித்திரையில் தொடங்கிய போது தேசிய சர்வதேச நிலைமைகள் மாறியிருந்தமை கவனத்திலெடுக்கப்பட்டிருந்தது. ''இன்று எமது நாடு, பாரிய பொருளாதார நெருக்கடி: மோசமான வாழ்க்கைச்சுமை, தேசிய இனங்களிடையே பகமை இளைஞர்- மாணவர்களிடையே அமைதியின்மை உழைக்கும் மக்கள் தாம் போராடிப்பெற்ற ஜனநாயக, தொழிற்சங்க உரிமைகள் படிப்படியாக பறித்து எடுக்கப்பட்டமை, கலாச்சாரச் சீர்குலைவு, அந்நிய கலாச்சார ஊடுருவல்கள் போன்றவற்றைக் காண்கிறது'' என மாற்றமடைந்த நிலைமைகளின் சாராம்சத்தை இரத்தினச் சுருக்கமாகக் காட்டியிருந்தார்.



படிப்பகம்

www.padippakam.com

அந்த அடிப்படையின் காரணமாக, இந்த தேசத்தின் பரந்துபட்ட தேசபக்த -முற்போக்கு- ஜனநாயக சத்திகள் தமக்குள் உள்ள வேறுபாடுகளை மறந்து பொது வேலைத்திட்டத்தின் அடிப்படையில் ஐக்கியப்பட்டுப் போராடவேண்டுமென தொடர்ந்த இதழ்களில் வலியுறுத்தி வந்தார். ஐக்கியமும் போராட்டமும் என்ற கோட்பாட்டின் பிரகாரம் நட்புசக்திகளின் சில தவறுகளும் நேசபூர்வமாக அவரால் சுட்டிக் காட்டப்பட்டதுண்டு.

ஏழு ஆண்டுகளின் முன் அவரால் குறிப்பிடப்பட்ட அம்சங்களில் எவையும் தீர்க்கப்படாதது மட்டுமன்றி மென்மேலும் உக்கிரமடைந்து வளர்ந்துவந்தமை வெளிப்படை. அந்தவகையில், அவர் விட்டுச் சென்ற பணியை அவரது சுவடுகளைப் பின்பற்றித் தொடர வேண்டிய கடப்பாடு இன்னமும் உண்டு.

மக்களின் பொது எதிரிக்கு எதிராக வெகுஜனங்களை அணிதிரட்டும் புதிய- ஜனநாயக சக்திகளின் முயற்சிகட்கு தாயகம் தொடர்ந்து கலை இலக்கிய நெறிக்கமைய நின்று பணிபுரியும் என நண்பர் கே. ஏ. சுப்பிரமணியம் நினைவாகப் பிரதிக்ஞை செய்து கொள்கிறோம்.

27-1-90

ஆசிரியர் குழு

அட்டைப் படத்தில்

**நண்பர் கே. ஏ. சுப்பிரமணியம்**

படிப்பகம்

www.padippakam.com

# ஆறும் அலையும்

சுமண்யன்

புதர்கள் பல காடுகள்
சிற்றூர்கள் நகர்கள் - இவையொடு
இன்னும் சொல்லொணுத் தடைகளும்
கண்டு கடந்து அலைந்துவந்த
ஆறு கடலுள் சங்கமிக்கும்!

பொங்கும் கடலலைகள் நுரைமலர்தூவி,
அங்கம் இழந்து - இல்லையெனில்
தங்கம் நிகர்த்த முழுவுடலும்
தாங்கவொணு வதையில் சிதைந்த
வண்ணம் ஆறுகொணரும்
சடலங்களை ஏற்கும்

குமுறும் கடலலை சற்றேயாறும்,
வகையறியாது பேதலித்து - கதைதொடரும்.
விட்டுவிலகி ஒதுங்கி நிற்கும்
மக்களுக்காக மக்கள் மார்க்கம்
மலரும்போது மௌனம் முறியும்
அதுவரை அலையும் ஓய்ந்திருக்கும்

என்றென்றும் ஓர்நிலை இருந்ததில்லை;
வன்முறை கோலோச்சும் - ஒரெல்லைவரை.
கீழொடு மேல்கலந்தொரு நிலையாகும்,
காலம் கனிந்திட
விழித்தெழும் மக்கள் கரங்களில்
அரசதிகாரம் மாறிடும் -

அலையும் ஆறு கடலையடையும்
கலையும் இதுவும் ஒன்று!

www.padippakam.com

சிறுகதை

# கூனன் யுன்யாங்

பா றென்
தமிழில்:
ந. சுரேந்திரன்

கூனன் யுன்யாங் கடந்த நான்கு நாட்களாக அந்த மூன்று ஞானிகளின் மண்டபத்தில், ஒரு வைக்கோல் பாயில் புரண்டு கொண்டிருக்கிறான். அவன் உண்ணவோ, நீர் குடிக்கவோ இல்லை. அதேவேளை அவன் படுக்கையை விட்டு எழும்பவும் இல்லை.

ஆனால் இன்று காலை அவன் கண் விழித்ததும், தனது மனதை திடப்படுத்திக்கொண்டு அவனது சத்தற்ற உடலை நேராக்கிக் கொண்டு கிராமத்தின் மத்தியிலுள்ள குயா சோங்கின் மாளிகையை நோக்கி மலையிலிருந்து இறங்கத் தொடங்கினான்.

எவ்வாறு நமது கூனன் யுன்யாங் அங்கு வசிக்கத் துவங்கினான். இதை விபரிக்க ஒரு கதையையே சொல்லவேண்டி இருக்கும். உண்மை என்னவென்றால் அவனுக்கு வீடு வாசலே கிடையாது. அவனுக்கு எத்தனை வயது இருக்கும் என்று ஒருவருக்கும் தெரியாது. ஆனால் அவனுக்கு 40 வயதுக்கு மேல் இருக்கும் என்று நாம் வைத்துக் கொள்வோம். அவனுக்கு மனைவி குழந்தைகள் கிடையாது. கட்டைப் பிரம்மச்சாரி. எனக்குத் தெரிந்த வரை யுன்யாங் எங்கள் கிராமத்தில் வாழவில்லை. ஆனால் அதற்காக அவன் எங்களுடைய 'மேற்கு நீரோடை'க் கிராமத்தை சேர்ந்தவனில்லை என்று தீர்மானித்து விடாதீர்கள். நாங்கள் இருவரும் 'யுன்' என்ற பரம்பரைப் பெயரை உடையவர்களே. எனக்கு அவன் மூத்த மச்சான் முறை. ஆனால் வயதில் அவன் என் தந்தைக்குச் சமம்.

யுன் யாங்கின் தந்தையார் பெயர் ஜிங்யுன். மூங்கில் நாரில் கைப்பணிப் பொருட்கள் செய்வதில் அவர் ஒரு விற்பன்னர். அவர் தனது இறுதிக் காலத்தில் எங்கள் கிராமத்திற்கு வந்துவிட்டார். அவருக்கு அப்போது 68 வயது இருக்கும். அவர் தனிமையைப் போக்குவதற்கு திருமணமானார். விரும்பி அதை அவர் வாயாலேயே சொல்வதானால் "யார் என்னைக் கிழவன் என்று சொன்னது. நான் மற்றவர்களுக்கு எனது கைப்பணித் திறமையை கற்றுக் கொடுத்தேன். அவர்கள் அதைக் கற்ற பின்பு என்னை விரட்டி விட்டார்கள். நீங்கள் என்னைக் கிழவன் என்கிறீர்கள். ஹா! ஹா! நான் தற்போதும் திருமணம் செய்து



படிப்பகம்

கொள்ள திட்டமிட்டு இருக்கிறேன்''

மக்கள் ஒரு புதினமான விலங்கை ஒத்தவர்கள். பணசக்தி மிக்க, பலம் வாய்ந்த நிலப் பிரபுக்களின் ஆடம்பர திட்டங்களை வரவேற்கிருர்கள்; அதேவேளை சக்தியற்ற ஏழைகளின் சாதாரண அபிலாஷைகளைத் தூற்றுகிருர்கள்.

எனது மச்சான் குயா யுவான் யுன் யாங்கிற்கு ஒரு கலியாணம் ஒழுங்கு செய்திருப்பதாகக் கூறி ஊரவர்களுக்கு முன்னுல் நடத்திய கலாட்டாவால் மனமுடைந்து போன யுன் யாங் தூக்குப் போட்டு இறந்துபோனுர்.

அவர் தூக்குப்போட்டு இறந்ததில் என்ன புதினம் உள்ளது? ஏராளமான ஏழைத் தரித்திர மக்கள் ஒவ்வொரு நாளும் பூமித் தாயின் மடியில் மரிக்கிருர்கள் தானே! ஆனுல் பரம்பரை வழக்கத்தின்படி இறந்தவரின் மகன் துக்க காலத்தில் வந்து துக்கம் அனுட்டிக்க வேண்டுமல்லவா! இவ்வாறுதான் கூனன் யுன்யாங் எங்கள் கிராமத்துக்கு வந்து சேர்ந்தான்.

கூனன் யுன்யாங் எங்கள் கிராமத்துக்கு வந்த பொழுது கந்தல் உடையிலே தான் வந்தான். ஒரு கறுப்பு நிற ட்ரங் பெட்டி, ஒரு கிழிந்த சிறு மெத்தை ஒரு சோடி ஆடைகள், உறுதியான உடற்கட்டு. இதுதான் அவனது சொத்து. வேறு எங்காவது திரும்பிச் செல்லும் நோக்கம் அவனுக்கு இருக்கவில்லை. எங்கள் ஊரிலே குடியேறிவிட்டான்.

''எல்லா விசயங்களும் எவ்வெவ்வாறு நடந்துமுடிய வேண்டுமோ அவ்வாறே நடந்து முடியும்'' இதுதான் யுன்யாங்கின் வாழ்க்கைத் தத்துவம்.

ஆனுல் கூனன் யுன்யாங் வெளியுலகை எப்போதும் ஏசிக் கொண்டே இருப்பான். ''இந்த உலகத்தில் வாழும் மக்களுக்கு இருதயம், அது இருக்கவேண்டிய இடத்தில் இல்லை. ஒவ்வொருவரும் மற்றவனை எப்படி விழுங்கித் தின்னலாம் என்பதிலேயே கண்ணும் கருத்துமாக உள்ளனர்'' என்று கூறுவான்.

தான் இனி எங்கும் வெளியில் போகப் போவதில்லை யுன்யாங் ன்எறு கூறியிருந்தான். ஆகையால் எங்கள் ஊரில் உள்ள மூதாதையரின் கோவில் ஒன்றில் அவன் தங்கிவிட்டான். அவ்வாறு ஊரில் வசிக்கத் துவங்கியதும் தனது வேலைக்குக் கூலியை நிர்ணயித்துக் கொண்டான். ஆகவே ஊர் மக்கள் அவனுக்கு வேலை வழங்கத் துவங்கினர். அவனது கூலி ஏனையோருடைய வேதனத்தைவிட வெகு குறைவானது ஏனையோர் 100 முதல் 200 செப்புக் காசுகள் நாள் வேதனமாக பெற்ற வேளையில் யுன்யாங் தனது கூலியாக 60 செப்புக் காசுகளையே பெற்றுக் கொண்டான்.

அவன் ஊர்வந்து சில வருடங்கள் அவனுக்குப் போதுமான வேலை கிடைத்தது. ஆனால் சில காலத்துக்குப் பின்பு திருடர்களின் கொள்ளை, இயற்கை நாசங்கள், தானியத்திலும் பணத்திலும் செலுத்தவேண்டிய மேலதிக வரிகள் காரணமாக நிலப் பிரபுக்கள் விவசாயத்தை கைவிட்டு வியாபாரத்தில் இறங்கிவிட்டனர். குறைந்த வேலையாட்களே வேலைக்கு அமர்த்தப்பட்டனர். இதனால் யுன்யாங் பசியோடு வாழவேண்டியவன் ஆனான். அவனுக்குப் பசி இருக்கும் போது வேலை ஏதும் கிடைத்தால் வழமையான சாப்பாட்டை விட சிறிது கூடவே சாப்பிடுவான். இதனால் சில நிலப்பிரபுக்கள் யுன்யாங்கின் அகோரப்பசி குறித்து குறைப்பட்டனர். — அவன் சில வேளை ஒரே தடவையில் ஒருவாளி சோற்றை உண்டு விடுவான் ஆகவே அவன் வேலையில் மிச்சம் பிடிக்கும் பணத்துக்கு மேலாக அவனது உணவுச் செலவு அதிகரித்து விடுகின்றது. இதனால் அவனை ஒருவருமே வேலைக்கு அமர்த்த முன்வரவில்லை. அவன் பசியோடு இருக்கவேண்டி வந்தால் அப்படியே இருப்பான். தனது கஷ்டங்களை யாரிடமாவது முறையிடுகின்ற கூட்டத்தைச் சேர்ந்தவனாக அவனில்லை. ''ஒரு மனிதன் ஒரு ஆயுள் வாழ வேண்டியுள்ளது. நீ ஏழையாக இருக்கலாம் ஆனால் நீ நீண்ட காலம் வாழ வேண்டுமென்பது விதியானல் வாழ்ந்துதான் தீர வேண்டும். நீ பணக்காரனாக இருக்கலாம், உனது வாழ்க்கை குறுகியதாக விதிஅமைந்தால் நீ இறக்கத்தான் போகின்றாய். நீ ஏமாற்றி அநியாயமாக உழைத்த பணத்தை எடுத்துக்கொண்டு நரக லோகக் கடவுளிடம் செல்ல முடியாது''

''இது எனது விதி. ஆகவே எனக்குப் பசி ஏற்பட்டாலும் நான் பட்டினி கிடக்கப்போவதில்லை. அதற்காக நான் என்னை கீழ்த்தரமாக நடத்தக் கூடாது. சிலநேரங்களில் என்னால் பசியைத் தாங்கிக் கொள்ள முடிவதில்லை. ஆனால் நீரோடையில் எப்பொழுதும் தூய தண்ணீர் இருக்கவே இருக்கின்றது. ஆகவே வாய் நிறைய அதைப் பருகிவிடுகிறேன். எப்பொழுதும் பச்சைப் பசும்புல் இருக்கவே இருக்கிறது. நான் அவற்றைப் பிடுங்கி உறிஞ்சுகின்றேன். அது எனது பசியை சிறிது நிவர்த்தி செய்கின்றது. ஆனால் எனது இந்தஆயுளில் நான் எனது மனச்சாட்சிக்கு எதிரான எதையும் செய்யவில்லை. எனக்குச் சொந்தமற்ற எந்த உணவிலும் நான் வாய் வைத்ததும் இல்லை. ஏனைய மக்களின் இரத்தத்திலும் வியர்வையிலும் நான் என்னை வளர்த்துக் கொள்ளவில்லை என்பது சொல்லாமலே விளங்கும்.''

ஆனால் பசியோடு இருப்பது வேறு. யுன்யாங்கைப் பொறுத்தவரை வேலையில்லாமல் இருப்பது ''தூக்குமேடைக்குப் போகத் தயாராக இருப்பவனின் மனோநிலையை விட மோசமானது''.

www.padippakam.com

ஒரு நாள் தனிமை அவனை வெகுவாக வருத்தியது. ஆகவேதான் வெளியில் எங்காவது சென்று ஏதாவது செய்ய விரும்பினான். ஆகவே தனது வசிப்பிடத்தை மாற்ற தன்னுள் முடிவு செய்தான்.

உடனடியாக மூன்று ஞானிகள் மண்டபத்துக்குள் தனது இருப்பிடத்தை மாற்றினான். ஆனால் கூனன் யுன்யாங்கின் துரதிர்ஷ்டம் அங்கும் தொடர்ந்தது. நான்கு நாட்கள் தொடர்ந்து பட்டினியோடு இருப்பது நகைப்புக்குரிய விஷயமல்லவே. அடுத்த நாள் திடீரென்று அவனுக்கு ஒரு யுக்தி தோன்றியது. குயா சோங்கின் வீட்டிற்குப் போவதென முடிவு செய்தான். கிராமத்துக்குள் நுழைந்து குயா சோங்கின் வீட்டின் முன்னால் நின்று ''குயா சோங்'' நீ வீட்டில் இருக்கிறாயா?'' என்று சத்தம் போட்டான்.

குயா சோங் மாவட்ட சட்ட அதிகாரியாகும். அவர் வழக்குகள் போடுவதிலும், சட்ட ஆவணங்கள் தயாரிப்பதிலும் ஈடுபட்டிருந்தான். கூனன் யுன்யாங்கின் சத்தத்தைக் கேட்டதும் வழக்கில் சம்பந்தப்பட்ட யாரோ வந்திருக்கிறார்கள் என்று நினைத்து கதவைத் திறந்தான். வாசலில் யுன்யாங்கைக் கண்டதும், அவன் ஒரு வேலைக்கும் வந்திருக்கமாட்டான் என்று உணர்ந்த அவர் சத்தம்போட்டவாறு கதவைப் படாரென்று சாத்திவிட்டு உள்ளே சென்றுவிட்டார்.

அதன் பிறகு கூனன் யுன்யாங் ஒருவர் வீட்டு வாசலையும் உணவு கேட்டு மிதிக்கவில்லை. ஆனால் அவன் எப்படிச் சீவியத்தைக் கொண்டு போனான். எவ்வாறு அவனால் வாழ முடிந்தது என்பது எனக்குத் தெரியாது.

மூன்று ஞானிகள் மண்டபத்தில் இவனருகே சீவித்துவந்த மைத்துனன் குயா யுவானின் கூற்றுப்படி யுன்யாங் ஒருபோதும் வாழ்க்கையில் ஒரு பொருளையும் திருடியதில்லை.

குயாயுவான் கூறினான் ''யுன்யாங் ஒரு புதினமான மனிதன் தான். அவனது மனோவலிமையினை ஒத்த மனிதர் கிராமத்தில் எவருமில்லை. அவன் நன்கு பசித்திருக்கும்போது மரக்கறித் தோட்டத்தினூடாக நடந்து செல்வான். ஆனால் ஒரு காயையும் பறித்து உண்ண மாட்டான். அவனை விறைத்தகட்டை என்று சொல்வதற்கு வேறு என்ன உதாரணம் வேண்டும்''

அதன் பிறகு யுன்யாங் மீது ஒரு திருட்டுக் குற்றம் சாத்தப்பட்டது. அது இவ்வாறு தான் நடந்தது.

இது நடந்த மாதத்தில் ஆசான் என்பவன் மூன்று ஞானிகள் மண்டபத்தில் சீவிக்கத் தொடங்கினான். ஆசான் முன்பு ஒரு நகரத்தில் வரிசேகரிப்பவனாக இருந்தான். சட்ட மீறலுக்காக பதவியிலிருந்து வெளியேற்றப்பட்டவன். இவன் முன்பு



படிப்பகம்

www.padippakam.com

குயா சோங்கிற்கு ஒரு வழக்கில் உதவி செய்தவன். ஆகவே அவன் மேற்கு நீரோடைக் கிராமத்தில் உதவிபெற வந்திருந்தான். ஆகவே குயா சோங், ஆசானை மூன்று ஞானிகள் மண்டபத்தில் வாழ அனுமதித்திருந்தான். அவனுக்கு அன்றாடச் சீவியத்துக்காக இரவில் சட்டிபானை செய்யும் களிமண் சேகரிக்க அனுமதித்திருந்தான்.

அன்று, ஆசான் காலையில் வந்த போது, யுன்யாங்கை அவனது வைக்கோல் படுக்கையில் காணவில்லை. முதலில் அவனுக்கு அது புதிராக இருந்தது. ஆனால் இந்தக் கள்ளனின் தலைக்குள் தன்னிடமிருந்து யாரோ களவெடுக்கின்றான் என்ற கருத்து உருவாகியது. அவன் தனது பணப்பையைத் திறந்து பணத்தை எண்ணினான். அதில் எவ்வளவு வைத்திருந்தான் என்பது ஞாபகத்துக்கு வரவில்லை. அதில் எட்டு யுவான் இருந்தது. ஆனால் தான் கள்ளமாக விற்ற களிமண்ணின் தொகை பத்து யுவான் இருக்க வேண்டும். எட்டா? பத்தா? சிறிது யோசித்தான். ஆனால் யுன்யாங் இன்று காலநேரத்தோடு வெளியில் சென்றிருப்பதைப் பார்க்கையில் தனது பணம் திருடப்பட்டுத்தான் இருக்கவேண்டும். ஆகவே அவன் குயா சோங்கிடம் சென்று யுன்யாங்கின் மீது இந்தத் திருட்டுக் குற்றச்சாட்டைச் சுமத்தினான்.

குயா சோங், ஆசான் விற்கும் களிமண்ணில் தனக்கும் ஒரு கமிஷன் தருவான் என்று நம்பிக் கொண்டிருந்தான். இந்தத் திருட்டு தனக்குக் கிடைக்கும் லாபத்தைக் குறைக்கப் போகின்றது. ஆகவே ஒற்றைக் கண்ணன் யீசெங்கை அனுப்பி விசாரணைக்காக யுன்யாங்கை அழைப்பித்தான்.

''என்ன நடந்தது குயா சோங்! ஏன் இங்கு அழைத்தாய்?''

''கூறு! நீ காசு களவெடுக்கின்றாயா?''

''யாருடைய காசு''

''ஆசானுடைய காசு''

''யார் ஆசான்''

''கூறு! பெறுமதியில்லாத நாயே! நீ களவெடுக்கிறாய்! பிறகு ஒன்றும் தெரியாதது மாதிரி நடிக்கிறாய்? என்ன'' குயாசோங் இதைக் கூறும்போது அவன் கோபம் உச்சிக்கு ஏறிக கொண்டிருந்தது.

''நிறுத்து மச்சான். ஆத்திரத்திலை அறிவை யிழக்காதே! ஆசான் எப்படிப்பட்ட மனிதன் என்பதை யோசி! நான் அவனிடம் உண்மையிலேயே பணத்தை எடுத்திருந்தாலும் அவன் அதை ஒரு வரப்பிரசாதமாக நினைக்கவேண்டும்!'' யுன்யாங் விட்டுக்கொடுக்கவில்லை.

''எனக்கு அதிகம் தெரியாது இருக்கலாம். ஆனால் மச்சான் யுன்யாங் இரும்புபோன்ற முதுகெலும்பு உள்ளவன்'' அரு



படிப்பகம்

www.padippakam.com

கிலிருந்த மைத்துனன் குயாயுவான் பேசத் துவங்கினன்.

"அவன் திருடுவதற்கான எந்த சாத்தியக் கூறும் இல்லை. என்னுடன் பல வருடங்கள் வாழ்ந்திருக்கிறான். தனது சுங்கானைப் பற்ற வைப்பதற்காக எனது அடுப்பில் நெருப்புக்கூட அவன் எடுத்ததில்லை. அப்படிப் பட்ட விறைத்த கட்டை அவன். உண்மையிலேயே உன்னிடம் எவ்வளவு பணம் இருந்தது ஆசான்'? குயாயுவான் ஆசானிடம் கேட்டான்.

"குயாயுவான் அவர்களே! பிழையான கருத்தைக் கொள்ளாதீர்கள். நிச்சயமாக எனக்கு ஞாபகம் இருக்கிறது. என்னிடம் 10 யுவான் இருந்தது. தற்போது யுவான் இல்லை. அங்கு என்னையும் அவனையும் தவிர வேறு ஒருவரும் சீவிக்கவில்லை. அப்படியானல் என்னுடைய 2 யுவான் யார் எடுத்தது?" ஆசான் குறுக்கிட்டு தனது நிலைப் பாட்டைக் கூறினன்.

"யார் திருடியது" யுன்யாங் ஆசானை கேலியான கோபத்தோடு பார்த்தான் பின்பு குயா சோங் பக்கம் பார்வையைத் திருப்பிக் கூறலானன.

"மச்சான் குயா சோங்! உனக்கு ஒன்று சொல்லுவேன். நான் களவெடுத்தேன் என்று நீ கூறுவதுபற்றி நான் கவலைப்படவில்லை. நாம் சொல்லுவோம் நான்தான் திருடினேன் என்று. ஆனல் உன்னிடம் ஒரு கேள்வி கேட்கிறேன். யார் என்னுடைய பணத்தைக் களவெடுத்தது! நான் ஒரு சதத்துக்குப் பிரயோசனம் இல்லாதவனக இருக்கலாம். ஆனல் நான் உன்னைக்காட்டிலும் சில வருடங்கள் கூடுதலாக வாழ்ந்திருக்கிறேன். 7 அல்லது 8 வயதிலிருந்து நான் மாடுகளை பராமரித்திருக்கிறேன். கூலியாளாக இட்ட தொட்ட வேலைகளைச் செய்திருக்கிறேன். மலைகளில் ஏறி வேலை செய்திருக்கிறேன். அறுவடை காலங்களில் சமய கூலியாளாக உழைத்திருக்கிறேன். நான் நாற்பது அலலது ஐம்பது வருடம் சீவித்திருக்கின்றேன். கடந்த சில வருடங்களில் எனக்கு வயதாவதை அவதானித்த மக்கள் எனக்கு வேலை வாய்ப்பு அளிக்கவில்லை. எப்படி இருந்தாலும் 20 வருடங்களுக்கு மேலாக வேலை செய்திருக்கிறேன். ஒரு வருடத்திற்கு ஒரு பத்து யுவான் கணக்குவைத்துப் பார்த்தாலும் தற்சமயம் என்னிடம் 200 யுவானுக்கு மேலாக இருக்க வேண்டும், என்னுடைய இந்த 200 யுவானை யார் திருடினர்கள் என்று எனக்குத் தெரியாது. கலியாணம் முடிப்பதற்கென்றே, பிள்ளைகளைப் பெறுவதற்கென்றே ஒரே நேரத்தில் நான் 100 அல்லது 200 யுவான் செலவழித்தது கிடையாது. இந்த நிமிடம்வரை எனது சுயகாலிலேயே நான் வாழ்ந்து கொண்டிருக்கிறேன். உன்னைப் போல அல்ல — நீ இளைஞன். உனக்கு ஏராளமான



படிப்பகம்

www.padippakam.com

## ★ புரட்சிகரமான நிகழ்ச்சி...

இருநூறு ஆண்டுகளுக்கு முன் நிகழ்ந்த ஃபிறெஞ்சுப் புரட்சியின் முக்கிய இயல்பு அதன் பொதுமைப் பண்பு. மனித நிலைமைகள் நாட்டுக்கு நாடு, கண்டத்துக்குக் கண்டம் வேறுபடலாம். ஆனல், சில உரிமைகள் எல்லோருக்கும் பொதுவானவை; எல்லாக் காலத்துக்கும் பொதுவானவை; எல்லா இடங்களுக்கும் பொதுவானவை.

அடிமை முறை ஒழிப்பு ஒ சிறிய விடயமல்ல. ஆரோ சில அடிமைகளின் இழிந்த நிலமைக்கு முடிவு கட்டப்பட்டது என்ற அளவில் அது நின்றுவிடவில்லை. மனிதகுலம் முழுவதற்கும் உரிய மகத்தான மாற்றம் அது.

இதனுலேதான் 1789 இல் ஃபிரான்சில் நடைபெற்ற அந்த நிகழ்ச்சி புரட்சிகரமானது என்று கூறுகிறேம்.

ஆதாரம்: யுனெஸ்கோ கூறியர்

பிள்ளைகள் இருக்கிறுர்கள். அது ஒரு விலை கூடிய சுமை. நான் செய்யும் ஒரே செலவு சிறிது வைன் குடிப்பதுதான். சூதாட்டத்தில் நான் பணம் இழந்ததில்லை. எப்படி இருப்பினும் 200 அல்லது 300 யுவான் என்னிடம் சேமிப்பாக இருக்கவேண்டும். ஆனல் எனது பெயரில் ஒரு சதமும் இல்லை. என்னிடம் எஞ்சி இருப்பதெல்லாம் எனது உடலை மூடிக் கொள்வதற்காக உள்ள ஒரு கூடை கிழிந்த பஞ்சு மெத்தையும் ஆடையும்தான். நான் எப்படி இவ்வாறு தாழ்வான நிலைக்கு வந்தேன்? எனது பணத்தை ஒரு கடவுளும் எடுத்துக்கொள்ளவில்லை என்பதையும் அவர்கள் அப்படிக் களவெடுப்பவர்கள் அல்ல என்பதையும் நீ அறிவாய். எனது இனிய நண்பர்களான எலிகள் எனது உடைமைகளை முகர்ந்து பார்க்குமே தவிர என்னிடமிருந்து எதையும் எடுத்ததில்லை. அவர்களால் எனது பணத்தை எடுக்க முடியவில்லை. ஆசானுக்கு உதவிபுரியவிழையும் எனது அன்பு மைத்துனனே! என்னுடைய வழக்கின் அடியை அலசி ஆராய்ந்து பார். எனக்கு அதற்கான பதிலைச் சொல்வாயானல் நான் மிகுந்த சாந்தியுடன் சாவை அணைப்பேன்.



படிப்பகம்

www.padippakam.com

கடல் மடை திறந்த வெள்ளம்போல கூனன் யுன்யாங்கின் வாயிலிருந்து வந்த வார்த்தைகள் அங்கிருந்த அனைவரையும் பேச்சுமூச்சற்றதாக்கியது. அவன் குடித்திருந்த வைன் அவனை அவ்வாறு பேசவைத்திருக்க வேண்டும் — அவ்வாறுதான் அவர்கள் நினைத்தார்கள். குயா சோங் கோபவெறிக்கு உள்ளாகுன். அவனது உத்தரவை அடுத்து பலபேர் சேர்ந்து யுன்யாங்கின் கைகளை அவன் முதுகுக்குப் பின்புறம் கட்டினர்கள்.

அடுத்த நாள் மாவட்டக் கமிஷனருக்கு குயாசோங் எழுதிய சடிதத்தில் கூனன் யுன்யாங்கின் 10 பாரதூரமான திருட்டுக்களில் ஈடுபட்டிருந்ததாகவும் ஆசான் தான் இந்தத் திருட்டைக் கண்டு பிடித்ததாகவும் எழுதி யுன்யாங்கை மாவட்ட நீதிமன்றத்துக்கு அனுப்பி வைத்தான். இதன் மூலம் ஆசான் தனது பழைய வேலையைத் திரும்பப் பெற்றுக் கொண்டான். யுன்யாங்கிற்கு ஒரு வருடத்துக்கு மேலான சிறைவாசம் கிடைத்தது.

சாகடிக்கப்பட முடியாத யுன்யாங் சிறையை விட்டு வெளியே வந்தபோது சாகடிக்கப்பட முடியாத அவனது உடலில் முன்பிருந்ததைக் காட்டிலும் சதை பிடித்திருந்தது. தற்போது அவன் நன்கு சாப்பிடும் பழக்கத்தைக் கொண்டிருந்தான். அவனுல் ஒரு நேரச் சாப்பாட்டையும் விட்டுவிட முடியாது.

ஆகவே தவிர்க்கமுடியாத உணவிற்காகப் பிச்சை எடுக்கும் தொழிலை யுன்யாங் ஏற்றுக் கொண்டான். ஆனல் அவன் எங்களுடைய குடும்பப்பரம்பரை சேர்ந்தவனுதலால் பிச்சை எடுக்க அவன் எங்கள் மேற்கு நீரோடைக் கிராமத்துக்கு வருவதில்லை. அப்படிப்பட்ட ஒரு மனிதன் கூனன் யுன்யாங். அவனுக்கு நல்வாழ்வு கிடைக்க வேண்டுமென்று எப்படி நான் வாழ்த்தாமல் இருக்கமுடியும்.

மச்சான் யுன்யாங் உனக்கு உனது வாழ்க்கைப் பாதை மிகவும் குறுகியதாக இருந்தது. ஆனுல் நீ உண்மை வெளிச்சம் உதயமாவதை உணர்ந்துகொண்டாய். உனது பிச்சை எடுக்கும் தொழில் உன்னை எங்கு கொண்டு சென்றது என்பதை நானறியேன்? நான் வீடுவந்து நீ எப்படி வாழ்ந்தாப் என்பதை அறிந்தபோது, நீ குயாசோங்குக்குக் கொடுத்த அந்த இதய சுத்தமான சொற் பொழிவை ஊசன் என்னிடம் கூறியபோது நான் சிறிது ஞானம் பெற்றேன். உண்மையின் வெளிச்சம் உதயமாவதை நானும் கண்டதுபோல் உணர்ந்தேன். ஆகவே இது நல்ல நேரம். நீயும் நானும் நாம் எல்லோரும் ஒரே பாதையில் ஒருங்கிணைவோம். உனக்கு எல்லா நல்வாழ்த்துக்களையும் தெரிவிக்க இதை எழுதுகிறேன். வருக! நாம் எல்லோரும் ஒரே பாதையில் இணைவோம்.



படிப்பகம்

www.padippakam.com

பேராசிரியர் சி. தில்லைநாதன்

தேசிய கலை இலக்கியப் பேரவை நடாத்திவரும் பேராசிரியர் க. கைலாசபதியின் 3-வது நினைவு ஆய்வரங்கில் சமர்ப்பிக்கப்பட்ட ஆய்வுக் கட்டுரை

# எழுத்தாளர்கள் பத்திரிகையாளர்களிடையே கைலாசபதி

எழுத்தாளர்கள் பத்திரிகையாளர்களிடையே கைலாசபதி என்பது பற்றி யான் அறிந்தவாறும் அர்த்தம் கொண்டவாறும் மட்டுமன்றி, கைலாசபதியை நன்கு அறிந்த எழுத்தாளர்கள், பத்திரிகை யாளர்களின் கணிப்புக்களினூடாகவும் நோக்குதல் கைலாசின் ஆற்றலுக்கும் ஆளுமைக்கும் கூடிய நியாயம் வழங்குவதாய் இருக்கும் என்று கருதியதால், பலருடன் தொடர்பு கொண்டேன். அவர்களுட் பிரசித்தி பெற்ற எழுத்தாளர்கள் பத்திரிகையாளர்களாக மட்டுமன்றிக் கைலாசைப்பற்றி அபிப்பிராயம் கூற மிகவும் அருகதையுடையவர்களாகவும் விளங்கும் இளங்கீரன், செ. கணேசலிங்கம், நந்தி (பேராசிரியர் சி. சிவஞானசுந்தரம்), எஸ். அகஸ்தியர், இ. முருகையன், என். கே. ரகுநாதன், கே. எஸ். சிவகுமாரன், சபா (முன்னர் தினகரனிலும் இப்போது டெய்லி நியூசிலும் செய்தி நிருபர்த. சபாரத்தினம்), நடா (முன்னர் தினகரன் செய்தி நிருபர் பின்னர் பாராளுமன்ற ஹன்சாட் சிரேஷ்ட அறிக்கையாளர் செல்லப்பா நடராசா), யூனூஸ் (முன்பு தினகரன் இன்று 'அத்த' பத்திரிகை அரசியற் கேலிச்சித்திரகாரர் ஜிப்ரி யூனூஸ்), செ. யோகராசா, சாரல் நாடன், சி. கா. செந்திவேல் ஆகியோர் என் வேண்டுதலை எதிர்கொண்டவிதம் உற்சாகமளிப்பதாயிற்று.



படிப்பகம்

www.padippakam.com

கைலாஸ் இளம் பிராயம் தொட்டே கலை, இலக்கியம் சம்பந்தமான ஆங்கில, தமிழ் நூல்களைப் படிப்பதில் மிகுந்த ஆர்வம் கொண்டவராகக் காணப்பட்டார் என்பதை முருகையன், நந்தி இளங்கீரன் முதலான பலர் குறிப்பிட்டுள்ளனர். ஆனல், அந்த ஆர்வம் வெறும் பொழுதுபோக்கினையோ சுயதிருப்தியினையோ நாடியதாக இருக்கவில்லை. கைலாசின் ஆசிரியரான மு. கார்த்திகேசன் மாஸ்டர் ஒருதடவை நகைச்சுவையுடன் இவ்வாறு கூறியதாக எஸ். அகஸ்தியர் நினைவுகூருகின்றார்.

''எனது மாணவர்களிற் பலர் மேல்லோகம் செல்வதற்காகச் சுளுவான வழியைக் கண்டுபிடித்திருக்கிறார்கள். அவர்கள் கரங்களில் தேவாரம் திருவாசகம் பைபிள் இருக்கும். அவர்களில் மாறுபட்ட வலு சுட்டியான ஒரு மாணவன் மானிடவியல் சமூக விஞ்ஞானப் புத்தகங்களை வைத்துக் கொண்டு தடுமாறினன். அவன் புரியும்படியாக விளக்கி வைத்தேன். பிறகு அவன் பூலோகத்தைப் பார்க்கத் தலைப்பட்டு விட்டான். கூடவே கம்யூனிஸ சித்தாந்தவாதியானன். அவர்கள் வானம் பார்த்த பூலோக வாசியானர்கள். இவனே பூலோகத்தைப் பார்த்த சமூக விஞ்ஞானியாகிறன். அந்தமாணவன்தான் கைலாசபதி.''

கல்வியைப் பொறுத்தவரையில் தனிப்பட்ட முறையில் அதனை ஈட்டிப் பெருக்குவதிலும் அதன வழி உயர்நிலைகளை எய்துவதிலும் கைலாஸ் குறியாக இருக்கவில்லை. அவ்று பொது மக்களிடைப் பிரபல்யம் பெற வாய்ப்பாக அமைந்த வள்ளுவன், கம்பன், சேக்கிழார், கச்சியப்பர் முதலான புலவர்களுள் ஒருவரையோ அல்லது சைவமும் தமிழும், பகுத்தறிவு, தமிழ்ப் பாதுகாப்பு முதலான பெயர்களில் நடைபெற்ற இயக்கங்களுள் ஒன்றினையோ பற்றிக்கொண்டு பிரசித்தி பெறக் கைலாஸ் முனையவில்லை. மனித வாழ்வோட்டங்களைப் புரிந்துகொள்வதிலும், புரிந்தவற்றைப் பிறரோடு பகிர்ந்து கொள்வதிலும், ஏனையவர்களிடம் பெறும் அனுபவங்களின் அடிப்படையில் தன் பார்வையை விசாலப்படுத்திக் கொள்வதிலும் துடிப்பு மிக்கவராகக் கைலாஸ் விளங்கினர். இயக்கரீதியாக இணைந்து செயற்படும் தன்மை அவரிடம் இளமை முதற் காணப்பட்டது. அந்தவகையில் ஓர் இலக்கிய ஆர்வலராக இருந்து பத்திரிகையாசிரியராகவும் தமிழ்ப் பேராசிரியராகவும் ஒரு பல்கலைக்கழக வளாகத் தலைவராகவும் உயர்ந்த காலங்களிலும் எழுத்தாளர் பத்திரிகையாளர்களுடன் அவர் கொண்ட உறவு இறுகியதே தவிரத் தளர்ந்துவிடவில்லை.

1953 ல் பதுளையில் இருந்த ஒரு கல்லூரி நண்பரான சிங்காரம் என்பவருக்குக் கைலாஸ் எழுதிய இருபது பக்கங்களுக்கு மேற்



படிப்பகம்

www.padippakam.com

பட்ட ஒரு கடிதத்தைப்பற்றி என். கே. ரகுநாதன் குறிப்பிடு கிருர்:

''சொந்த விவகாரங்கள் எதுவுமில்லே. படித்த இலக்கியப் புத்தகங்களிலிருந்து குறிப்புகள், விசேட ரசனேகள், பல புத்த கங்களேப் பற்றி அறிமுகக் குறிப்புகள். ஆங்கில நூல்கள் உட்பட சிங்காரம் சொல்லுவார்: நண்பர்களுடன் பேசிக்கொண்டிருந்து விட்டு, விரைவில் முடித்துக்கொண்டு ஏதாவதொரு குறைப்புத்த கத்தைப் படிக்க ஓடிவிடுவாராம். கடிதங்களிலும் அந்தப் புத்த கம் கிடைத்துள்ளது; இந்தப் புத்தகம் வாங்கவேண்டும்; இதைப் படிக்க வேண்டும்; படித்தபின் அதையிட்டு எழுது கிறேன் - இப்படியெல்லாம். பிற்கால இலக்கிய ஆதர்ஸங் களுக்கு அப்போது அடிகோலினுர் போல் தெரிகிறது.''

இவ்வாறு, நண்பர்களோடும் மாணவர்களோடும் தமது அபிப் பிராயங்களே பகிர்ந்து கொள்ளும், அவர்களுடைய முயற்சிகள் சம் பந்தமாகக் கருத்துரைத்து உற்சாகமளிக்கும் ஒரு கடிதவழித் தொடர்பினேக் கைலாஸ் கடைசிவரை கைவிடவில்லே.

ஆரம்பத்தில் அவர் சிறுகதை, கவிதை, நாடகம் முதலிய துறைகளிலும் முயன்ருர். ஐம்பதுகளின் தொடக்கத்தில் ஆங் கிலத்தைத் தழுவிக் கைலாஸ் எழுதிய 'திறந்த கல்லறை' என்ற வானெலி நாடகப் பிரதி சிறப்பாயமைந்த தென்றும் அந்நாடகத் தில் தானும் நடித்ததாகவும் நந்தி குறிப்பிடுகிருர். பேராதனேப் பல்கலேக்கழகத்தில் பயின்ற காலத்தில் பேராசிரியர் க. கணபதிப் பிள்ளே எழுதிய சில நாடகங்களில் கைலாஸ் நடித்ததுண்டு. ஆயி னும் இலக்கியத் திறனுய்வு, வரலாற்றுத் துறைகளிலேயே பின் னர் கைலாஸ் தம்மை ஈடுபடுத்திக் கொண்டார்.

பல்கலேக் கழகத்திலிருந்து தமிழ்ச் சிறப்புப் பட்டதாரியாக அவர் முதல் வகுப்பில் சித்தியெய்திய பின்னர் அன்று உயர்வாக மதிக்கப்பட்ட அரசநிர்வாகப்பதவியொன்றினேத் தேடியிருக்கவோ அல்லது உயிர்கல்வி ஆராய்ச்சித் துறையில், இந்நாட்டிலோ வெளிநாடு சென்ருே மேலுக்கு வந்திருக்கவோ கூடும். ஆனல் கைலாஸ் அவ்வாறு செய்யாது பத்திரிகைத் துறையுடபுகுந்தார்: அதனே வருவாய்க்கு வழியாக அன்றி, அதன் வாய்ப்புக்களே உகந்தவாறு பயன்படுத்துவதில் கைலாஸ் குறியாயிருந்தமை தெளிவாகும்.

கைலாஸ் பத்திரிகைத்துறையுட் புகுந்த காலம் மேலேத்தேய நாகரிகமும் ஆங்கில மொழியும் தம் ஆதிக்கத்தைஇழக்கத்தொடங்



படிப்பகம்

www.padippakam.com

கிய காலம். பொருளாதார அரசியல் துறைகளில் மட்டுமன்றிப் பண்பாட்டுத் துறையிலும் அந்நிய ஆதிக்கம் தளரத்தொடங்கிய காலம். சிங்களம் மட்டும் அரசகரும மொழியாக்கப்பட்டதன் விளைவாகத் தமிழ் பேசும் மக்கள் இந்நாட்டில் தங்கள் இருப்பு, வரலாறு, வருங்காலம், தனித்துவம் முதலானவை குறித்து உத்வேகத்துடன் உணர, சிந்திக்கத் தலைப்பட்ட காலம். தமிழ் மொழி உபயோகச் சட்டம் நிறைவேற்றப்பட்டமை, சுதேச மொழியின் முக்கியத்துவம் பெறத் தொடங்கியமை, புதிதாக உருவான கலாசார அமைச்சுத் தமிழ்க் கலைகளின் வளர்ச்சிக்கும் ஊக்கமளித்தமை, அதுவரை ஆங்கிலப் பத்திரிகைகளே பெற்றிருந்த அரசியற் செல்வாக்கையும் முக்கியத்துவத்தையும் பொதுமக்களைப் பரவலாகச் சென்றடைந்த சிங்கள தமிழ்ப் பத்திரிகைகளும் பெறத்தக்க வாய்ப்புத் தோன்றியமை, வெளிநாட்டுச் செலவாணிக் கட்டுப்பாடுகளின் காரணமாக இந்திய எழுத்தாளர்களுக்குப் பணம் அனுப்பும் வசதி கட்டுப்படுத்தப் பட்டமை - இவையாவும் கவனத்திற் கொள்ளப்பட வேண்டியவை.

தினகரன் பத்திரிகையைப் பொறுத்தவரையில் 2000த்தில் தொடங்கிய அதன் விற்பனை 12,000 வரை பெருகியிருந்தது. இன்னொரு இந்தியப் பத்திரிகை எனத்தோன்றுமாறு வெளிவந்த அதன் ஆசிரியராக வே. க. ப. நாதன் நியமிக்கப்பட்டதையொட்டிச் சோமசுந்தரப்புலவர், பேராசிரியர் க. கணபதிப்பிள்ளை, பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை, புலவர்மணி பெரியதம்பிப் பிள்ளை சோ. இளமுருகனார், எஃப். எக்ஸ். சி. நடராசா முதலானோரும் அவ்வப்போது எழுதலாயினர். ஆயினும், திருச்சி ரசூல் மாயாவி, எல்லார்வி, வாசவன், கே. ஆர். பாலு, எண்சாத்திர மேதை சேதுராமன் ஆகியோரின் எழுத்துகளே நிறைந்து காணப்பட்டன. இந்திய எழுத்தாளருக்கும் இலக்கியப் போக்குக்களுக்கும் பிரசித்தி கிடைத்தது. இந்திய நூல்களுக்கே மதிப்புரைகளும் எழுதப்பட்டன.

பொதுவாக இந்திய ஆக்கங்களுக்கேற்ற ஒரு சந்தையாக இலங்கை இருந்ததேயன்றித் தமிழ் எழுத்தாளரும் புத்தகங்களும் தோன்ற வாய்ப்பான ஒரு நாடாக அது இருக்கவில்லை. 'நாவல் கதை அதெல்லாம் இஞ்சத்தையாருக்குச் சரிவராது' என்ற ஒரு மனநிலை நிலவியது.

அக்காலத்தில் தினகரன் பத்திரிகையில் சேர்ந்த கைலாஸ் 1959 ல் அதன் பிரதம ஆசிரியரானார். பொதுமக்கள் அபிப்பிராயத்தை உருவாக்குவது பத்திரிகை என்பர். சிறந்த ஒரு பத்



படிப்பகம்

www.padippakam.com

திரிகையாளனுல் உயிரிலாச் செய்திகளுக்கு உயிர்தரவும் உதாசீனம் செய்யப்படுவதன் பால் நாட்டத்தினை வளர்க்கவும் இயலும். அக்காலத்தின் போக்கையும் பத்திரிகை மூலம் தனக்குக் கிடைத்த வாய்ப்பெல்லைகளையும் செவ்வனே புரிந்துகொண்டமையும், எதை எவ்வாறு யார்மூலம் செய்யலாமென்பதைத் தீர்மானித்து ஒழுங்குபடுத்தியதிறமையும் கைலாஸ் பத்திரிகைத் துறையில் பெற்ற வெற்றிக்குப் பெரிதும் காரணமாயினவெனலாம். தினகரனின் செய்திகள், கட்டுரைகள், கேலிச்சித்திரங்கள், புனைகதைகள் கவிதைகள் யாவும் மெச்சத்தக்க |வகையில் அமைய அவர்பாடுபட்டார்.

தன்னேடு பத்திரிகையிற் பணியாற்றிய பலரையும் அணைத்துக் கொண்ட, அவர்களுக்கு ஆர்வமூட்டிய, அவர்தம் திறமைகளைச் சரியாக இனங்கண்டு பயன்படுத்திய அல்லது ஆற்றலை வெளியிடச் சந்தர்ப்பம் அளித்த கைலாசின் செயற்றிறன் பலராலும் பாராட்டப் படுகிறது. தன்கீழ்ப் பணியாற்றியவர்களோடு அடிக்கடி கலந்தாலோசித்தமை, கூட்டுமுயற்சியில் பங்காளிகள் என்ற உணர்வை ஒவ்வொருவருக்கும் ஏற்படுத்தியது.

தனது வேலை மதிக்கப்படுகிறது என்ற உணர்வைத் தனக்கு கீழே வேலைசெய்த ஒவ்வொரு பத்திரிகையாளர் மனதிலும் கைலாஸ் தோன்றச் செய்ததனுல் எல்லோரும் மும்முரமாக வேலைசெய்தனர் என்று அன்று தினகரன் செய்தி நிருபராய் விளங்கிய சபா கூறுகிருர். கைலாஸ் காலத்துக்கு முன் பரபரப்பானசெய்திகளையோ சுயமான கட்டுரைகளையோ அங்கு பணியாற்றியவர்கள் எழுதியபோது அவர்கள் பெயர்களைப் பிரசுரிப்பது அனுமதிக்கப்படவில்லை என்றும் அதனுல் அவர்கள் திறமைகள் இருட்டடிப்புச் செய்யப்பட்டன என்றும் நடா கூறுகிருர். திறமைகளை இனங்கண்டு அவர்களுக்குக் கைலாஸ் ஆக்கமும் ஊக்கமும் அளிக்கத் தொடங்கிய பின் பத்திரிகையாளருக்கு உற்சாகமும் மனநிறைவும் தன்னம்பிக்கையும் மட்டுமன்றி வெளியுலகிற் பிரபல்யமும் ஏற்பட்டதை நடா முதலான பத்திரிகையாளர் பலரும் சிறப்பாகக் குறிப்பிடுகின்றனர்.

நன்ருக வேலை செய்தவர்களுக்கு சம்பளஉயர்வுகளும் பதவியுயர்வுகளும் பெற்றுத் தரும் விடயத்திலும் கைலாஸ் தயக்கமின்றி உறுதியுடன் நின்றமையினைச் சபா முதலான பலர் குறிப்பிடுவர். பத்திரிகைத் துறையில் ஒரு பாரிய பிரச்சினை முக்கியமான செய்திகள் விமர்சனங்கள் சம்பந்தமாகச் செல்வாக்குள்ளவர்கள் சீற்றமடைவதாகும். அவ்வாறு சீற்றம் கொள்பவர்கள் மேலிடத்துக்குப் புகார் செய்யும் போது சாதாரண பத்திரிகையாளரைப் பாதுகாக்கத் தன்னம்பிக்கையும் ஆளுமையும் ஆற்றலும் வாய்ந்த ஆசிரியர்



படிப்பகம்

www.padippakam.com

களால்தான் முடியும். அப்போது தான் எழுத்தாளர்கள் அச்சமின்றிச் சுதந்திரமாக எழுதவியலும். தங்களுக்குப் பிரச்சினைகள் தோன்றியபோது கைலாஸ் பொறுப்பேற்றுப் பாதுகாப்பளித்த சந்தர்ப்பங்களைச் சபா குறிப்பிட்டுள்ளார்.

அன்று தினகரனில் அரசியல் கேலிச் சித்திரங்களை வரைந்தவரான யூனூஸ், கைலாசின் கீழ்ப் பணி யாற்றிய மையினைத் தனக்குக் கிடைத்ததொரு பேருகக் கருதுவதாகக் குறிப்பிடுகிறார். கேலிச் சித்திரங்கள் தீட்டுவதற்குக் கைலாஸ் தமக்குச் சிலவேளைகளில் ஆலோசனை வழங்கியதாகவும், தமது சித்திரங்களை அவர் நயந்தவிதம் தமக்கு உற்சாகம் அளித்ததாகவும் யூனூஸ் கூறுகிறார் அவ்வாறு ஆக்கமொன்றை ஆக்கியவர் உற்சாகப்படும் வண்ணம் நயப்பதும் இலேசிற் கைவரத்தக்கதன்று. அதற்கு ஆக்கத்தின் உள்ளார்ந்த அர்த்தங்களை விளக்கிக் கொள்ளும் வல்லமை வேண்டும். திறனை இனங்கண்டு பயன்படுத்தும் தன்மைக்கு உதாரணமாக 'உஸ்ஸ்' என்றதலைப்பிலான அரட்டைப்பத்தியை (Gossip Column) எழுதும் பொறுப்பினைத் தனக்கும்'புதன்மலர்' பொறுப்பைச் செய்னுல் ஹுஸைனுக்கும் தந்தமையைச் சபா குறிப்பிடுகிறார். அவை இரண்டும் கைலாசின் எண்ணத்தில் உருவாகி மிகவும் பிரசித்தி பெற்றவையாகும்.

தினகரனுக்குப் பொறுப்பாய் இருந்தபோது கைலாஸ் எழுத்தாளர்களை அடிக்கடி சந்தித்து ஆலோசனைகளையும் விவாதங்களையும் நடத்தியதுடன் பத்திரிகைக்கான பலவிடையங்களைத் திட்டமிட்டார். அத்தகைய கலந்தாலோசனைகளிற் பங்குபற்றியவர்களுள் இளங்கீரன், கா. சிவத்தம்பி, பிரேம்ஜீ, எச். எம். பி. முஹியதீன், பி. ராமநாதன், .சில்லையூர் செல்வராசன், இ. முருகையன், கே. கணேஷ், அ. ந. கந்தசாமி முஹம்மது சமீம் முதலியோர் குறிப்பிடத்தக்கவர்களாகலாம். இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கமும் கைலாசின் நடவடிக்கைகளுக்குப் பக்கபலமாக அமைந்தது.

மிகக்குறுகிய காலத்தில் கைலாஸ் தன்னோடு ஒத்த கருத்துடையவர்களுடன் மட்டுமின்றி ஏனைய எழுத்தாளர்களுடனும் நேசபூர்வமான தொடர்பினை வளர்த்துக்கொண்டார். கலந்தாலோசனைகளிற் பங்குபற்றியவர்கள் என்று மேலே குறிப்பிடப்பட்டவர்களோடு வரதர், வ. அ. இராசரத்தினம், நந்தி, கனக செந்திநாதன், சிற்பி, தேவன், அ முத்துலிங்கம், உதயணன், கச்சாயில் இரத்தினம், மஹாகவி, நீலாவணன், நாவற்குழியூர் நடராசா, செ. கணேசலிங்கன், என்.கே ரகுநாதன், கே. டானியல் எஸ். பொன்னுத்துரை. டொமினிக் ஜீவா, பெனடிக்ற் பாலன்



படிப்பகம்

www.padippakam.com

இ. நாகராசன். யாழ்நங்கை, அ. ஸ. அப்துல் ஸமது, காவலூரர் இராசதுரை, குறமகள், ஈழத்துச் சோமு நீர்வை பொன்னையன் ஏ. இக்பால், எஃப். எக்ஸ் சி. நடராசா முதலியோரும் தினகரனில் எழுதலானார்கள்.

பல புதிய அம்சங்களும் பரிசோதனைகளும். தினகரனில் இடம் பெற்றன. வாசகர்கள் பங்கெடுக்கக்கூடிய வகையில் திங்கட்கிழமைகளில் திங்கள் விருந்தும் புதன் கிழமைகளில் புதன் மலரும். வெள்ளிக் கிழமைகளில் முஸ்லிம் மஞ்சரியும் சனிக் கிழமைகளில் மாணவர் உலகமும் இடம் பெற்றன. சவாரித்தம்பர், சித்திரகானம் ஆகிய கேலிச் சித்திரங்களும் தினகரனைப் பிரபலப்படுத்துவனவாயின. அவற்றை வரைந்த 'சிரித்திரன்' 'சிவஞானசுந்தரம் தமக்குப் பலவேளைகளில் கைலாஸ் வழங்கிய பாராட்டுக்களையும் ஆலோசனைகளையும் குறித்துப் பலமுறை விதந்துரைத்ததுண்டு.

ஞாயிறு தினகரன் இலக்கிய முக்கியத்துவம் பெறுவதாயிற்று, ஐந்து எழுத்தாளர்கள் ஒவ்வொரு அதிகாரமாக எழுதிய 'மத்தாப்பூ என்ற நாவல் வெளியிடப்பட்டது. பலபேர் இப்படி ஒரு காரியத்தில் முனையும்போது தொடக்குவது சுலபமாயினும் முடிப்பது சிரமமாகலாம். வரதரால் ஆவலைத் தூண்டும் வகையில் தொடக்கப்பட்ட மத்தாப்பூ இடையில் தறிதப்பிவிட, எப்படி அதை முடிக்கப் போகிறார்களோ என்று வாசகர் அங்கலாய்த்ததும் என். கே. ரகுநாதன் அதனைக் கெட்டித்தனமாக முடித்துவைத்ததும் ஞாபகம். 'தலைவர்கள் வாழ்க மாதோ' என்ற தலைப்பில் தான்தோன்றிக் கவிராயர் (சில்லையூர் செல்வராசன்) எழுதிய கவிதைகள் அக்கால அரசியற் போக்கை அங்கதச் சுவையுடன் சித்திரித்தன. 'நான் விரும்பும் நாவலாசிரியர்' என்ற தலைப்பில் உலகப்பிரசித்தி பெற்ற நாவலாசிரியர் சிலர்பற்றி எமது எழுத்தாளர் எழுதினர். எழுத்தாளர் அறிமுகம் என்ற மகுடத்தில் வாரம் தோறும் எழுத்தாளர் அறிமுகம் செய்யப்பட்டனர். சிறுகதைத் துறையில் இலங்கை எழுத்தாளர் இந்திய எழுத்தாளருக்குப் பத்து வருடங்கள் பின் தங்கியிருப்பதாகப் பகீரதன் பேசியமை குறித்துத் தினகரனில் நிகழ்ந்தசர்ச்சைகள் இந்நாட்டு இலக்கிய முயற்சிகளைத் தூண்டுவனவாயின.

பேராசிரியர்கள் சி. ஜே. எலியசர், ஏ. வி. மயில்வாகனம் ஆகியோரின் விஞ்ஞானக் கட்டுரைகள் தினகரனில் 'வெளிவந்தன. நாட்டின் மூலை முடுக்குகளில் நடந்த இலக்கியக் கூட்டங்களுக்கு அதுவரை இல்லாத முக்கியத்துவம் தரப்பட்டது. எழுத்தாளரின் திறமைகளை அறிந்து தக்கவகையில் அவர்களைப் பயன்படுத்திய கைலாஸ் அவர்களுக்கு உரிய கௌரவத்தினையும் அளித்தார். எழுத்தாளர்களுக்குச் சன்மானம் வழங்கும் முறை சரியாக நடை



படிப்பகம்

முறைப் படுத்தப்பட்டது, கைலாஸ் காலத்திலேதான் என்றும் இளங்கீரன், எஸ். அகஸ்தியர் முதலானவர்கள் கூறுகின்றனர். நவீன தமிழ் இலக்கியத்துக்கும் நவீன தமிழ் எழுத்தாளர்களுக்கும் ஏற்றமளித்தவர் கைலாஸ் என்று கூறும் நந்தி, அன்று சாதி காரணமாகவோ பள்ளிப் படிப்பின் குறைவு காரணமாகவோ புறக்கணித்திருக்கப்படக் கூடியவர்களின் ஆற்றலை வெளிக் கொணர்ந்த கைலாசின் துணிவினைப் பாராட்டுவர்.

தினகரனைப் பொறுத்தவரை தமிழ் வாசகர்களிடையே அதன் செல்வாக்குப் பெருகியது. அதன்பால் பாராமுகமாகவிருந்த இலக்கியவாதிகள் மும்முரமாகத் தினகரனை வாசிக்கத் தலைப்பட்டனர். தினசரி விற்பனை இருமடங்காக, அதாவது 24,000 ஆக ஆகியது. ஞாயிறு தினகரன் 25.000 ஐக் கடந்தது. ஆசிரியர் குழுவுக்கு நிர்வாகம் பாராட்டு விருந்துபசாரம் நடத்தியதாக நடா குறிப்பிடுகின்றார்.

இத்தனைக்கும் கைலாசின் பிரதான சாதனைகள் என்று விதந்து கூறப்படத்தக்கவை மூன்று. ஒன்று. இந்நாட்டு எழுத்தாளர்களுக்கும் பத்திரிகையாளர்களுக்கு அவர் பெற்றுத்தந்த கௌரவமும் அளித்த உற்சாகமும். ஏரிக்கரை பத்திரிகாலயத்தில். தமிழ்ப் பத்திரிகையாளருக்கும் மதிப்புக் கிடைக்கக் காரணமாயிருந்தவர் கைலாஸ். இலைமறை காய்களாகக் கிடந்த எழுத்தாளர்களை வெளிக் கொணர்ந்து அவர்களுக்கு வாய்ப்புக்கள் நல்கியமையினையும், ஈழத்து எழுத்தாளர்களுக்கும் வாசகர்களுக்குமிடையிலான உறவு வலுப்பெற உதவியமையினையும், வெளியாருக்கு எமது எழுத்தாளர்களையும் இலக்கியங்களையும் பற்றி எடுத்துக் காட்டியமையினையும் இளங்கீரன் குறிப்பிடுகிறார்.

இந்நாட்டுத் தமிழ்ப் பத்திரிகை வாசகர்களின் தரத்தினையும் உருசியினையும் மாற்றியது இரண்டாவது சாதனையாகும். சாஸ்திரீய சங்கீதத்தை நயக்கும் கூட்டம் ஒன்று இல்லை என்றால் அத்தகைய ஒரு கூட்டத்தை நாம் உருவாக்குவோம் என்றானும் ஒரு பத்திரிகாசிரியன். அத்தகைய நம்பிக்கையுடன், ஈழத்து வாழ்வை எதார்த்த பூர்வமாகப் பிரதிபலித்த 'பிரசித்திபெறுத' எழுத்தாளர் படைப்புக்களை நயக்கும் ஒரு வாசகர் கூட்டத்தைப் படிப்படியாக உருவாக்கியதில் கைலாசுக்குப் பெரும்பங்குண்டு. ஞாயிறு தினகரன் முகப்பில் பெண்கள் கவர்ச்சிப் படங்களையன்றி 'கல்லும் சொல்லாதோ கவி' என்ற தலைப்புடன் சிற்ப ஓவியங்களை வெளியிட்டமையும், புகழ்பூத்த கலைஞர்களின் படங்களைப் பிரசுரித்தமையும் கூட இன்று குறிப்பிடக் கூடியனவே.

www.padippakam.com

மூன்றாவது சாதனையே மிகுந்ததாகும். ஈழத்துத் தமிழ் இலக்கியம் என்று சிறப்பாகச் சுட்டிக் காட்டப் படத்தக்க ஒரு இலக்கிய வளர்ச்சிக்கு வளமூட்டியமையே அதுவாகும். புனைகதைகளின் களங்களும் கதைமாந்தரும் உரையாடல்களும் காலதேச வர்த்தமானங்களைக் கடந்து நின்ற நிலை மாறுவதாயிற்று. தனித்துவம், தேசிய பாரம்பரியம், மண்வாசனை குறித்து எமது எழுத்தாளர் கவனம் திரும்பியது. "'தேசிய இலக்கியம் உருப்பெற்று வளர்ச்சி காணக் கைலாசபதி களம் அமைத்துக் கொடுத்தார்' என்று இன்றைய தினகரன் ஆசிரியர் இ. சிவகுருநாதன் கூறியுள்ளார் (ஈழத்துத் தமிழ்ப் புனைப் பத்திரிகை வளர்ச்சியில் தினகரன். யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் முதுமானிப் பட்டம் பெறுவதற்காகச் சமர்ப்பிக்கப்பட்டது. பிரசுரிக்கப்படாத ஆய்வுக் கட்டுரை 1983). கைலாசும் ஏ. ஜே. கனகரத்தின, கா. சிவத்தம்பி முதலானவர்களும் எழுதிய விமர்சனக் கட்டுரைகளும் தேசிய இலக்கியக் கோட்பாடு உறுதிபெற உதவின.

கலை இலக்கியத் துறைகளில் மட்டுமன்றி அரசியல் தேசிய சர்வதேசிய விவகாரங்களிலும் ஈடுபாடு மிகுந்தவரும் தனக்கென ஓர் அரசியல் நிலைப்பாடு கொண்டவருமான கைலாஸ் ஏரிக்கரைப் பத்திரிகை நிறுவனம் வெளியிட்ட தினகரனின் வாய்ப்பெல்லைகளை அறியாதிருக்கவில்லை. கிடைத்த வாய்ப்புக்களைக் கலை இலக்கியத் துறைகளிற் செவ்விய விளக்கங்களை ஏற்படுத்தவும், உலக நோக்கினைவளர்க்கவும் முடிந்தவரை பயன்படுத்தினர் எனலாம்.

தேசிய, சர்வதேசிய விவகாரங்கள் கோட்பாடுகள் குறித்த கட்டுரைகளை அவர் அம்பலத்தான், ஜனமகன், உதயன் முதலான புனைபெயர்களில் தேசாபிமானி, தொழிலாளி, செம்பதாகை, Red Banner முதலானவற்றில் நிறைய எழுதியுள்ளார். கருத்துக்களைச் சுதந்திரமாகச் சொல்லுவதற்கு ஏற்றவை என்பதனாற் போலும் சிறுசஞ்சிகைகள் பலவற்றுக்கு அவர் உற்சாகமூட்டி உதவினர். புதுமை இலக்கியம் மரகதம், வசந்தம், மல்லிகை, கற்பகம், தாயகம் சமர் முதலான சஞ்சிகைகளுடன் அவர் நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தார்.

1961 ஜூலையில் பத்திரிகாசிரியர் பதவியினின்றும் நீங்கிய கைலாஸ் பல்கலைக் கழகத்தில் விரிவுரையாளரானார். அங்கும் இலக்கிய ஈடுபாடுடையவர்களை இனங்கண்டு வயப்படுத்தி வழிப்படுத்தி உற்சாகப்படுத்துவதைக் கைவிடவில்லை. அவர் செல்வாக்குக்கு உட்பட்டு எழுத்துலகில் முன்னுக்கு வந்த பலருள் செ. கதிர்காமநாதன், செ. யோகநாதன், எஸ். மௌனகுரு, கலாநிதி பார்வதி கந்தசாமி, எம். ஏ. நுஃமான், சித்திரலேகா மௌனகுரு, இ. சிவானந்தன், செ. யோகராசா முதலியோர் குறிப்பிடத்தக்கவராவர்.



படிப்பகம்

www.padippakam.com

பத்திரிகைத்துறையில் இருந்த போதும் சரி பல்கலைக்கழகத்தில் இருந்த போதும் சரி கைலாசைச் சுற்றி ஒரு கலை - இலக்கியக் குழு என்றும் இருந்தது. அவரைத் தாக்குவதற்கென்றும் சில குழுக்கள் தோன்றின. எனவே எப்போதும் அவர் ஒரு சத்தியாகவே விளங்கினார். இலங்கைத் தமிழ் எழுத்தாளர் மத்தியில் மட்டுமன்றிச் சிங்கள எழுத்தாளர் மத்தியிலும் கு. அழகிரிசாமி சிதம்பர ரகுநாதன் தி. ஜானகிராமன், எஸ். இராமகிருஷ்ணன்' விஜயபாஸ்கரன், வல்லிக்கண்ணன், வானமாமலை, தி. க. சிவசங்கரன், அசோகமித்திரன் முதலான பல தமிழ் நாட்டெழுத்தாளர் மத்தியிலும் கைலாஸ் மதிப்புப் பெற்றிருந்தார். அவர் காலமான போது வெளியிடப்பட்ட பிரசுரங்கள், நடைபெற்ற நினைவுக் கூட்டங்கள், தொடர்பு சாதனங்கள் வாயிலாக வெளியிடப்பட்ட கருத்துக்கள் எழுத்தாளர் பத்திரிகையாளர் மத்தியில் அவருக்கிருந்த செல்வாக்குக்குச் சான்றுபகர்வனவாய் அமைந்தன. அச் செல்வாக்கு எவ்வாறு ஏற்பட்டதென்பதை எண்ணிப்பார்க்க வேண்டும்.

அறிவாற்றலும் ஆராய்ச்சித்திறனும் கொண்டவர் கைலாஸ். திறனாய்வுத் துறையில் தனக்கென ஓர் இடத்தை வகுத்துக் கொண்டார். மனித வாழ்க்கையை விளக்கி விமர்சிப்பதோடு நின்று விடாது அதனை மாற்றுவதற்கான கருவியாகத் திறனாய்வு அமைய வேண்டுமென்று அவர் கருதினார். அவரையும் அவரது கோட்பாட்டையும் விரும்பியவர்கள் மட்டுமன்றி விரும்பாதோரும் கைலாஸ் கூறுவதை அறிவதில் நாட்டம் கொண்டனர். அவரது விமர்சனத்தை மனதிற் கொண்டு பலர் எழுதியமை தரமான பல ஆக்கங்கள் தோன்றக் காலானது என்கிறார் செ. கணேசலிங்கன்.

திறமையை இனங்கண்டு ஊக்குவிக்கும் கைலாசின் பண்பை அவரை அறிந்த அனைவருமே மெச்சுகின்றனர். அந்தப் பண்பு ஒரு பத்திரிகாசிரியனுக்கும் சரி திறனாய்வாளனுக்கும் சரி இன்றியமையாததாகும். ''அணுகிய எவரையும் இதய சுத்தியுடன் ஆதரித்து குறைநிறைகளைச் சுட்டிக்காட்டி அன்பு செலுத்தி ஆதரவான முறையில் வழிநடத்தி வந்துள்ளார். அவ்விதம் பயன் அடைந்தவர்களுள் நானும் ஒருத்தன்'' என்கிறார் கே. எஸ். சிவகுமாரன். இத்தகைய உணர்வினைத் தினகரனுக்குச் சித்திரங்கள் வரைந்த மூர்த்தியும், 'சவாரித்தம்பரை' த் தினகரனில் உலவவிட்ட சிரித்திரன், சிவஞானசுந்தரமும் யூனூஸும், செ யோகராசாவும் இன்னும் பலரும் வெளியிட்டுள்ளனர். வைத்தியத் தொழிலைப் பகைப்புலமாக வைத்து ஒரு நாவல் எழுதாதது கைலாசுக்குத் தன்மீது மனஸ்தாபத்தை ஏற்படுத்திற்று என்கிறார் டாக்டர் நந்தி.



படிப்பகம்

www.padippakam.com

என்னைப் பொறுத்தமட்டில் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் மாணவனாக இருந்தபோது, தினகரன் பிரதம ஆசிரியராக இருந்த கைலாசைக் கலாநிதி க. கைலாசபதியை வித்தியானந்தனின் வீட்டில் முதன்முதற் சந்தித்தேன். அன்போடு பேசித் தினகரனுக்கு எழுதுமாறு கூறினார். பின்னர் தினகரனில் நான் சேர்ந்த ஒரு சில மாதங்களில் கைலாஸ் பல்கலைக்கழகத்துக்கு விரிவுரையாளராகச் சென்றுவிட்டார். அவர்கீழ்ப்பணியாற்றிய சில நாட்களுட் பத்திரிகைத் தொழிலின் நெளிவு சுழிவுகளை வெகு ஆர்வத்துடன் சொல்லிக் கொடுத்தார். அவரின் விசாலமான அறிவும், சுறுசுறுப்பும் 'செய்வன திருந்தச் செய்யும்' பாங்கும் என்னைக் கவர்ந்தன. பல்கலைக்கழகங்கள் புதுக்கல்வியாண்டுக்குத் திறக்கப்படவிருந்த வேளை ஞாயிறு தினகரனுக்கு உயர்கல்வி குறித்த ஆசிரியத் தலையங்கம் எழுதச் சொல்லிச் சிலகருத்துக்களை எடுத்துரைத்தார். எனக்கு அது முதலனுபவமாகையால் மிகுந்த தயக்கத்துடன் எழுதிக் கொண்டுபோய்க் காட்டினேன். பலமாகப் பாராட்டி, ஒரு பத்தி நிறைய அது போதாமல் இருக்கலாமென்று தானும் சில வரிகளைக்கீழே எழுதியனுப்பினார். அச்சுக்கோர்க்கப்பட்டபோது நான் எழுதியதுடன் பத்தி நிறைந்துவிட்டது. என்னைக் கூப்பிட்டு அதனைக் காட்டி மீண்டும் பாராட்டினார்.

அவர் தினகரனை விட்டு நீங்கிவிட்ட போதிலும் அடிக்கடி சந்தித்தபோது ஆலோசனைகளை அள்ளி வழங்கி உற்சாகப்படுத்தினார். மரபுப் போராட்டம் தினகரனில் இடம் பெற்ற காலத்தில் அவர் எனக்களித்த ஆலோசனைகளும் குறிப்புகளும் பல. யான் மேற்படிப்புக்குச் சென்னை செல்ல ஆயுத்தமான போது ஆராய்ச்சிக்கு உதவுவதில் அவர் காட்டிய ஆர்வம் மறக்கற்பாலதன்று. காலமாவதற்குச் சில வாரங்களுக்கு முன் அரசாங்க நிர்வாக சேவைப் பரீட்சைக் குரிய தமிழ்ப் பாட நெறியினைத் தயாரிக்கும் பொறுப்புப் பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவினால் கைலாசுக்குத் தரப்பட்டது. தான் தயாரித்த பாடநெறி குறித்து அபிப்பிராயம் கேட்டு அனுப்பினார். ஓரிரு மாற்றங்களைக் குறிப்பிட்டுப் பரிசீலிக்குமாறு எழுதினேன். உடனே நன்றி தெரிவித்துப் பதில் வந்தது. அப்பதில் கிடைத்த கையோடு சுகவீனமுற்ற செய்தியும் கேள்விப்பட்டேன். அப்பாடநெறியை ஒப்படைக்குமுன்பே கைலாஸ் எம்மைவிட்டுப் பிரிந்துவிட்டார்.

இளங்கீரன் மரகதம் என்ற சஞ்சிகையை வெளியிட்ட போது, ''வாழ்வை உற்று நோக்கி அதனடிப்படையில் தோன்றும் இலக்கியத்தை மூச்சாகக் கொண்டு உழைப்பவர்' அன்பர் இளங்



படிப்பகம்

www.padippakam.com

கீரன். தனது எழுத்தாலும் பேச்சாலும் பல்லாயிரக் கணக்கான ரசிகர்களின் இதயத்தைத் தொட்டு தடவி வரும் அன்பர் இளங்கீரன் மரகதம் மூலம் ஈழத்து இலக்கிய வனத்தில் நறுமணம் கமழும் நற்செடிகள் பலவற்றை உண்டாக்குவார் என்று இதய பூர்வமாக நம்புகின்றேன்''

என்று கைலாஸ் எழுதியதை உற்று நோக்கும் போது, எத்தகைய எழுத்தாளர்களை அவர் எவ்வாறு உற்சாகப் படுத்தினுர் என்பதும் அவரது இலட்சியம் எதுவாக இருந்தது என்பதும் மட்டுமின்றி அவர்பால் எழுத்தாளர்கள் கொண்ட அபிமானத்துக்கான காரணமும் துலங்கும்.

நிறைய வாசித்தல், கோட்பாட்டுத் தெளிவு, ஏனையவர் எண்ணங்களையும் பிரச்சினைகளையும் பரிவுடன் செவிமடுக்கும் பண்பு கருத்துப் பரிமாற்ற வேட்கை, சிந்தனையைத் தூண்டுவதும் சில விடத்துக் காரசாரமானதுமான ஒரு நகைச்சுவை உணர்வு, முதலானவை பிறரைக் கவரும் சிறந்த உரையாடல் வல்லராகக் கைலாசை ஆக்கின. அவருடன் "உரையாடுவது ஒரு தனி இன்பம்-பயனுள்ள கருமம்'' என்கிருர் கே. எஸ். சிவகுமாரன் அவரோடு உரையாடும் போது புதிய கருத்துக்களும் சிந்தனைகளும் இலக்கியங்களும் அறிமுகமாகும் என்பர் செ.கணேசலிங்கன்

மாறுபட்ட கருத்துடையவர்களிடமும் நியாயமாக நடந்து கொண்டமையும் பிடிக்காதவற்றை நேர்மையோடு எடுத்துக் கூறியமையும் கைலாசின் சிறப்புக்கள். நியாயமாக நடந்து கொண்டதால் பிறரது மதிப்பினைக் கைலாஸ் பெற்றதாக யூனுஸ் கூறுகிருர். அரசியலில் மாறுபட்டு நின்ற தங்களையும், திறமைகளை இனங்கண்டு முன்னுக்குக் கொண்டுவந்தவர் கைலாஸ் என்பர் சபாவும் நடாவும். தனது ஆக்கங்கள் கைலாஸ் காலத்தில் தினகரனில் வெளியிடப்படாமற்போனமை பற்றிக் கைலாஸ் குறிப்பிட்ட நேர்மையையும் இலக்கிய வாதிகளை அவர் சிநேத்தவ சிறப்பையும் எஸ். அகஸ்தியர் வியக்கிருர்.

என். கே. ரகுநாதன் எழுதிய கந்தன் கருணை என்ற நாடகத்துக்கு யார் யாரோ உரிமை கொண்டாட முனைந்தனராம். ஆசிரியர் யார் என்பதை ஒரு சஞ்சிகையிற் குறிப்பிட்டதன் மூலம் அதற்குக் கைலாஸ் முற்றுப் புள்ளிவைத்தார். எழுத்தாளர் பத்திரிகையாளர் உரிமைகள் மதிக்கப்பட வேண்டும் என்பதிலும் அவர்தம் திறமைகள் தக்கவாறு அங்கீகரிக்கப்பட வேண்டுமென்பதிலும் கைலாஸ் அக்கறை கொண்டிருந்தார் ஒருவரின் கூற்றையோ கருத்தையோ எடுத்தாளுமிடத்து அதனைக் குறிப்பிடாது விடுவது கைலாசுக்குப் பிடிக்காது. அது ஓர் அறிவாள நேர்மை.



படிப்பகம்

www.padippakam.com

மற்றவர்களின் இலக்கிய, பத்திரிகை முயற்சிகளை விசாரிப்பது, ஆலோசனை வழங்குவது, ஒதுங்கி நின்று கிண்டல் செய்யாது சேர்ந்து தோள் கொடுப்பது, தனிப்பட்டவர்களின் முயற்சிகளை அவதானித்துச் சந்திக்கும் போது ஞாபகமாக விசாரிப்பது, சினத்தைத் தவிர்த்துப் பொறுமையைக் கடைப்பிடிப்பது - இவ்வாறான குணங்களை எழுத்தாளரும் பத்திரிகையாளரும் கைலாசிடம் கண்டனர். அத்தோடு ஒரு பத்திரிகாசிரியருக்கு அவசியமான நிதானமும் பதற்றமற்ற பொறுமையும் கைலாசுக்கு வாய்த்திருந்தன.

தொகுத்து நோக்குமிடத்து, எழுத்தாளர் பத்திரிகையாளர்களின் ஈடுபாடுகளையும் இனங்கண்டு பட்டை தீட்டி, மாணிடம் பயனுறும் வகையில் ஆற்றுப் படுத்தியமை கைலாசின் சிறப்பென்பது தெளிவாகும். இந்நாட்டுத் தமிழ் எழுத்தாளர்களுக்கும் ஒரு மதிப்பினையும் பிரபல்யத்தினையும் ஏற்படுத்திக் கொடுத்ததும் கைலாசின் சாதனையாகும். எழுத்தாளர் பத்திரிகையாளரை மதிக்கவும் மதிப்பிடவும் தெரிந்திருந்த கைலாசை எழுத்தாளரும் பத்திரிகையாளரும் மதித்துமதிப்பிடுவதில் ஆச்சரியப்படுவதற் கொன்றுமில்லை.

★

# பொங்கல்

- சங்கர்

வாசலில் கோலமிட்டு
வண்ண விளக்கேற்றி
வானில் வரும் சூரியனுக்கு - பானை
வாய் நிறைந்த பொங்கல்

ஏரெடுத்து நிலமுழுதோம்
ஏற்றமேறி நீர் இறைத்தோம்
சகதி குழைத்து நாற்று நட்டோம்
கதிர் கண்டு பொங்கிவிட்டோம் - பானை
வாய் நிறைந்த பொங்கல்

வெண் மணிக் கதிர் அறுத்து
மாடடித்து மாளாமல் நாமடித்து நெல்லாக்கி
ஆண்டையின் அடுப் பெடியில்
அடுக்கி விட்டு வந்துவிட்டோம்.

தைத் திங்கள் முதல் நாளில்
பொங்கிய பானை இன்று
எங்கள் வீட்டுக் கோடியிலே
கொட்டாவி விடுகிறது - கிடந்து
கொட்டாவி விடுகிறது.



படிப்பகம்

www.padippakam.com

# பிரம்படி

- சேயோன்

மண் சுமக்கின்றோம் வைகையின் கரையில்
- வையகம் வாழட்டும் என்று.
கண் சிவத்து எம்மை உறுக்கிறாய்;
அதட்டிக்
காரியம் முடித்திட நினைத்தாய்.
எண்ணத்தில் எதை நீ வைத்திருக்கின்றாய்?
ஏன் அய்யா, ஓங்கினாய் பிரம்பை?

உண்மையை இன்று ஒரு சற்றுப் பொழுதில்
உணருவாய்.
வருந்துவாய். உணர்ந்தால்.

நாம் எவர் என்று தெரியுமா?
தெரிந்தால் நடத்தையை மாற்றுவாய்
இன்றோ...
ஊமை நாம்.
ஆமாம்.
ஒரு சொல்லும் பேசா
ஒரு சிறு விரதத்தை உடையோம்.
பூமியைக் கூடப் புரட்டுவோம்-
நினைத்தால்.
பொறுமையைக் கடைப்பிடிக்கின்றோம்.
ஆயிரம் சொல்ல நினைக்கின்றோம்.
நம் மேல்
அடி பட்டால்...
அதன் பலன்?

அழிவு
நீயும் உன் குலமும் நெருக்குதற் குணமும்
நெருப்பிலே விழுந்த பஞ்சாகும்.

www.padippakam.com

## அங்கலாய்ப்பு

நெடுந்தீவு லக்ஸ்மன்

அப்பர்
திருநாவுக்கரசர்
அன்றைக்குச் சொன்னார்
''நாம்
யார்க்கும் குடியல்லோம்''
என்று...
இன்று
அப்பு
திருநாவுக்கரசு
அங்கலாய்க்கிறார்
''நாம்
யாருக்குக் குடியானோம்''
என்று...!

---

ஆசிரியர்
தாயகம்

அன்புடையீர்,

தாயகம் 20இல் 'அலையில் வளையும் உண்மைகள்' பற்றிய என் கடிதத்தில் ஒரு தவறு உள்ளது என இன்று பழைய காகிதங்களைக் கிளறுகையில் அறிந்தேன்.

ஸ்ரீ ஸ்ரீ கவிதையின் மொழிபெயர்ப்பு 1985இல் அலையிற் பிரசுரமானது என எழுதியிருந்தேன். அது 1984இல் SVRஇன் பதிலின் முதற்பகுதி வந்த இதழிலேயே பிரசுரமானது.

அலைக்கு 1983இன் முற்பகுதியில் அனுப்பிய SVR நூல் பற்றிய விமர்சனத்தின் பின்பு எதுவும் அனுப்பிய நினைவில்லை. அலைக்குக் கவிதை /கட்டுரை எழுதும் அக்கறை இல்லாமற் போய், SVRக்கு எழுதிய பதில் வராததன்பின், இனி எழுதுவதில்லை என்ற முடிவுக்கு வந்தேன் என்ற விஷயம், முன் குறிப்பிட்ட தவற்றின் விளைவாக, என் முன்னைய கடிதத்தில் சிறிது தவறாக விளக்கப்பட்டுள்ளது. ஆயினும் அலை என் தமிழாக்கத்தை தன் விருப்பத்துக்கு மாறாகவே பிரசுரித்தது என்பதும் அது பிரசுரிக்கப்பட்ட நிலையில் அலைக்கு நான் விஷயதானமாக (SVRக்குப் பதிலைவிட) எதையும் அனுப்புவதை நிறுத்திவிட்டேன் என்பதும் கவனிக்க வேண்டிய உண்மைகள்.

அன்புடன்
20-10-89 சிவசேகரம்

---

www.padippakam.com

# குழந்தை ம. சண்முகலிங்கத்தின் ஐந்து பாடசாலை நாடகங்கள்

- சிவகாமி

என்னைப் பொறுத்தவரையில் இதுவரை காலமும் சிறுவர் நாடகங்களைப் பார்ப்பது என்பது வயதுவந்தவர்களுக்கு ஒரு பெரும் சோதனையாகவே பெரும்பாலும் இருந்துள்ளது. அந் நாடகங்களை நடிக்கும் சிறுவர்கள் படும்பாடு மிகவும் பரிதாபத் திற்குரியது என்பதை எனது சொந்தப் பாடசாலை அனுபவங் கள் மூலம் நன்கு அறிவேன். மூன்றும் வகுப்பில் படிக்கும் போதே, குந்திதேவி கர்ணனைப் பேழையில் இட்டு அனுப்பும் நாடகங்கள் நடித்தவர்களுக்கு அந்நினைவுகள் விரைவில் அகலாது

குழந்தை ம. சண்முகலிங்கத்தின் 'ஐந்து பாடசாலை நாடகங்கள்', 2- 12- 89 அன்று யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நடைபெற்றது. சிறுவர் நாடகங்கள் எவ்வாறு இர சிக்கக்கூடியனவாகவும் அதே சமயம் சிந்திக்கக் கூடியனவாகவும் அமையலாம் எனப் பலருக்கு அன்று தான் தெரிந்தது. இந்த ஐந்து நாடகங்களில் 'ஆச்சி சுட்ட வடை', 'முயலார் முயல் கிறார்' என்பவை ஆரம்பப் பாடசாலை மாணவர்களாலும், 'திக்கு விஜயம்', 'சத்திய சோதனை', 'சகல கலாவல்லியே', ஆகியன நடுத்தர, உயர்தர வகுப்பு மாணவர்களினாலும் நடிக்கப்பட்டன. 'ஆச்சி சுட்ட வடை', 'முயலார் முயல்கிறார்' என்பவை மிகவும் சிறுவர்களுக்குரிய நாடகங்களாக இருந்த போதும், வயதுவந்த வர்களுக்கும் அவை அநேக மறைமுகக் கருத்துக்களை வழங்கின அதாவது மேற்கூறிய இரு நாடகங்களும் ஒரு மட்டத்தில் சிறுவர் நாடகங்களாகவும், இன்னொரு மட்டத்தில் வயதுவந்தவர்களின் சிந்தனையைத் தூண்டும் வகையில் அமைந்த வயதுவந்தவர்களுக் கான நாடகங்களாகவும் அமைந்தன,

'சத்திய சோதனை' என்ற நாடகம் எமது இன்றைய கல்வி முறையினைப் பற்றியது. இதில் எமது கல்விமுறையில் உள்ள குறைபாடுகள் வெளிக்கொண்டுவரப்பட்டுள்ளது. போட்டி முறை யில் அமைந்த எமது கல்விமுறையை ஒரு விளையாட்டுப் போட் டியைப் போல் மேடையில் நிகழ்த்திக் காட்டுவதன் மூலம் அதன் அர்த்த தன்மைகளும் விபரீத விளைவுகளும் எடுத்துக்காட்டப் படுகின்றது. 'விளையாட்டில் உள்ள போட்டி முறையினை வாழ்க் கையில் உள்ள எல்லாத் துறையிலும் பின்பற்ற ஏலுமே?' என நாடகத்தின் தொடக்கத்தில் ஒரு பாத்திரத்தினால் வினவப்படும்



படிப்பகம்

www.padippakam.com

கேள்வி நாடகம் ஏற்றுக் கொள்ளக்கூடிய வகையில் விடையளிக்கிறது. மேலும் 'பல்கலைக்கழக அனுமதி கிடையாதவர்கள் வெளிநாடு போவதுதான் ஒரே வழி' என்ற ஒரு பாத்திரத்தினது வாதத்திற்கு, 'வெளிநாடு போவதாலோ, வெளிநாடு வருவதாலோ எங்களுடைய பிரச்சினை தீர்ந்து போகாது' என்னும் கூற்று நகைச்சுவையான முறையில் சில அடிப்படை உண்மைகளைத் தெரிவித்தது.

தாம் பிறந்த மண்ணுக்கு உழைப்பதை விடுத்து வெளிநாடு போகும் எமது புத்திஜீவிகளின் கையாலாகாத்தனத்தை எடுத்துக்காட்ட நாடகம் தவறவில்லை. கீழ்வரும் பாடலும் அதனைத் தொடர்ந்து வரும் சம்பாசனையும் இதனை உணர்த்தும்.

''அமெரிக்கா நாட்டுக்கு நான் போகப்போறேன்
அணுக்குண்டு ஆராய்ச்சி நான் செய்யப்போறேன்
'நாசா'விலே நானும் சேரவே போறேன்
ஆராய்ச்சியாளனாய் நானும் உழைத்திடப்போறேன்''

''படித்தவை கொஞ்சம் இஞ்சை நின்று காசை நினைக்காமல் நாட்டை நினைத்து, சொந்த மண்ணுக்கு உங்கட அறிவையும் உழைப்பையும் செலவு செய்தால் குறைஞ்சே போகும்?''
''இந்த ஊர்ச்சம்பளம் பிச்சைக் காசு''
''பிச்சைக் காசிலைதான் நீர் படிச்சனீர், பட்டம் வேண்டினீர்!

திரு. ம. சண்முகலிங்கத்தின் நாடகங்களான 'திக்கு விஜயம், 'சத்திய சோதனை' ஆகிய இரண்டும் சமூக மாற்றத்தின் அவசியத்தை வலியுறுத்துகின்றன. அவருடைய நாடகங்கள் எப்பிரச்சனையை ஆராய்வதாக அமைந்தாலும் அப்பிரச்சனையை ஆழ ஆராய்வதால், அப்பிரச்சனைகளுக்கு அடிப்படையாக அமையும் வர்க்க சமுதாயத்தையும், அதன் அநீதியையும் வெளிப்படுத்தத் தவறுவதில்லை. 'சத்திய சோதனை'யில் இடம்பெறும் சில வரிகளை இதற்கு உதாரணமாக எடுக்கலாம்.

''மேடு பள்ளத்திலே ஒழுங்கா நிக்கேலாது
நிலம் ஒழுங்கா இருந்தா
தளம் ஒழுங்கா இருந்தா
எல்லாம் ஒழுங்காத் தன்பாட்டிலே இருக்கும்.

ஒரு சமுதாயத்தின் மேற்கட்டுமானம் என்பது அதன் பொருளாதார அடித்தளத்தினாலேயே தீர்மானிக்கப்படுகிறது எனவே மேற்கட்டுமானத்தில் மாற்றங்கள் வேண்டுமெனில் நாம் அடிதளத்தை மாற்றவேண்டும் என்னும் செய்தி, அடிப்படை சமூக மாற்றத்தின் அவசியம் பற்றிப் பலரைச் சிந்திக்கத் தூண்டி இருக்கும் என்பதில் ஐயமில்லை.



படிப்பகம்

www.padippakam.com

'சசல கலாவல்லியே' என்ற நாடகம் சமூகத்தில் பெண்களின் நிலையை எடுத்துக்காட்டுவதாக அமைந்திருந்தது. பெண்களை ஒரு புறம் (வழிபாட்டில்) தெய்வங்களாகவும், மறுபுறம் அன்றாட வாழ்க்கையில் இரண்டாந்தரப் பிரசைகளாகவும் மதிப்பது இதில் வெளியாகியது. அத்துடன் எமது சமூகத்திலே நாம் எவ்வாறு எவ்வகையிலும் நியாயப்படுத்த முடியாத, வழக்கொழிந்த பெறுமானங்களைச்(Values) சிந்திக்காமல் கட்டிக்காத்து வருகின்றோம் என்பதும் நாடகத்தினூடே எடுத்துக்காட்டப்படுகின்றது. கல்வி என்பது முதலிலே ஆண்களுக்கு; பிறகு தான் பெண்களுக்கு என்ற வாதம் நாடகத்தில் எழும்புகிறது

"பெட்டையளுண்ட ஆட்டமெல்லாம் ஒருத்தனுடைய கையைப் பிடிக்கும் மட்டும் தானே? பிறகென்ன, குடும்பப் பொறுப்பைச் சுமப்பது ஆண்கள் தானே?'' ஒரு பாத்திரம் விடாப் பிடியாக வாதிடுகிறார். இதற்கு சமகல்வி வாய்ப்புப் பற்றிய ஒரு விளக்கவுரை அல்லவா இனி கொடுக்க வேண்டும் என பார்த்திருந்தோம். ஆனால் நாடக ஆசிரியரோ இதற்கான பதிலை ஒரு வசனத்திலேயே மனதைத் தொடும் வகையில் வழங்கியிருந்தார். நாடகப் பாத்திரங்களில் ஒருவரான ஒரு விதவை எழுந்து. ''எனக்கு வந்த இந்தக்கதி வேறு எந்தவொரு பெண்ணுக்கும் வரக்கூடாது'' என்று கூறிய போது, அந்த விதவையின் பரிதாபகரமான நிலையே பெண்களுக்கு ஏன் கல்வி அவசியம் என்பதை விவாதத்திற்கு இடமின்றி நிரூபித்தது.

'திக்கு விஜயம்' என்ற என்ற நாடகம் பல்வேறு வர்க்க மாணவரிடையே காணப்படும் ஏற்றத்தாழ்வுகளை சித்தரிப்பதாக அமைந்தது. ஒவ்வொரு வர்க்க மாணவர்களுக்கு உரிய உடை, நடை, பாவனை, வாழ்க்கை முறை, பெறுமானங்கள், சிந்தனைகள் ஆகியன மிகவும் யதார்த்தமாகச் சித்தரிக்கப்பட்டிருந்தது. 14 வயது வரை படிக்க வேண்டும் என்பது சட்டப்புத்தகங்களில் இருந்தாலும், வறுமை காரணமாக அது பல மாணவர்களுக்கு சாத்தியமாவதில்லை என்பது ''நான் பள்ளிப்பக்கம் போனதே கிடையாது'' என்ற ஒரு ஏழைச் சிறுவனின் கூற்று மூலம் தெளிவாகிறது 'திக்கு விஜயம் என்ற நாடகத்தில், கல்வித்துறையில் நீதி நிலவ சமத்துவசமுதாயம் இன்றியமையாதது என்பது பின்வரும் பிரகடனம் மூலம் வலியுறுத்தப் படுகின்றது.

''எல்லோரும் எல்லாமும் கிடைக்கப் பெற்று
கல்லாமை இல்லாது ஒழியப் பெற்று



படிப்பகம்

www.padippakam.com

இல்லாமை இல்லாது அழிந்து போக
உயர்வு தாழ்வுகள் தகர்ந்து போக
சத்தியம், நேர்மை என்றும் நிலவ
சமத்துவம் எங்கும் பொலிந்து வளர
சன்மார்க்கம் என்றும் நிலைத்து நிற்க
சபதம் செய்வோம் எங்கள் மத்தியில் சமத்தும் நிலவ!

மேற்கூறிய ஐந்து நாடகங்களுமே ஆழமான கருத்துக்களை இலகுவான மொழி அமைப்பையும், கவர்ச்சியான வடிவமைப்பையும் கொண்டிருந்தன என்பது நாடகங்களை ஒரு தடவைபார்த்தால் யாவருக்கும் புலனாகும்.

## சந்தா விபரம்

ஆண்டுச் சந்தா (12 இதழ்கள்)
இலங்கை: ரூபா 120-00
இந்தியா: 9 அமெரிக்க டொலர்
மத்தியகிழக்கு நாடுகள்: 10 அமெரிக்க டொலர்
ஐரோப்பா - அவுஸ்திரேலியா: 11 அமெரிக்க டொலர்
அமெரிக்கா - கனடா; 13 அமெரிக்க டொலர்
(காசோலைகளில் PAY எனுமிடத்தில் N. RAVEENDRAN People's Bank, Kannathiddy. S/A 7140', என எழுத வேண்டும்)
தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:

ந. இரவீந்திரன்
15/1, மின்சாரநிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

www.padippakam.com

# நிழலின் நினைவு

- சேகர்

படலையைத் தாண்ட
நிமிர்ந்து விஸ்வரூபமாய்
வழி மறிக்கும்
முற்றத்து வேம்பு.
செம்பொன் துளிர் முதிரப்
பசுமை கனக்கும்
இளவேனிற் கிளைகளின்
மறைவில் விரிந்து
உதிரும் நுண்மலர்கள்
நண்பகலின்
வெய்யிலை அஞ்சி
மரத்தடியில் ஒதுங்கும்
பெருநிழல் மேல்
குளிர்தேடி ஊரும்
இளங்காற்று.
வேனிலுடன் முதிர்ந்து
கனிந்த பழங்களின்
மனிதர் உணரா
இனிமை இரகசியத்தைப்
பரிமாறுங் காக்கைகள்.
அணிலைத்துரத்தி
மரமேறி விழும் பூனை.
உதிரும் பொன் இலைகள்
பட்டை வெடிப்பில்
பிசின் கசிவு.
முகரும் எறும்புகளின் ஊர்வலம்
மேலும் கீழுமாய்
ஓயாது பகல் முழுதும்.
மரத்தடியில்
நீட்டி நிமிர்ந்து
நிழல் காயும் நேரத்தும்
மனதிற்கு இனிதென்றோ
அடைதற்கு அரி தென்றோ
கருதத் தெரியாது
நித்தியமாய் நினைத்திருந்த
நிலைகுலைய
அயலிருந்தோர்
புயல் வரவு.
மரஞ் சரிவு.

இன்று
காலுயரம் நிற்கின்ற
கன்றுகளில் ஒன்றேனும்
வேம்பின்
நிழல் மறந்த மண்முழுதும்
நாளை நிழல் இறைக்கும்
என்மேல் இல்லாவிடின்
என் பிள்ளைகள் மேல்
நிச்சயமாய்
என் பேரர்கள் மேல்.



படிப்பகம்

www.padippakam.com

# சாதியமும் அதற்கெதிரான போராட்டங்களும்

ஆசிரியர்கள்; **வெகுஜனன் இராவணு**

வெளியீடு: **புதியபூமி, 15/1, மின்சார நிலைய வீதி யாழ்ப்பாணம்**

விலை:; **25-00**

உரிமை மறுப்பு, அடக்குமுறை, பாரபட்சம், அப்பாவிமக்களுக்கெதிரான வன்முறை முதலியன குறித்துத் தமிழ் மக்கள் நீண்டநாட்களாக முறையிட்டு வருகின்றனர். ஆயினும், அவற்றை மிகக்கொடூரமான முறையில் மேற்கொண்ட நீண்டவரலாறுஅவர்களுக்கும் உண்டு என்று சொன்னல் பலர் முகஞ்சுழித்தல் கூடும். ஆனல், உண்மையை அறிந்துகொள்ள முடியாதவர்கள்அனுதாபத்துக்குரியவர்கள், அறிந்துகொள்ள அஞ்சுகிறவர்கள் பரிதாபத்துக்குரியவர்கள், அறிந்துகொள்ள மறுப்பவர்கள் அயோக்கியர்கள் என்று ஓர் அறிஞர் கூறியது நினைவுக்கு வருகிறது.

இந்நூற்றுண்டு அறுபதுகளின் ஆரம்பத்தில் யாழ்ப்பாணச் சாதிமுறை குறித்து ஆங்கிலப் பத்திரிகை ஒன்றில் கட்டுரை எழுதிய போது. இரு குற்றச் சாட்டுக்கள் கூறப்பட்டன. ஒன்று, வழக்கொழிந்துவரும் ஒன்றினைப்பற்றிப் பத்திரிகையில் எழுதியிருக்க வேண்டியதில்லை என்பது, மற்றது ஆங்கிலத்தில் எழுதுவதன்மூலம் எமக்குள் இருக்கும் ஒரு அழுக்கைப் பிறருக்கு வெளிச்சம் போட்டுக் காட்டுவது முறையல்ல என்பது. எழுபதுகளின் ஆரம்பத்தில் சாதியமைப்பின் அத்திவாரம்தளர்வதையும் அதுபற்றியசாதிமான்களின் அங்கலாய்ப்பையும் காட்டும் நாடகமொன்றினை அரங்கேற்றிய போது, எதுவித முக்கியத்துவமும் அற்றுப்போன ஒருபிரச்சினையை எழுப்புவதாகக் குற்றம் கூறப்பட்டது. ஆனல், எண்பதுகளிலும், அதுவும் பேரினவாத வெறித்தாக்குதல்களுக்கும் இராணுவக் குண்டுவீச்சுக் கொடுமைகளுக்கும் ஆளான நிலையிலும் ஒதுக்கல்கள் இடம்பெற்றதை இந்நூல் எடுத்துக்காட்டுகின்றது.

வரலாற்று, சமூகவியல் ஆய்வாளர்களுக்குப் பெரிதும் உதவக்கூடிய இந்நூல், சாதியத்தைஒழிக்கும் உணர்வினைத் தூண்டுவதையும் அதற்குகந்த வழியினைக் காட்டுவதையுமே பிரதான குறிக்



படிப்பகம்

www.padippakam.com

கோள்களாகக் கொண்டதென்று விளங்குகிறது. இதனை வாசிக்கும்போது பலவிடத்துச் சினமும் வெறுப்பும் சிலவிடத்துச் சிரிப்பும் உண்டாகக் கூடும்.

சாதியமைப்பினைத் தமிழ் மக்கள் வளர்க்கவில்லை என்றும்அதனை ஆரியரே கொண்டுவந்து புகுத்தினர் என்றும் தமிழ்ப் பெருமையுணர்வாளர் கூறுவதுண்டு. ஆனால் அதன் வரலாற்றினையும் பொருளாதார அடிப்படையினையும் தெளியாது பிறர் கொண்டுவந்து புகுத்திய ஒரு களங்கத்தினைத் துடைக்கமுடியாமல் தயங்குகிறோம் என்பது ஆறுதல் அளிக்காது. சங்க காலத்திலேயே தொழிலடிப்படையிலான பிரிவுகளிருந்தமைக்கும் சிலபகுதியினர் அடக்கிச் சுரண்டப்பட்டமைக்கும் சான்றுகள் உண்டு. நிலமானிய முறையின் இறுக்கமும், வர்ணாசிரமக் கோட்பாடு, மறுபிறவிக் கோட்பாடு ஆகியனவும் இப்பாகுபாடு வலுவடையக் காரணமாயின.

கர்மவினையின் பயனாகவே குறிப்பிட்டதொரு நிலை ஒருவனுக்கு வாய்ப்பதாக நம்பியவர்கள் ஒதுக்கப்பட்ட நிலைகளையும் ஒப்புக் கொண்டபோது, பிறப்பினால் ஏற்றத்தாழ்வு, பாராட்டிய சாதி அமைப்பு வலுப்பெற்றது. முற்பிறப்பிற் செய்த தீவினைகளின் பயனாகக் கீழ்நிலையிற் பிறக்கும் ஒருவன் அப்பிறவியில் ஒழுங்காக வாழ்ந்தால் மறுபிறப்பில் உயர்நிலை கிட்டும் என்று கூறப்பட்ட போது அவன் அந்நிலையினை ஏற்றுக்கொண்டான். அதன்படிஒருவன் ஒருபிறப்பில் தன் செயல்களாலும் முயற்சிகளாலும் உயர்நிலை எய்தல் சாத்தியமன்று. சமண-பௌத்த மதங்களின் செல்வாக்கினால் வலுப்பெற்ற கர்ம, மறுபிறவி, நிலையாமைக் கோட்பாடுகள் பிறப்பினாற் சாதிபேதம் பாராட்டும் முறை ஏற்றுவளர்க்கப்படப் பெரிதும் உதவியதாகக் கருதப்படும்.

மேலெழுந்த வாரியாகச் சாதியமைப்பின் வரலாற்றினை நோக்கும்போது,மேலாதிக்க வர்க்கத்தினர் அதனைத் தமக்குச் சாதகமாக வளர்த்துப் பயன்படுத்தியமை புலனாகும். சோழர், பாண்டியர், விசயநகர நாயக்கரும் சரி, பிராமணியத்தையும் எதிர்த்த பௌத்த மதத்தைப் போற்றிய சிங்கள அரசரும் சரி, போர்த்துக்கேயர், ஒல்லாந்தர் ஆங்கிலேயரும் சரி தங்கள் ஆட்சியதிகாரத்தை ஸ்திரப் படுத்த அதனைப் பயன்படுத்தியதை வரலாறு காட்டுகிறது.

இந்து சமயத்தைப் பொறுத்த வரை சாதிமுறை அதன் சாபக் கேடு என்பர். சாதிமுறைபற்றி இருக்கு வேதம் பேசவில்லை. ஆனால், ஆட்சிய திகார வர்க்கத்தினருக்கு வசதியாக வகுக்கப்பட்ட சாஸ்திரங்கள் சாதிகளை வகுத்தன சாதிகளை இறைவன் வகுத்ததாகப்



படிப்பகம்

www.padippakam.com

பல இந்துக்கள் நம்புகின்றனர். ஒவ்வொரு சாதியினருக்கும் வெவ் வேறான ஒழுக்கக் கோவைகளும் கிரியை முறைகளும் வகுக்கப்பட் டுள்ளன. ஒருவருடைய சமுதாய நிலையினையும் அவன் எப்படிவாழ வேண்டும் எப்படி உடுக்கவேண்டும் எப்படி நடக்க வேண்டும் என் பதையெல்லாம் சாதி நிர்ணயிக்கிறது. நூற்றுக்கணக்கில்சாதிகளும் உப- சாதிகளும் பெருகியுள்ளன. உட்- சாதிகள் மட்டும் 563 இருந் ததாக இந்திய அரசில் நீண்டகாலம் அமைச்சராயிருந்த ஜகஜீவன் ராம் ஒருதடவை கூறினார்.

பிறப்பொக்கும் எல்லா உயிருக்கும் என்று வள்ளுவர் கூறிய துண்டு. பிறப்பினால் பேதம் பாராட்டப்படுவதற்கு எதிரான சிந்த னைகள் வேதங்களிலும், உபநிஷதங்களிலும் இல்லாமலில்லை. தீண் டாமைக்கு இறையதிகாரம் உண்டென்பது வேதங்கள் வாயிலாகக் காட்டப்பட்டால் இந்துமதத்தை அழுகியதொரு பழத்தினைப் போல் விட்டெறிந்து விடுவேன் என்று மகாத்மா காந்தி கூறினார். இருந்தும் பிறமதத்தவர் சாதிபிரிவினைகளைத் தமக்குச் சாதகமாக் கிக் கொண்டு இந்துக்களை மதமாற்றும் போதும் கூட, இந்துப் பெரியார்கள் தம்மதிகாரத்தைப் பேணும் கருவியாக இந்துசமயத் தை மட்டுப்படுத்துவதில் மாத்திரம் கண்ணுயிருப்பது எவ்வளவு, வேடிக்கை? அரவணைப்பதன் மூலமா அல்லது ஆட்சியதிகாரக் கட் டுப் பாட்டின் மூலமா ஒரு சமயத்தைவளர்க்கமுடியும்? இந்துசமயம் நலிவடைந்து வருவதாக அங்காலய்ப்பவர்கள் இந்நூலினையும் நோக்க வேண்டும்.

தங்கள் மேலாதிக்கத்தை உறுதிப்படுத்தச் சாதியினைப் பாவிப் போர் ஆபத்துக் காலங்களில் ஒற்றுமைக் குரல்எழுப்புவதுவரலாற் றிற் பரக்கக் காணப்படக்கூடியதொன்று. சமண பௌத்தர்களால் நெருக்கடி தோன்றியபோது, 'ஆவுரித்துத் தின்றுழலும் புலையரே னும் கங்கைவார் சடைக்கரந்தார்க்கு அன்பராகில் அவர்கண்டீர் நாம் வணங்கும் கடவுளாரே' என்ற குரல் கேட்டதும், கிறிஸ்தவம் பரவியவேளை சமரசக்குரல் மேலோங்கியதும், இலங்கையில் 1958 இனக்கலவரத்தைத் தொடர்ந்தும் பின்வந்த கலவர காலங்களின் போதும் ஒற்றுமைக் குரல் கேட்டதும் அதற்கு உதாரணங்களா கலாம்.

மேலாதிக்கத்துக்கு இடராக இருப்பின், குடிபெயர்வதைத் தடுப்பர்; ஆடையணிகளைக் கட்டுப் படுத்துவர்; ஆலயதரிசனம் மறுப்பர்; கல்வி உத்தியோக வசதிகளை மறுப்பர்; நெற்காணி மசோதாவை எதிர்ப்பர்; பாடசாலைகள் தேசியமயமாக்கப்படுதலை



படிப்பகம்

www.padippakam.com

எதிர்ப்பர்- பட்டியலை நீட்டுவானேன்? மகாத்மா காந்திக்கு அளிக்கப்படும் வரவேற்பையே குழப்புவர். சுருக்கமாகச் சொல்வதானால், திருவள்ளுவரோ, ஔவையாரோ, திருநாவுக்கரசரோ, சார்ல்ஸ் டார்வினோ, மகாத்மா காந்தியோ, மகாகவி பாரதியோ யார் கருத்தாயிருந்தாலும் சரி தமக்குத் தோதாக இல்லாவிட்டால் கிஞ்சித்தும் மதிக்கமாட்டார்கள்.

சாதி விடயத்தில் யாழ்ப்பாணத்தைப் பொறுத்த வரையில் கெடுபிடியும் கொடூரமும் சற்று அதிகம். ஒழுக்க சீலத்துடனோ கல்வியுடனோ தொழிலுடனோ நிறத்துடனோ அல்லது பொருளாதாரத்துடனோதானும் சம்பந்தமில்லாத நிலையிலும் ஒரு சாதிமுறை அங்கு விடாப்பிடியாக மல்லாடுவதாயிற்று. இந்தச் சமுதாய அமைப்பில் அது முற்றாக ஒழிந்துவிடுவது சாத்தியமில்லாவிட்டாலும், அநாகரிகமான கட்டுப்பாடுகளும் பார்த்தவர் சிரிக்கும் கேவல நடத்தைகளும் தவிர்க்கப்படல் அவசியம். சாதிப்பிரச்சினை ஒரு கடந்தகால வரலாறு என்று கூறுவதில் ஆசுவாசம் காணும் ஒருவரோடு ச மீ ப கா லக் கலவரங்கள் குண்டு வீச்சுக்களின் போதும் இடம்பெற்ற சில அருவருக்கத் தக்க நிகழ்வுகள் குறித்துப் பேசிய போது, ''அப்படி நடந்து கொள்ளும் சில பைத்தியங்கள் இருக்கவே செய்வர். அதைக் கணக்கில் எடுக்க வேண்டியதில்லை'' என்றார். ஆனால், நிலபுலங்களையும் கடைகண்ணிகளையும் கோவில் குளங்களையும் பட்டம்பதவிகளையும் உடைய பைத்தியங்களைக் கொண்டிருத்தல் ஒரு சமுதாயத்துக்கு அத்துணை அழகன்று.

யாழ்ப்பாணத்தில் தாழ்த்தப்பட்ட மக்கள் அடிப்படை உரிமைகள் சிலவற்றைப் பெறுவதற்கே, குறிப்பாக ஆலயங்கள், தேனீர்க்கடைகளிற் பிரவேசிப்பதற்கும் பொதுக் கிணறுகளில் நீர் எடுப்பதற்கும் சமரச முயற்சிகள் பலனளிக்காது போக கடும் போராட்டங்களை நடத்த வேண்டி நேரிட்டது. அப்போராட்டங்களின் போது அவர்களுக்கு ஏற்பட்ட துன்பங்களும் இழப்புகளும் கொஞ்சநஞ்சமன்று.

சாதியத்தையும் அதற்கெதிரான போராட்டங்களையும் பற்றிய இந்நூல் எட்டு அதிகாரங்களைக் கொண்டது. முதலதிகாரம் சாதியமைப்பின் தோற்றமும் வளர்ச்சியும் பற்றியது. பேதங்கள் தோன்றிய சூழ்நிலையினையும் அவை வளர்ந்து வலுப்பெற்ற வாற்றினையும் பல ஆதாரங்களோடு காட்டுவதாய் அமைந்துள்ள இவ்வதிகாரம் சாதியத்தின் வரலாற்றை அறிவதற்கும் பயன்படும் பெறுமதி வாய்ந்தது. இலங்கையின் சாதி



படிப்பகம்

www.padippakam.com

யமைப்பின் இறுக்கம் என்ற தலைப்பிலான இரண்டாவது அதிகாரம் வடகீழ் மாகாணங்களில் சாதியமைப்பு எவ்வாறு உள்ளது என்பதை, குறிப்பாக வடக்கிற் பாரிய அளவு தீண்டாமை கொடுமைக்கு காரணமாய் விளங்குவதைக் காட்டுகிறது. தமிழர் மத்தியில் சாதி அமைப்பின் தாக்கம் பற்றிய அடுத்த அதிகாரம் பொருளாதார, அரசியல், சமய, கல்வி, பண்பாட்டுத் துறைகளிற் சாதியமைப்பு எத்தகைய தாக்கம் செலுத்தியது என்பதை எடுத்துக் காட்டுகிறது. நான்காவது அதிகாரம் காலனித்துவ காலத்திலிருந்து சுதந்திரம் வரை தீண்டாமைக் கெதிராக எடுக்கப்பட்ட முயற்சிகளையும் தாழ்த்தப்பட்டோர் தாபனரீதியாக இயங்கத் தொடங்கியமையையும் பற்றியது. ஐம்பதுகளில் இருந்து அறுபத்தியாறு ஒக்டோபர் வரையிலான வரலாற்றைக் கூறும் அடுத்த அதிகாரத்தில் தமிழர் தலைவர்கள் இடம்பெறாத ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் ஆட்சியின் போது தாழ்த்தப்பட்ட தமிழர் நிலை சற்று ஆசுவாசம் அளிப்பதாய் அமைந்தமை தெரிகிறது.

1966 ஒக்டோபர் எழுச்சியையும் அதன் வழி நிகழ்ந்த போராட்டங்களையும் அப்போராட்டங்களின் தாக்கங்களையும் பற்றிய ஆறும் ஏழாம் அதிகாரங்கள் ஆலயப் பிரவேசத்தையும் தேனீர்க் கடைப் பிரவேசத்தையும் முக்கியமாகக் கொண்டு தாழ்த்தப்பட்ட மக்கள் வெகுஜன ரீதியாக அரசியல் தலைமையின் கீழ் நிகழ்த்திய போராட்டங்களையும் அவற்றின் விளைவாகச் சாதியம் நிலைகுலைந்தவாற்றையும் விபரிக்கின்றன. இவ்வதிகாரங்களில் பிரசாரத் தொனியும் உணர்ச்சி வேகமும் சற்று மேலோங்கிக் காணப்படுவதும், 'சரியான' என்ற பதப்பிரயோகம் அடிக்கடி இடம்பெறுவதும், சில பகுதிகள் நேரடி வர்ணனைகளைப் போல் அமைந்துள்ளமையும் இந்நூலாசிரியர்கள் அப்போராட்டங்களில் ஈடுபட்டவர்கள் என்பதனாலாக இருக்கலாம்.

கடந்த கால வரலாற்றிலிருந்து பாடங்களைப் பெற்றுக் கொண்டு எதிர்கால விடுதலைக்கு உழைக்க வேண்டியவற்றை எட்டாவது அதிகாரம் சுருக்கமாகச் சொல்கிறது. எழுபதுக்குப் பின்னைய நிலையினைக் காட்டும் ஒரு சிறு குறிப்பும், சாதி எதிர்ப்புப் போராட்ட வரலாற்றின் முக்கிய கட்டங்களைக் காட்டும் ஒரு பட்டியலும் பின்னால் தரப்பட்டுள்ளன.

இந்நூலை வாசிக்கும் போது எண்ணத்திற்பட்ட சிலவற்றை இங்கு எடுத்துக் கூறல் சாலும்: மக்களாட்சி மலர்ந்ததாகக்



படிப்பகம்

www.padippakam.com

கூறப்படும் ஒரு காலகட்டத்தில் 'தமிழனென்று சொல்லடா தலை நிமிர்ந்து நில்லடா' என்ற சுலோகத்துடன் நான்கு தசாப்தங்களாகப் பாராளுமன்ற அரசியலில் மேனிலை பெற்றவர்கள் தமிழ் மக்களில் இலட்சக் கணக்கானவர்களை, மூன்றிலொரு பகுதியினரைத் தலை நிமிர விடாது தடுத்த, தலைகுனிவுக்குரிய சாதிமுறையினைச் சந்தர்ப்பவாத நோக்கில் அணுகினரேயன்றி மனப்பூர்வமாக அதனை ஒழிக்க எத்தனிக்கவில்லை.

தமக்கு மேலே உள்ளவர்கள் தங்களைத் தாழ்வாக நடாத்துவதைச் சகிக்காத சிலர் தமக்குக் கீழே உள்ளவர்களைத் தாழ்த்தியே வைத்திருக்க முனைவதும் தாழ்த்தப்பட்டவர்களே தமக்குள் உயர்வு, தாழ்வு கற்பிப்பதும் வேடிக்கையானவை. சிலர் தம் சாதிக்குத் தனிச் சங்கம் வைத்து அச்சாதி பெருமைக்குரிய வரலாற்றினையுடையதென்று நிரூபிக்க முயல்வதும் வேடிக்கையானதே.

தாழ்த்தப்பட்டவர்களும் சிலவேளைகளில் அந்நிலையினைத் தமக்கு வாய்ப்பாகப் பாவிக்க விழைவது - பிரிவு தேடவும் பதவி தேடவும் வாக்குச் சீட்டுப் பெறவும் அதனைச் சாதகமாக்குவது அவலமானது. போராட்டங்களை நடாத்திய மக்களும் தலைவர்களும் ஒருபுறமாக, வெறுமனே நின்றவர்கள் பிரசித்தியும் பதவியும் ஈட்டுவதும் அவ்வாறே. பேதங்களை ஒழிக்கப் போராடுவது வேறு, பேதங்களைத் தம் சுயநலனுக்கோ அரசியல் நலனுக்கோ பாவிப்பது வேறு.

உயர்த்தப்பட்ட சாதியினரை அடக்கும் முதலாளி வர்க்கமாகவும் தாழ்த்தப்பட்டவர்களை அடக்கப்படும் தொழிலாளி வர்க்கமாகவும் கொள்வது சாத்தியமன்று. உயர் சாதியினர் எனப்படுவோரில் பலர் உடமைகள் அற்ற ஏழைகள். அத்தகையவர்கள் பல சந்தர்ப்பங்களில் தங்கள் இல்லாமையையோ இயலாமையையோ மூடி மறைப்பதற்காக முட்டாள் தனமாகச் சாதியை இழுப்பதுண்டு.

சருவசன வாக்குரிமை, இலவசக் கல்வி பாடசாலைகள் அரசுடைமையானது, தாய்மொழி மூலக் கல்வி, மரவரி முறை, தவறணைமுறை முதலானவற்றால் ஏற்பட்ட தாக்கங்கள் சற்று விரிவாக நோக்கப்பட்டிருக்கலாம். இந்நூலைப் படிப்பவர்களுக்கு இதிற் குறிப்பிட்டிருக்க வேண்டியவை என்று இன்னும் பல நிகழ்வுகளும் விடயங்களும் நினைவுக்கு வரலாம். அவை பெரும்பாலும் சாதியத்தினதும் அதற்கெதிரான போராட்டங்களினதும் பரிமாணத்தை மேலும் ஊர்ஜிதம் செய்வனவாகவே இருக்கும்.

மனச்சாட்சியுள்ள தமிழ் மக்கள் யாவரும் இந்நூலைப் படிக்க வேண்டும்.

**பேராசிரியர் சி. தில்லைநாதன்**



படிப்பகம்

www.padippakam.com

# அஸ்தமிக்காத சூரியன்

- சாருமதி

அஸ்த மனங்கள்
அஸ்த மனங்களல்ல
அவை
அடுத்த புறத்தின் உதயங்கள்.

தோல்விகள்
தோல்விகளல்ல
அவை
வெற்றியின் தொடக்கம்

அரசியல் ஏமாற்று . . .
அடக்கி ஒடுக்கப்படும் உண்மைகள் . . .
அரண்மனையாளர் கெக்களிப்பு . . .
உலகில்
இவை யொன்றும்
அதிசய மானவையல்ல
ஆயின்-
மக்கள்
அந்தப் புரத்து அடிமைகளும் ஆகார்.
அவர்களின்
முஷ்டிகள் உயரும் பொழுது
மலை முகடுகளும் சிதறும்.

திரும்பத் திரும்பக் கேட்கின்
சொல்வதற்கு ஒன்றுதான் உண்டு.,

வர்க்கப் போரின்
வழியை மறிக்கலாம்
ஆயின்
அதன் வரவை
சிதைக்க முடியாது
ஏனெனில் அது
அஸ்தமிக்காத சூரியன்
ஆம்!
இன்றைய இலங்கைக்கும்
இதையே நான் சொல்வேன்.



படிப்பகம்

www.padippakam.com

# விடியலின் விலகல்!

இ. அனுரதன்

குறைவான சுவாசம்
எளிதாய்ப்போன காலம்
இடறல்கள் சாத்தியமென்பதால்
உணர்வுகள் காட்ட வழியேயில்லை

இவர்கள்-
'குற்றவாளி'களை அடையாளம் காட்டாமல்
சத்தியத்திற்கு அல்லவா சமாதிகட்டுகிறுர்கள்!

அநியாய வல்லூறுகளைப்
பொசுக்க வேண்டிய தோட்டாக்கள்,
அப்பாவிக் கொக்குகளைப் பதம்பார்ப்பதேனே''?

சட்டம் அதிகாரத்தைக் கண்டவுடன்
பாதை நிறம்மாறிப் போகிறதாம்...!

இவர்கள்-
வெளிச்சத்துக்கு வழிகூறுமல்
இருட்டுக்குத் தாலாட்டுப் பாடுவதால்
விடியல் கூட விலகிப் போய்விடுகிறது!

நாம் -
விடியலின் வாசல்வரை சென்று,
விரட்டப்பட்டவர்கள்...

மனமோ,
நாய்க்குப் பயந்து நரியிடம் ஓடியதை
கசப்புடன் அசைபோடும்

ஆனலும்,
எமக்கு ஒரேயொரு
காலங்காலமான நம்பிக்கை
'நிலைப்பின் உறுதி' தளராத வரை
விடியல் சாத்தியமென்பதே...!



படிப்பகம்

www.padippakam.com

# இலக்கிய சிந்தனைகளை வளப்படுத்திக்கொள்ள உதவக்கூடிய நூல்

- ஒரு பார்வை

*நூல்;* இன்றைய உலகில் இலக்கியம்

*ஆசிரியர்;* முருகையன்

*விலை ;* ரூபா 49-00

*வெளியீடு:* தேசிய கலை இலக்கியப் பேரவைக்காக சென்னை புக்ஸ்

நாடறிந்த கலைஞர் முருகையன் அவர்கள் எழுதியுள்ள இந்நூல் உயர்ந்த அட்டை முகப்புடன் வெளிவந்துள்ளது. நூல் ஆசிரியர் நம் நாட்டின் பட்டி தொட்டிகள் எங்கும் அறிமுக மானவர் என்பதனாலோ என்னவோ அவர் பற்றிய விபரமோ அன்றி ஒரு குறிப்புரையோ கூட நூலில் காணமுடியவில்லை -தஞ்சாவூர் தமிழ்ப்பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த இராமசுந்தரம் அவர்களின் முகவுரையைத்தவிர.

நூலின் தலைப்பைப் பார்த்ததும் இன்றைய நம் இலக்கிய உல கின் வக்கரித்த நிலையை சாங்கோபாகமாக ஆராய்ந்து அக்கு வேறு ஆணிவேறாக விளக்கப்போகிறார் என்று தான் எண்ணத் தோன்றியது. உள்ளே சென்றதும்தான் தெரிந்தது, வெறும் பிரச்சினை கிளப்பலுக்காக இந்நூல் எழுதப்படவில்லை என்பது. இன்றைய நம் இலக்கிய வாதிகள் அனைவருமே, ஏன் இலக்கிய மாணவர்களும் கூட வாசித்து அறியவும் அதன் மூலம் தம் இலக்கிய சிந்தனையை வளப்படுத்திக் கொள்ளவும் வழிவகுக்கக் கூடிய பல விடயங்களை கவிஞர் தமக்கே உரிய மிகத் தெளி வான நடையில் எழுதியுள்ளார். சர்ச்சைக்குரிய விடயங்களை கூட ஆசிரியர் எதிர்க்கருத்தாளர்களின் மனம் நோகாவிதத்தில் அவர்களின் சிந்தனையைத் தூண்டும் விதத்தில் கையாண்டிருப் பது அவரது திறமையை நன்கு எடுத்துக்காட்டுகின்றது.



படிப்பகம்

www.padippakam.com

இலக்கியம் ஏன்? என்ற தலைப்பில் அமைந்துள்ள முதலாவது கட்டுரையில் இலக்கியத்தின் பெறுமதியைப் பற்றி ஆசிரியர் பேசுகையில் இவ்வாறு கூறுகின்றார்:

''. . . எழுத்தாளனின் பேனா தன்னைச்சூழவுள்ள உலகத்தின் சிற்சில பகுதிகளைச் செப்பமாகச் சித்தரிக்க முயலுகிறது. அந்தச் சித்தரிப்பின் அடியிலே உலகுக்குப் பயன் படத்தக்க செய்தியொன்று அடிக்கருத்தாக இழைக்கப்பட்டிருக்கிறது. பிரதான அடிக்கருத்தோடு துணைக்கருத்துக்கள் சிலவும் அவனது இலக்கியப் படைப்பில் அமைந்து மிளிரலாம். அக்கருத்துக்களும் எண்ணங்களும் ஆகிய எல்லாம் உண்மை வாழ்க்கையுடன் எங்ஙனம் தொடர்பு கொண்டுள்ளன என்பதைப் பொறுத்தே இலக்கியப் படைப்பின் பெறுமதி''

தமிழ் இலக்கியத்தில் நல்ல கதைகள் பற்றி பேசுகையில் ஆசிரியர் பின்வருமாறு ஓர் இடத்தில் குறிப்பிடுகின்றார்: ''...... செம்மை நலமிக்க சீரிய வாழ்க்கையை நோக்கிய நீண்ட நெடும் பயணத்தை விசுவாசத்துடன் தீட்டிக்காட்டி நன்னம்பிக்கையையும் எழுச்சியையும் ஊக்கத்தையும் ஊட்டுவனவே நல்ல கதைகளாகும். இப்பண்புகளை உடைய இலக்கியங்களே நல்லிலக்கியங்களாம்.''

முற்போக்கு இலக்கியம் என்பது மனித சமுதாயத்தை அதன் தாழ் நிலையிலிருந்து உயர்த்தும் அல்லது மேன்மையடையச் செய்யும் நோக்கத்தைக் கொண்டதாய் இருக்கும் என்பது பொதுவான கருத்து - இந்த வகையிலேயே பேராசிரியர் கைலாசபதி அவர்களின் கருத்தும் அமைந்துள்ளது கவிஞர் முருகையன் இதற்கு மாறுபட்டவர் அல்லதான்; ஆனால் அந்த முற்போக்கு இலக்கியத்தைப் படைக்கும் கலைஞனின் தன்மை அல்லது ஆற்றல் எங்ஙனம் அமைந்திட வேண்டும் என்பது பற்றி இவர் துல்லியமாகப் பேசுகிறார்.

மரபு என்பதின் இரண்டு கூறுகளைப்பற்றி விளக்கவரும் கவிஞர் முற்போக்கு இலக்கியவாதிக்கு இருக்கவேண்டிய பண்பினைக் குறிப்பிடுகின்றார். அதை அவர் மொழியில் பார்ப்போம்;-

''......மரபிலே முற்போக்கான கூறுகளும் உண்டு; பிற்போக்கான கூறுகளும் உண்டு மனித குல வரலாற்று மேம்பாட்டுக்கு உறுதுணையாக நின்று உதவியவை முற்போக்கான கூறுகள்;



படிப்பகம்

www.padippakam.com

அந்த மேம்பாட்டை மறுத்தும் எதிர்த்தும் தடைபோட முயன் றவை பிற்போக்குக் கூறுகள். மரபு என்பதிலுள்ள இந்த இரண்டு ஆதிக்கங்களையும் பகுத்துணரும் ஆற்றல் முற்போக்குக் கலைஞனுக்கு இருத்தல் வேண்டும். அவ்வாறு பகுத்துணர்ந்து மரபிலுள்ள பிற்போக்கான கூறுகளைக்களைந்து அப்பால் வீசிவிட வேண்டும். அவற்றை நிராகரித்துத்தள்ளுதல் வேண்டும். அவ் வாறு தள்ளிவிட்டு மரபின் முற்போக்கான கூறுகளை மாத்தி ரமே தன் படைப்புகளுக்கு உரம் தரும் வகையிலே பயன்படுத் தல் வேண்டும் அவ்வாறு பயன்படுத்தும் கலைஞனே முற்போக்குக் கலைஞன் எனப்படும் தகுதியை உடையவனுவான்'' என்பதாகும்.

இரவல் மனப்பான்மையும மேற்குமய மோகமும் என்ற தலைப்பில் எழுதப்பட்டுள்ள நீண்டகட்டுரையில் இன்றைய இலக்கியக்காரர்கள் நன்கு சிந்திக்கவேண்டிய சிலவிடயங்களை மிக உறைப்பாகவே குறிப்பிடுகின்ருர் ஆசிரியர்.

முதல் இலக்கியம், வழிஇலக்கியம், சார்பு இலக்கியம் என விபரித்துக் செல்லும் ஆசிரியர், வழிஇலக்கியம், சார்பு இலக்கியம், முதலியவற்றில் காணப்படும் இரவல் மனப்பான்மையைக் கடுமை யாகச் சாடுகிருர் ஓர் இடத்தில் ''இரவல் மனப்பான்மையின் கொடுமைமையை இன்று தமிழகத்தில் எழுதி வெளியிடப்பட்டு ஏற்றுமதி செய்யப்படும் பெருவாரியான கவர்ச்சி புத்தகங்களிலே நாம் நன்கு காணலாம்'' என்கிருர்.

இன்ஞேர் இடத்தில்'' பெருவியாபாரப் புத்தகங்களான குமுதம், ஆனந்தவிகடன், தினமணி கதிர், இதயம் பேசுகிறது போன்ற சஞ்சிகைகளில் வெளியாகும் கதைகளில்வரும் கதாநாய கன் யார்? அக்கதைகள் யாரைப்பற்றிப் பேசுகின்றன? என்று கேட்கிருர். அதோடு விடவில்லை ''கஞ்சி குடிப்பதற்கு இல்லார்'' என்ற பாரதி பாடலை நினைவுறுத்தி அந்தமக்கள் எல்லாம் எங்கே? அவர்கள் சீரும் சிறப்பும் பெற்று மங்கலமாக வாழ்கின்ருர்களா? என்றுகேட்கிருர். ''இன்னும் துஞ்சி மடியும் அந்தமக்கள் பற்றி அந்த இன்னல்களுக்கான காரணத்தைப் புட்டுக் காட்டி, தன்னம் பிக்கை ஊட்டி எழுச்சிப்பாதையிலே இவர்களை இட்டுச் செல்லும் உயிர்ப்பையும் ஊக்கத்தையும் தரும் எண்ணங்கள் பற்றி எவ்வா ருன எண்ணங்களையெல்லாம் பக்குவமக கலைகளாாக உருமாற்றிப் படைப்பது பற்றி இம்மியளவேனும் அக்கறை உண்டா இந்தவியா பாரக்கதை எழுத்தாளர்களுக்கு''? என ஆவேசப்படுகிருர்.



படிப்பகம்

www.padippakam.com

உண்மையான வாழ்க்கையின் உருப்படியான பிரச்சினைக ளுக்கு முகங்கொடுக்காது விலகும் ஒருபோக்கினை இவர்கள் வளர்க் கிறார்கள்: வேறொருவகையில் சொன்னால் வர்க்க உணர்வை இவர் கள் மழுக்குகிறார்கள் என்று விளக்குகிறார்.

இவ்வாறு நூலின் ஒவ்வொரு பகுதியும் சுவைத்து படிக்கக் கூடியதாகவும் சிந்திக்க வைப்பதாகவும் அமைந்துள்ளமை குறிப் பிடத்தக்கது.

இன்னும் இன்றைய முற்போக்கு இலக்கியங்களின் வளர்ச்சிக் கும், மக்கள் மத்தியில் அவை பரவுவதற்கான வாய்ப்புக்கும் ஆசிரியர் ஒரு யோசனையையும் வெளியிடுகின்றார்.

கவிதையரங்குகள், கதை அரங்குகள் ஏற்கனவே நடைமுறை யிலுள்ள இலக்கிய அரங்குகளை நவீனப்படுத்தி தேவையான கதைகள், கவிதைகள் போன்றவற்றை வாசித்து விளக்கும் அரங்கு களாக அவைகளை மாற்ற வேண்டும் என்கிறார். இதன்மூலம் இலக்கியத்தின் தரத்தை உயர்த்த முடியும். இலக்கிய அரங்குக்கு ஏற்ற வகையில் தம் கலைப் படைப்பின் வடிவத்தையும் நடையை யும் கூட எழுத்தாளர்கள் மாற்றி அமைக்க முன்வரலாம். மொழி யின் ஆற்றலைக் கூர்மைப்படுத்தி இலக்கியத்தின் தரத்தை உயர்த்த இவர்கள் முன்வரலாம் என்று கருதும் ஆசிரியர் இலக் கியத் தொடர்பால் மக்களின் மனவளம் அதிகமாகும் மக்கள் தொடர்பால் இலக்கியமும் வளம் பெறும் என்றும் நம்புகின்றார்.

குறிப்பாக இலக்கிய ஆர்வலர்கள், கல்லூரி பல்கலைக்கழக மாணவர்கள் தம் இலக்கிய சிந்தனையை வளப்படுத்திக் கொள்ள இந்நூல் உதவியாக இருக்கும் என்று கூறலாம்.

பி. எஸ். பி.

## அறிவித்தல்

தாயகம் 20 வது இதழ் கனதியாக இருந்தமை குறித்து அநேக அன்பர்கள் பாராட்டி எழுதியுள்ளார்கள். அதே தரத்தைப் பேணும் பொருட்டு தொடர்ந்து தாயகத்தின் விலை பத்து ரூபா வாக இருக்கநேர்ந்தால் ஏற்போம் என்ற உறுதி அவற்றினூடு வெளிப்பட்டது. அந்தவகையில் தாயகம் தொடர்ந்து அதிகபக்கங் களுடன் ரூபா 10 இற்கு வெளிவரும் என்பதை அறியத்தருகிறோம்

-ஆசிரியர் குழு



படிப்பகம்

www.padippakam.com

# தோற்றம்

- சிவா

மரங்களின் பசுமை வனப்பிடைச்
செம்மையின் குலியல்
மெலிதான வெயிலில்
பொன்னுஞ் செம்பும்
பின்னிப் படரும்,
இன்னும் உதிராத மலர்களும்
இதமான காற்றும்
இளங்குளிரும்
இலேசான வெதுவெதுப்பும்
இளவேனில் போல
ஆயினும்
மனமறியும்
இலையுதிர்காலமென.

# நெடுமரங்கட்கு ஓர் அஞ்சலி

- மாவலி

புற்களை விரும்பிக் கால்கள் பதிப்பீர்
குட்டைச் செடிகளை உதைத்து மிதிப்பீர்
நிமிர்ந்த நெடுமரம் வணங்க மறுக்கும்
கொடுவாள் ஏந்தி வெட்டிச் சரிப்பீர்

விதைகளினின்றும் வேர்களினின்றும்
மரங்கள் விளையும் விந்தை அறியா
மூடர் நீவிர்

கையில் ஏந்திய ஆயுதங் கனத்து
இரும்பு நெகிழ்ந்து கயிறாய்த் திரிந்து
கையைப் பிணைத்துக் கழுத்தை நெரிக்கையில்
விழுந்த மரங்கள் வனமெனச் சூழும்



படிப்பகம்

www.padippakam.com

# கலைப்பாரம்பரியமும் வைரமுத்துவும்

- குழந்தை ம. சண்முகலிங்கம்

கருத்துப் பரிவர்த்தனையே கலையின் சாரமாக அமைகிறது. கலைகளை இரண்டு வகையினவாகப் பிரிக்க முடியும்: ஒன்று ஓவியம், சிற்பம் எழுத்து போன்று, ஒன்றைச் ''செய்தா'' அல்லது ''உருவாக்குதல்'' (Making). இக்கலையைப் பொறுத்தவரையில், படைக்கப்படும் பொருளை அதனைப் படைக்கும் கலைஞனிலிருந்து வேறுபடுத்திப் பார்க்கக் கூடியதாக இருக்கும்; அதாவது கலைஞன் இல்லாவிடத்தும், அவன் சிருஷ்டித்த கலைப் பொருளைப் பார்த்து நயக்க முடியும். உ+ம் சிற்பத்தை நயப்பதற்கு. அதனைப் படைத்த சிற்பி அதனருகே நிற்க வேண்டிய அவசியமில்லை: சிற்பம் இருந்தால் மட்டும் போதும். இரண்டாவது வகையான கலை என்பது இசை, நடனம், நாடகம் போன்று ஒன்றைப் ''புரிவதை'' அல்லது ''நிகழ்த்துவதை'' (doing) க் குறிக்கும். இவ் வகையினை நாம் நிகழ்த்தப்படும் கலைகள் அல்லது அவைக் காற்று கலைகள் எனலாம் இக்கலைகளைப் பொறுத்தமட்டில் நாம் அவற்றைச்சிருஷ்டிப் பவரிலிரிந்து பிரித்து நோக்குவது கடினம். விஞ்ஞான வளர்ச்சியின் பெறுபேருக. ஒலி, ஒளிப் பதிவு நாடாக்கள் இருப்பதனுல் அக்கலை நிகழ்ச்சிகளைப் பதிவு செய்து விரும்பிய வேளையில் திரும்பப் பார்த்துக் கொள்ளலாம் எனக் கூற முடியும். ஆயினும், ஒலி, ஒளி நடாக்களால் நிகழ்வைப் பதிவு செய்து கொள்ள முடியுமென்பது உண்மையாயினும், அவற்ருல் ''வாழும் அரங்கை'' அல்லது உயிர்த் தன்மையுள்ள அரங்கை அப்படியே இயற்கை உணர்வு வெளிப்படுமாறு பதிந்து கொள்ள முடியாது.

அரங்கம் என்பது வெறுமனே ஆடும் கலைஞரையும், மேடையையும், காட்சியமைப்புக்களையும், ஒலி, ஒளி வசதிகளையும் மட்டும் உள்ளடக்கிய ஒன்ருக இருப்பதில்லை. பார்வையாளரின்றி அரங்கம் முழுமை பெறுவதில்லை. ஏனவே அவைக் காற்று கலைகள் என்பன பார்வையாளரையும் உள்ளடக்கி எழுகின்ற ஒரு கலானுபவமாகும். மேடையில் நின்று அறிக்கை செய்யும் கலைஞரும், அவையோரும், ஒருவர் மற்றவரின் உணர்வோட்டங்க்ள், உணர்வுந்தல்கள் என்பவற்றின் எதிர்வினைகளின் தாக்கங்களுக்குப் பரஸ்பரம் ஆளாகின்றனர். கலைஞரும் பார்வையாளரும் இவ்வாறு கொண்டும் கொடுத்தும் வளர்த்து வருவதே அரங்கக் கலை மூலம் பெறப்படும் அனுபவ முழுமையாகும். ஒரே அரங்க அறிக்கையை



படிப்பகம்

www.padippakam.com

வெவ்வேறு வகையான பார்வையாளர் மத்தியில் நிகழ்த்தும்போது வெவ்வேறுபட்ட அனுபவமே பார்வையாளருக்கும் கலைஞருக்கும் கிடைக்கப் பெறுகிறது. எனவே, நிகழ்ச்சி ஒன்ருக இருப்பினும் பார்வையாளர் வேறுபடும் வேளையில், அக்கலையாக்கத்தால் விளையும் அனுபவம் வேறுபட்டதாகவே அமைகிறது. இவ்வேறுபாடு என்பது வெறுமனே பார்வையாளரின் தரம், அறிவு, அனுபவம், பொருளாதார சமூக நிலை என்பவற்ருல் மட்டுமன்றி அரங்கில் ஒன்றுகூடும் பார்வையாளரின் எண்ணிக்கையைப் பொறுத்தும் வறுபடுவதுண்டு. 1000 பேர் இருந்து பார்க்கக்கூடிய ஒரு அரங்கில் 75 பேர் மட்டுமே ஒன்றுகூடிப் பார்வையாளராக அரங்கில் பரந்திருப்பரேயாளுல் கலைஞர், பார்வையாளர் என்ற இருசாரரும் முழுமையான அவைக்காற்றுகை அனுபவத்தைப் பெறமுடியாதவராக இருப்பர். இந்தவகையில், அரங்கக் கலைகள் யாவும் அங்கு கூடும் அவையோரின் உணர்வு வெளிப்பாடுகளையும் உள்ளடக்கி நின்றே தமது அனுபவத்தை நிறைவு செய்கின்றன என்பது புலனுகின்றது. அவைக் காற்றுகையில் பார்வையாளரின் பங்கும் அவர்களது உணர்வுகள், உணர்ச்சிகள் எதிர்வினைகள் என்பன மூலம் இன்றியமையாத ஒன்ருக அமைகிறது. ஆகவேதான் அரங்கக் கலைகளை ஆராயுமிடத்து அவற்றை, அவை நிகழ்த்தப்பட்ட களத்தை, சூழலை (அதாவது, பார்வையாளரை உள்ளடக்கிய அரங்கை) வைத்து ஆராய வேண்டுமென்பது அவசியமாகின்றது. அவ்வாறு இல்லாது, அக்கலை நிகழ்வுகளையும் கலைஞரையும், அவை நிகழ்த்தப்பட்ட சூழலிருந்து பிடுங்கியெடுத்து வைத்துக்கொண்டு ஆராய்வதென்பது, அவ்வறிக்கைகள் பற்றிய முழுமையான தன்மையை அறிந்துகொள்ளவும், உணர்ந்து கொள்ளவும் உதவாது

இவ்வடிப்படையைக் கருத்திற் கொண்டே நாம் வைரமுத்து அவர்களின் அளிக்கைகளை நோக்கமுடியும். எனவே, வைரமுத்துவின் அரங்கை நயந்த மக்கள் கூட்டத்தை நாம் முதற்கண் இனங்கண்டு கொள்ள வேண்டும் வைரமுத்துவின் பார்வையாளர், பிற்காலத்தில் பரந்து பட்டவர்களாக இருந்தார்கள் என்பது உண்மையெனினும், அவ்வரங்கினைப் பார்வவயாளர் என்ற வகையில் ஆக்கிரமித்துக் கொண்டவர்கள் யார்? யாழ்ப்பாணப் பிரதேசத்தின் கிராமப்புற மக்கள்தான் அவ்வாக்கிரமிப்பாளர்கள்; அக்கிராமப்புறத்தவருள்ளும், பொருளாதார ரீதியாகவும் சமூகரீதியாகவும், சமய ரீதியாகவும், கலாசார ரீதியாகவும் ஒடுக்கப்பட்ட மக்களே முதன்மை வகித்தனர். வைரமுத்துவின் கலை வடிவம் தங்களது சொந்தக் கலை வடிவம் என்று அவர்கள் கொண்டாடினுர்கள். தமது மக்கள் கூட்டத்தினரின் சமய, சமூக, காலசார உறுதிப்பாட்டின் ஒன்றிணைப்பின் சின்னமாக, குறியீடாக, வெளிப்



படிப்பகம்

www.padippakam.com

பாடாக அவர்கள் அதனைக் கருதினர். அக்கலையைத் தனதாக்கிக் கொண்டு வளர்த்தெடுத்து ஆடிவந்த அக்கலைஞன், தனது சமூகத்தவரின் தன்னம்பிக்கையை, அந்தஸ்தை உயர்த்தி விட்ட 'பிராமணன்' ஆகிறுர். (வீ. வீ. வைரமுத்து அவர்களின் மரணச்சடங்கின் போது, அவரது தலைமாட்டில் குந்தியிருந்து கொண்டு தனது சோகத்தைக் காட்டிக் கொண்டிருந்த அவரது மனையாள் 'என்ரை பிராமணர், கூத்துக்குப் போவிட்டு வந்து களைப்பில படுத்திருக்கிறியளோ, என்ரை பிராமணரே!' என்று திரும்பத் திரும்பக் கூவிக்கொண்டிருந்தார்.) வள்ளுவனுக்கு ''அந்தணன் என்போன் அறவோ' ஞக இருக்க முடியுமானுல், அம்மையாருக்குப் 'பிராமணன்' என்பது தன்னையும் தன் சமூகத்தையும் உயர்த்தியவன் என்ற பொருளில் இருப்பதில் என்ன தவறிருக்க முடியும்?

இசை நாடகம் எவ்வாறு வைரமுத்துவின் முன்னவரினதும், வைரமுத்துவினதும் கலைமரபாக மாறியது என்ற வரலாற்றை இங்கு விபரிக்க வேண்டிய அவசியமில்லை எனக் கருதிக்கொண்டே இந்தியாவிலிருந்து இங்கு வந்த அந்நாடக மரபு எவ்வாறு வைரமுத்துவால் சுவீகரிக்கப்பட்டுக் கொண்டது என்னும் வரலாறு கூறப்படாது விடப்படுகிறது. (காரை. செ. சுந்தரம்பிள்ளையின் நூல் விரைவில் வெளிவரும் போது இவ்விபரம் வாசகருக்கு நன்கு தெளிவாகும் என நம்பலாம்).

எனவே, வைரமுத்துவின் கலை முயற்சிகளுக்கு "முழுமை'' என்ற பண்பினைக் கொடுத்த முக்கியமான பார்வையாளர் கூட்டமாக அமைந்திருந்த அடிநிலை மக்களின் மனேபாவமும், உணர்வும் உள்ளக்கிடக்கையும் எந்த வகையில், அக்கலைப் படைப்புக்களின் வீரியத்துக்கும், வெளிப்பாட்டுக்கும், வெற்றிக்கும், வழி வகுத்தன என்பதை நாம் கருத்திற் கொள்வது அவசியம்.

இலங்கையின் கூத்துக் கலைகளோடு ஒப்பிடுகையில், ''இசை நாடகம்'' மிகப் பிந்திய காலத்தில் இலங்கைக்கு வந்து சேர்ந்த ஒன்ருக இருப்பினும். அது தனது பண்பின் பயனுக, எமது பாரம்பரியக் கலைகளுள் ஒன்றெனக் கருதப்படும் பான்மையைப் பெற்றுவிட்டது. பல நியாயமான காரணங்களால் வைரமுத்து பிரபல்யம் பெற்றுவிட்டதன் பயனுக, இசை நாடகம் வைரமுத்துவின் நாடகம் என மக்கள் மத்தியில் மதிப்புப் பெற்றிருக்கும் இவ்வேளையில், பாரம்பரியக் கலைகளுள் ஒன்ருக அவ்வடிவம் அமைந்துள்ள காரணத்தால், 'பாரம்பரியம்' என்பது பற்றியும் நாம் சிறிது சிந்திப்பது பொருத்தமுடையதாக இருக்கும்.



படிப்பகம்

www.padippakam.com

பாரம்பரியம் என்பது முற்றுமுழுதாக மாற்றத்துக்கு விரோதமானதொன்ரு? அல்லது பழையன எனக் கருதப்படுவன கழிந்து செல்ல விடப்பட்டுப் பொருந்துவன எனக் கருதப்படும் புதியன புகுத்தப் படுவதற்கு இடமளித்துக் காலத்தோடு வளர்ந்து வருவது தான் பாரம்பரியமாக? கலைகளைப் பொறுத்தவரையில் பாரம்பரியம் என்பது என்ன? நாம் பாரம்பரியக் கலைவடிவங்கள் என்று கூறும் எமது கலைவடிவங்களை, எதனை அடிப்படையாகக் கொண்டு வேறுபடுத்திக் காண்கின்ருேம். உ+ம் மட்டக்களப்பின் வடமோடிக் கூத்திலிருந்து தென்மோடிக் கூத்தை எவற்றை அடிப்படையாகக் கொண்டு வேறு பிரித்துப் பார்க்கிருேம்? அவை ஆடப்படும் பாடப்படும் முறைமையினைக் கொண்டு அவைக்காற்றப்படும் மோடியைக் கொண்டு வேறுபடுத்தப்பட்டுள்ளனவா? இவ்வவைக் காற்று முறைமை அல்லது மோடியைக் கொண்டுதான் 'நாட்டுக்' கூத்திலிருந்து காத்தவராயன் கூத்தை வேறுபடுத்துகிருேமா? ஒவ்வொரு பிரதேசத்தின் கூத்துக்களையும் இவ்வாறு நோக்கித்தான் வகைப்படுத்துகிருேமா?

அவ்வாறு அவைக்காற்று முறைமை அல்லது மோடிதான் இவை ஒவ்வொன்றினதும் தனித்துவத்தைப் பேணுகின்றதென்ருல், அம்மோடியினை வழுவுபெற விடாது, அவற்றின்கலைவடிவைக்காலத்தோடு ஒவ்வ வளர்த்தெடுக்க முடியாதா? பந்தம் பிடித்தாடிய கூத்தை இன்றுள்ள ஒளி வசதிகளுடன் மேடையிடக் கூடாதா? வட்டக் களரியில் ஆடியதைப் படச்சட்ட மேடையில் தயாரிக்கக் கூடாதா? அதன் அடிப்படைப் பண்பினை மாற்ருது தயாரிப்பு முறைமையை மாற்றுவது பாரம்பரியச் சிதைவாகுமா? அவ்வாறு செய்வதைச் சிதைவெனக் கொண்டால் வைரமுத்து அக்குற்றத்துக்கு ஆளாக நேரிடும்.

வைரமுத்து தனது திறமை, ஆளுமை, அர்ப்பணிப்புக்காரணமாகப் பரந்துபட்ட அளவில் பிரபல்யம்பெற்றுக் கொண்டிருந்த வேளையில் பல்கலைக்கழக அரங்குகளிலும், பட்டணத்து அரங்குகளிலும் ஆடவேண்டியவராக இருந்தவர். அவ்வாறு ஆடியவேளையிலும், அவர் தனது நாடகமரபின் அடிப்படைபண்பினை மாற்ருது மேடைதயாரிப்பு முறைமைகளிலும் நடிப்பு நுட்பங்களிலும் மாறுதல்களைச் செய்து வந்துள்ளமையை அவதானிக்கமுடிகிறது. அதற்காக, அவர் சங்கீதக்கச்சேரிகளில் பாடப்படும் முறைமைகளை தனது இசைநாடக மோடிக்குள் புகுத்தித்தன்னைக் குழப்பிக்கொள்ளவில்லை. இரண்டு மோடிகளையும் அவர் தெட்டத் தெளிவாக அறிந்திருந்ததனுல், அவரால் இசைநாடகத்தின் பொதுவான மோடியைச் சிதையாது, அந்தநாடக மரபைக் காலத்தோடு இணைத்து வளர்த்து வரமுடிந்தது.



படிப்பகம்

www.padippakam.com

பாரம்பரியக் கூத்து வடிவங்களை ஆடிவருகின்றவர், கிராமத்தவராகவும், பெரும்பாலும் கல்வி அறிவுபோதியளவு இல்லாதவர்களாகவும் இருப்பதோடு, குறித்த கூத்துக்கள் ஆடப்பட்டுவந்த சூழலில் பிறந்து வளர்ந்ததால், அவற்றில் ஏற்பட்ட பரிச்சயம் காலமாக எழுந்த பற்றினுல் அவற்றை ஆடுகின்றவர்களாகவும்'. இருக்கின்றூர்களேயன்றி, ''பாரம்பரியக் கூத்துக்கள் எமது மக்கள் கூட்டத்தினரின் தனித்துவத்தை, கலாசாரத்தை நிலை நிறுத்த உதவும் கலைப் பொக்கிஷங்கள்'' என்ற உணர்வினைப் பெற்றவர்களாக இருக்க வாய்ப்பற்றவர்களாகவே இருக்கின்றனர். இதன் காரணமாக அவர்கள், தாம் ஆடிவரும் கலை வடிவங்களுள், காலத்துக்குக் காலம் தம்மைக் கவர்ந்தபிற வடிவங்கள் சிலவற்றையும் இணைத்து விடுகின்றனர். இதன் காரணமாகவே எமது பாரம்பரியக் கூத்துக்கள் சிலவற்றுள் சினிமா மெட்டுக்களும், தேவாரதிருவாசகங்களும், கர்நாடக இசை மெட்டுக்களும் புகுந்து செல்வதை நாம் அவதானிக்கக் கூடியதாகவுள்ளது.

வைரமுத்து அவர்களை இந்த வில்லங்கங்கள் ஆட்கொள்ளவில்லை அவர் போதியளவு கல்வி அறிவுடையவராகவும், கற்றவர் கருத்தைக் கேட்பவராகவும், பன்முகப்பட்ட தொடர்புடையவராகவும், தனது கலை வடிவத்தின் தனித்துவத்தை நன்குணர்ந்தவராகவும். அக்கலையில் இயல்பாகவே பற்றும் விசுவாசமும் உடையவராகவும் தனது ஆளுமைக்கவர்ச்சிமூலம் தன்னுேடிணைந்த கலைஞரைக்கவரக் கூடியவராகவும் இருந்ததால், அவர் கைக் கொண்ட கலை அவரை விட்டுக் கை நழுவிச் செல்லவில்லை; அது உருவச் செழுமையும், உள்ளடக்கச் செறிவும், மோடிப்பலமும் கொண்டதாக வளர்ந்து வந்தது.

வைரமுத்துவின் கலை வடிவம், கலைப் பாரம்பரியம், அவரோடு நின்று விடாது தொடர்ந்து வளரும் என்பதற்கான நல்ல அறிகுறிகள் தென்படுகின்றன. அவரோடு பல்லாண்டு காலமாக இணைந்து பணியாற்றிவந்த கலைஞர், அப்பணியினைத் தொடர்வதற்கான முயற்சிகளில் ஈடுபட்டு வருகின்றனர். வைரமுத்து அவர்களை அருகிருந்து அறிந்து, அவரது பண்புகளைப் போற்றி மகிழும் இக் கலைஞர்கள் நிச்சயமாக, வைரமுத்துவின் வழியில் நின்று கலைப் பணிபுரிவார்கள் என்பதில் ஐயமில்லை.

பாரம்பரியக் கலை வடிவங்கள் என்பவை, மக்களோடு இணைந்து நின்று, அவர்களின் வளர்ச்சியோடு தாமும் சேர்ந்து வளர்ந்து வரவேண்டும் என்பதையும், அத்தகைய வளர்ச்சியின் போது, அக் கலை வடிவங்கள் யாவும், தத்தமது தனித்துவமான அடிப்படைப் பண்பையும் மோடியையும் தவற விட்டு விடாது, தயாரிப்பு முறைமைகளில் காலத்தோடு வளரவேண்டும் என்பதையும் இக் கலைகளில் ஈடுபாடு கொண்ட கலைஞரும், கலைஞரை ஈடுபடுத்த முற்படும் அறிஞர்களும் உணர்ந்து செயலாற்றத் தலைப்பட்டால். எமது கலைப் பாரம்பரியம் பாதுகாக்கப் படும் என்பது உறுதி. அவ்வாறு செய்வதன் மூலமே நாம் வைரமுத்து போன்ற கலைஞர்களுக்கு நன்றி செலுத்தியவர்களாவோம்.



படிப்பகம்

www.padippakam.com

# கலை இலக்கியமும் அரசியலும்

- சிவசேகரம்

வர்க்க சமுதாயத்தில் மனிதனது ஒவ்வொரு சிந்தனையும் செயற்பாடும் வர்க்கத்தன்மையுடையது என்ற கருத்தை மாக்ஸியச் சிந்தனையாளர்கள் பலரும் திரும்பத்திரும்ப வலியுறுத்தி வந்துள்ளனர். வர்க்கத்தன்மையின் சுவடுகள் அரசியலில்மட்டுமின்றி விஞ்ஞானம் மருத்துவம், தொழில் நுட்பம் போன்ற அறிவுத்துறைகளிலும் மொழி, மதம், சடங்கு, சம்பிரதாயங்கள், கலை, கலாச்சாரம் போன்ற மானுடவியற் துறைகளிலும் தவறாது பதிந்திருக்கக் காணலாம். கலையை மனிதவாழ்வின் மற்றைய செயற்பாடுகளினின்றும் பிரித்து அவற்றினின்றும் உயர்ந்தும் வேறுபட்டும் நிற்கும் ஒன்றாகவும் கலைஞன் சமுதாய மனிதனியின்றும் வேறுபட்டவனாகவும் காட்டுகின்ற ஒரு போக்கையே ''கலை கலைக்காகவே'' என்ற கோஷம் உருவகப்படுத்தியது.

முதலாளித்துவம் கலையை வியாபாரப் பொருளாக மாற்றும் ஒரு சூழ்நிலையில் கலையின் சீரழிவைத் தடுத்து நிறுத்தும் தேவையைக் 'கலை கலைக்காகவே' என்ற கோஷத்தால்நிறைவு செய்யமுடியாது. கலைஞனது சுதந்திரம் அவனது சமுதாயத்தில் உள்ள மனிதர்களதும் உலகின் மானுட சமுதாயங்கள் சகலவற்றினதும் சுதந்திரத்தினுடனும் பிணைக்கப் பட்டுள்ளது. மனிதனது உழைப்பு விடுதலையடையும் போதே கலையும் விடுதலை அடைய முடியும். எனவே கலை மனிதனுக்காகவும் மானுட இனத்துக்காகவும் முழுமானுட இனத்தினதும் விடுதலைக்குமாகவே என்ற நிலைப்பாடே இன்றைய சுரண்டல் சமுதாயத்தில் முதன்மை பெறமுடியும். இந்தத் தேவையை நிறைவேற்றும் கலைப்படைப்புக்கள் எவ்வாறு அமைய வேண்டும் என்பதற்கு விறைப்பான, யாந்திரீகமான முறையில் பதில் அளிப்பது இயலாது மட்டுமல்ல தவறானதுமாகும். வெறும் பிரச்சார சுலோகங்கள் இலக்கியங்களாகி விட முடியாது என்ற கருத்தை மாக்ஸியச் சிந்தனையாளர்கள் வற்புறுத்தத் தவறவில்லை. பாட்டாளி வர்க்கப் புரட்சிகரக் கலையும் இலக்கியமும் எவ்வாறு அமைய வேண்டும் என்பதற்கான சூத்திரங்களை மாக்ஸிசத்தலைவர்கள் தர முனையாமைக்குக் காரணம் அவ்வாறான சூத்திரங்கள் எதுவுமே இல்லை என்பதேயாகும். அதே சமயம் ஒரு படைப்பு முற்போக்கானதா இல்லையா என மதிப்பிடுவதற்கான



படிப்பகம்

www.padippakam.com

அடிப்படைகளை மாக்ஸியச் சிந்தனையினின்று பெறமுடியும். இவ்வாறான விமர்சன அளவுகோல்கள் சமுதாயச் சூழ்நிலையையொட்டியே வகுக்கப்படுகின்றன. மேலுங்கூறுவதானால், எந்த ஒரு சமுதாயத்திலும் காலத்தினதும்சூழ்நிலையினதும்ஆளுமைக்குஅப்பாற்பட்ட கலை இலக்கிய அழகியற் கோட்பாடுகளோ விமர்சன அளவுகோல்களோ இருந்ததில்லை. 'கலை கலைக்காகவே'என்ற சுலோகம் ஓய்ந்து விட்டாலும் அதன் தோற்றத்துக்கு ஆதாரமாக இருந்த சிந்தனை முறை மடிந்து விடவில்லை. முற்போக்குக் கலை இலக்கியத்தின் வளர்ச்சியைச் சுரண்டும் வர்க்கங்களின் பிரதிநிதிகளால் தடுத்து நிறுத்த முடியாது அதற்காக அவர்கள் கையைக்கட்டிக்கொண்டு சும்மா இருப்பதில்லை. ஒருபுறம் லாப வேட்கையால் சமுதாயச் சீரழிவுக்குக் காரணமான கீழ்த்தரமான படைப்புக்களைச் சந்தைப் படுத்தும் கேளிக்கை வியாபாரிகள் மறுபுறம் பாண்பாடு, மரபு, ஒழுக்க நெறிகள் என்பன பற்றிய பழைமைவாதக் கருத்துக்களை முழுக்கத் தயங்குவதில்லை. கலை இலக்கியப் படைப்புக்களின் சமுதாய முக்கியத்துவத்தையும் சமுதாய மாற்றத்தில் அவை வகிக்கக் கூடிய பங்கையும் நன்குணரும் காரணத்தாலேயேதான் முற்போக்குக் கலை இலக்கிய இயக்கம் வியாபார நோக்கங்களால் கலை இலக்கியத்துறைகளில் ஏற்படும் சீரழிவையும் பழமை பேணலின் கலாசாரத் தேக்க நிலையையும் வன்மையாக எதிர்க்கிறது. சமுதாய மாற்றத்தை முன்னெடுத்துச் செல்லும் புரட்சிகர ஆக்கங்களை ஊக்குவிக்கும் அதே சமயம் மக்களது கவனத்தைத் திசை திருப்பமுனையும் முயற்சிகளைப் பற்றி எச்சரிக்கிறது. புரட்சிகரக் கலை இலக்கியப் படைப்புக்கள் எவ்வாறு அமையவேண்டும் என்பது பற்றிக் கருத்து வேறுபாடுகள் இருப்பது இயல்பானதே. ஆயினும் இவை கலை இலக்கியப் படைப்புக்களின் நோக்கம் பற்றி மாக்ஸியவாதிகளிடையே நிலவும் கருத்துக்கட்கும் மாக்ஸிய விரோதிகளது கருத்துக் கட்குமிடையிலான வேறுபாடுகள் போன்று பாரிய முரண்பாடுகளல்ல.

மாக்ஸிய விரோதிகள் நேரடியாகவே தம் மாக்ஸிய விரோதநிலைப் பாட்டை முன்வைக்கும் போது அவர்களது கருத்துக்களை முறியடிப்பது எளிதானது, தனிமனிதத்துவம், அரசியல் ஆதிக்கத்துக்குட் படாத கலை இலக்கியப் படைப்புக்கள் என்றவாறான வெள்ளாட்டு வேஷங்களுடன் வரும் மாக்ஸிய விரோத ஓநாய்களை எல்லாராலும் எப்போதும் எளிதாக அடையாளங்காண முடிவதில்லை. ஓநாய்கள் என்றாயினும் ஊளையிட்டுத் தம்மை வெளிப்படுத்திக் கொள்கின்றன எனினும் கலை இலக்கியம் பற்றிய தவறான சிந்தனைகளை உடனுக்குடன் அடையாளங்காட்டுவது மாக்ஸிய விமர்சகர்களது முக்கியமான பாணி என்றே கருதுகிறேன்



படிப்பகம்

www.padippakam.com

அரசியல் நிறுவனங்களதும் அரசியற் கோட்பாடுகளினதும் ஆதிக்கத்தினின்று கலைஇலக்கியப் படைப்புக்களைப் பாதுகாக்கிறதாகப் பாவனை செய்கின்ற குழுக்களும் தனிநபர்களும் நீண்டகாலமாகவே தமிழகத்திலும் இலங்கையிலும் செயற்பட்டு வந்துள்ளனர். அரசியல் நிறுவனங்களெனவும் கோட்பாடுகளெனவும் பொதுப்படவே பேசப்பட்டுவருகிறபோதிலும் இவர்களது தாக்குதலின் பிரதான இலக்கு இடதுசாரிக் கட்சிகளும் முற்போக்கு இலக்கியவாதிகளுமே என்பதில் அதிகம் ஐயத்துக்கு இடமில்லை. அரசியற் கோட்பாடுகளை ஆக்க இலக்கியப்படைப்புக்களின் மீது வலிந்து திணிப்பது அப்படைப்பின் கலைத்தன்மையைக் கெடுக்கிறது என்ற வாதத்தில் நியாயம் உண்டு. வலிந்து திணிக்கப்படும் கருத்து படைப்புடன் இசையாது துருத்திக் கொண்டு நிற்கும்போது படைப்பு கலையென்ற வகையிலும் பிரசாரம் என்ற வகையிலும் தோல்வியடைகிறது. மறுபுறம் கலைப் படைப்புக்கள் படைப்பாளியின் சமுதாயப் பார்வையை வெளிப்படுத்துவதைத் தவிர்க்க முற்படும்போது படைப்பின் நேர்மை குன்றிவிடுகிறது என்பதையும் நாம் கவனிக்க வேண்டும். எந்த ஆக்க இலக்கியவாதியும் கலைஞனும் தன் வர்க்க நிலைப்பாட்டுக்கும் சமுதாயப் பார்வைக்கும் அமையவே புறவுலகை அவதானிக்கிறான். எந்தவொரு படைப்பும் படைப்பாளியின் அகநிலைச்சார்பைப் பிரதிபலிக்காமல் இருப்பது கடினம். எனவே கொள்கை கோட்பாடு சாராமையை வலியுறுத்துவோர் குறிப்பிட்ட கொள்கைகளையும் கோட்பாடுகளையும் எதிர்க்கின்றவர்களாக இருக்கக் கூடும் அல்லது கலை இலக்கியங்களின் சமுதாயப் பணியை மழுங்கடிக்கும் ஒரு புதிய கோட்பாட்டைப் புகுத்த முனைவோராகவும் இருக்கக் கூடும்.

அரசியல் இலக்கியம் என்பது இலக்கிய வரலாற்றில் அண்மைக் காலத்தினது. ஆயினும் இலக்கியம் என்பது எப்போதும் கோட்பாடு சாராத ஒன்றாகவே இருந்ததா என்பதைக் கவனிப்போம். சங்க இலக்கியங்களிற் கூடச் சமுதாய விழுமியங்கள் நேரடியாகவும் மறைமுகமாகவும் வலியுறுத்தப்பட்டுள்ளன. இந்திய மரபின் இரண்டு மகா காவியங்களும் தூய இலக்கியப்படைப்புக்களாகவே உருவாக்கிப் பரப்பப்படவில்லை. தமிழில் உள்ள ஐம்பெருங்காப்பியங்களிற்கூட மதச்சார்பும் மதப்பிரசாரமும் அப்பட்டமாகவே தெரிகின்றன. சைவ வைணவத் தோத்திரங்களின் மதச்சார்பு தேவார திருவாசங்களினதும் திருப்பாவை திருமொழி போன்ற படைப்புக்களதும் கலைத்தன்மையை நிராகரிக்கின்றதா? அண்மைக் காலத் தமிழிலக்கியத்தைத் தவிர்த்தால் மதச்சார்பும் அறக் கோட்பாடுகளும் விழுமியங்களும் இலக்கியப் படைப்புக்கள் மீதும்



படிப்பகம்

www.padippakam.com

பிற கலைப்படைப்புக்கள் மீதும் பெரும் ஆதிக்கம் செலுத்தியமை தெளிவாகும். பாரதி, பாரதிதாசன் போன்ற உயரிய கவிஞர் களின் படைப்புக்களிடையேகூட அவர்களது அரசியற் கோட்பாடு களின் உந்துதலிற் பிறந்த கவிதைகள் முன்வரிசையில் நிற்கின் றன. எனவே நல்ல இலக்கியவாதி கோட்பாடுகளினின்று ஒதுங்கி நிற்க வேண்டும் என்ற கருத்து மிகவும் கொச்சையானது.

அரசியற் கட்சிஸ்தாபனச் சார்பு என்று பார்த்தாலும் ஜேர்மன் நாடகத் துறையின் ஒப்பரிய படைப்பாளியான ப்ரெஹ்ட் டின் கம்யூனிஸச் சார்பு அவரது ஒவ்வொரு படைப்பிலும் தெளி வாகவே வெளிவருகிறது. இப்ஸன். பேணுட் ஷா போன்ருேரது படைப்புக்களின் அரசியல் நிலைப்பாடுகள் இரகசியமானவை அல்ல. கோர்க்கியின் அதி உன்னதமான சிருஷ்டியான 'தாய்' அவரது அதி முக்கியமான அரசியல் பிரகடனமெனலாம். இவர்களதும இன் னும் பல அரசியல் இலக்கிய வாதிகளதும் படைப்புக்களைச் சாத் தியமாக்கியது அவர்கள் வாழ்ந்த சமுதாயச் சூழ்நிலைகளே. இவர் கள் எவருமே தமது அரசியற் கோட்பாடுகள் தம் படைப்புக் களின் கலைத்தன்மைக்கு ஊறுசெய்யுமென்று அஞ்சவில்லை. மாரு கத் தமது கருத்துக்களை மக்கள் மத்தியிற் கொண்டு செல்ல வல்ல சாதனங்களாகவே கலை வடிவங்களைக் கருதினர். சமுதாய உணர் வுள்ள படைப்பாளியின் சிருஷ்டிகள் படைப்பாளியின் சமுதாயப் பார்வையையும் படைப்பாளி வாழும் சமுதாயச் சூழலையும் விளக்கு வதோடு மட்டுமன்றிச் சமுதாய மாற்றத்தின் முனைப்பைச் சுட்டிக் காட்டவும் துணிகின்றன.

கலை இலக்கியப் படைப்புக்களில் கோட்பாட்டுச் சார்பு கலைத் தன்மைக்கு ஊறு செய்கிறது என வாதிப்போர், கலைஞனுக்குக் கொள்கையோ கோட்பாடோ இருக்கக் கூடாது அவ்வாறு இருந் தால் அவை கலை இலக்கியப் படைப்புக்களில் வெளிப்படக் கூடாது என்று கருதுகிருர்களாயின் அவர்கள் கருதும் கலைஞன் சமுதாய உணர்வு குறைந்தவனக அல்லது அந்த உணர்வுக்குப் பொய்யனுக இருக்க வேண்டுகிருர்கள் என்றே கொள்ள முடியும்.

முற்போக்கு கலை இலக்கியப் படைப்புக்களில் அரசியல் பிர சாரம் இருந்தே தீரவேண்டியதில்லை. படைப்பாளியின் அரசியற் சார்பும் சமுதாய பார்வையும் படைப்பில் வெவ்வேறு வகையி லும் அளவுகளிலும் வெளிப்படலாம். ஒரு குறிப்பிட்ட அரசியல் நிலைப்பாட்டை வெளிப்படுத்து மாறே ஒரு படைப்பாளியின் படைப்புக்கள் எப்போதும் அமைவதில்லை. ஆயினும் விஷயங்களைக் கையாளும் முறையில் முற்போக்கான சமுதாய பார்வையை நாம் அடையாளங் காணலாம். முற்போக்குக் கலை இலக்கியப் படைப்பாளர்கள் தமது சமுதாயப் பார்வையைத் தமது படைப்



படிப்பகம்

www.padippakam.com

புகள் மூலம் வெளிப்படுத்தும் போது ஒரு அரசியற் கருத்தைச் சூழ ஒரு படைப்பை விருத்தி செய்வார்களேயானல் அது பிரசாரத்துக்காகக் கலை என்ருகி உணர்வுக்கு விசுவாசமாக இல்லாமல் அரசியற் கோட்பாட்டுக்குக் கீழ்ப்பட்ட ஒன்ருகி விடுகிறது என்பது ஒரு வாதம். பழைய நீதிக் கதைகள் இத்தன்மையுடையன என்பதால் அவற்றின் கலையம்சம் குறைபாடுடையதாகவில்லை. பெருவாரியான முற்போக்குக் கலை இலக்கியப் படைப்புக்கள் அரசியல் சுலோகங்களையோ பிரசாரத்தையோ மையமாக வைத்து உருவாவதில்லை. படைப்பாளியின் பல்வேறு அனுபவங்கள் மனதில் ஏற்படுத்தும் தாக்கங்களே கலை இலக்கிய உருப்பெறுகின்றன. ஒரே சம்பவம் இரு வேறு நபர்களின் மனதில் வெவ்வேறு தாக்கங்களை ஏற்படுத்தலாம். அவரவருடைய திறமைக்கும் சமுதாயப் பார்வைக்குமேற்ப அவர்கள் அதை வேறுபட்ட முறைகளில் வியாக்கியானம் செய்யலாம். ஒரே மனிதர் கூட ஒரு அனுபவத்தை வெவ்வேறு மனநிலைகளில் வெவ்வேறு முறைகளில் நோக்க இடமுண்டு. இங்கு முக்கியமானது ஏதெனிற் கலைப்படைப்பு எவ்வளவு நேர்மையாகவும் நேர்த்தியாகவும் அமைந்துள்ளது என்பதே. கலைஞனிடம் பிரசார நோக்கம் இருப்பதாற் கலைப்படைப்பு கலைத்தன்மையை இழந்து விடுவதில்லை, அந்த நோக்கம் இல்லாத காரணத்தாற் கலைத்தன்மை உருவாகி விடுவதுமில்லை.

உணர்வையும் அறிவையும் முற்ருக வேறுபடுத்தி உணர்வை அறிவுசாராத ஒன்ருகவும் அறிவை உணர்வுக்கு அப்பாற்பட்ட ஒன்ருயும் கருதிக் கலையை முற்றிலும் உணர்வு சார்ந்த விஷயமாக்கிஞல், கலையை அறிவு அரசியல் ஆகியவற்றினின்றும் பிரிந்து நிற்கும் ஒன்ருக மனிதனுக்கு எட்டாத மர்மங்களில் ஒன்ருகக் காண்பது இலகுவாகிவிடும். ஆயினும் கலையின் வளர்ச்சி வெறுமனே உணர்வு சார்ந்த விஷயமாக அமைந்ததில்லை. கலைவடிவங்களும் கலைத்திறனும் ஆகாயத்திலிருந்து கலைஞனது மடியில் வந்து விழுவன அல்ல. அறிவை போன்று, கலை உணர்வு சமுதாய நடைமுறையையே ஆதாரமாகக் கொண்டது. சமுதாய நடைமுறையிலேயே மனித அறிவும் கலை உணர்வும் பொதுமை காண்கின்றன. மனித சமுதாயத்தின் செயற்பாடுகளை இது கலை, இது அரசியல் இது ஆராய்ச்சி, இது அனுபவம் என்று கூறுபோட்டுச் சுவரெழுப்புகிற மனிதர்கள் மனிதன் என்கிற முழுமையைத் தரிசிக்க இயலாது வழியிழந்து விடுகிருர்கள்.

தனிமனித அனுபவங்களைக் கலையுணர்வுடன் வெளிப்படுத்த இயலும். தனி மனித அனுபவங்களைப் பொதுமைப்படுத்தி விரிவுபடுத்தும் போது தனிமனித உணர்வு சமுதாய உணர்வாக விருத்தி

யடைகிறது. விரிவுபடுத்தப்பட்ட உணர்வுநிலை கலையுணர்வை மழுங்கடிப்பதில்லை. மாறாக, அதற்கு மேலும் உயர்ந்த ஒரு பரிமாணத்தை வழங்குகிறது. அரசியல் என்பது பொதுமைப்படுத்தப்பட்ட மனித அனுபவம்: தனிமனித உணர்வின் நீட்சி அரசியல் உணர்வு. அரசியலைக் கலையினின்றும் பிரிக்க முனைவோர் குறிப்பிட்ட சில அரசியல் இயக்கங்களைப் பற்றியே குறை கூறுவதைக் கணிப்பிலெடுப்போமாயின் கலையின் புதிய காவலர்கள் காக்க முனைவது கலையையல்ல என்பது தெளிவாகும்.

---

# கண்ணீர்த்துளிகள்

சாவ. சண்முகதாசன்

ஏன் நான் அழுகின்றேன்
எனக்கே தெரியவில்லை.

காரணமில்லாமல் அழலாமா?
கண்டவர்கள் சிரிப்பார்கள்.

இவ்வளவையும் ஜீரணித்து விட்டு
இனியா . . . . வேண்டாம்.

மனதை மழுப்பிக் கொண்டு
கண்ணீரைத் துடைக்க
கைகளை உயர்த்தினேன்.

மழையில் நனைந்த
தலையிலிருந்தல்லவா தண்ணீர்
கன்னங்களில் கசிந்து கொண்டிருக்கிறது.

நான் நினைத்தேன்
நான் அழுகின்றேன் என்று

www.padippakam.com

# எத்தனை நாள் துயின்றிருப்பாய் என்னருமைத் தாய் நாடே

- முருகையன்

## விடுதலைப் போராளியின் அறைகூவற் பாட்டுகள்

ஹங்கேரியக் கவிஞர் சாந்தோர் பெட்டோஃபி இயற்றிய சில கவிதைகளைத் தமிழில் திரு கே. கணேஷ் மொழி பெயர்த்துள்ளார். அவை 40 பக்கங்கள் கொண்ட ஒரு புத்தகமாக வெளிவந்துள்ளன. இந்தப் புத்தகத்தை, இலங்கை தேசிய கலை இலக்கியப் பேரவையினருக்காக, 'சென்னை புக்ஸ்' நிறுவனத்தினர் வெளியிட்டுள்ளனர். மிகவும் நேர்த்தியான, அழகிய தோற்றத்துடன் கௌரவமான முறையில் இந்தச் சிறு நூல் காட்சி தருகிறது.

'இறவாத புகழ் உடைய புது நூல்கள்
தமிழ் மொழியில் இயற்றல் வேண்டும்'

இது நமது பெருங்கவிஞன் பாரதியின் குரல். ஏன் இயற்றல் வேண்டும்? நமது மொழிக்குப் பெருமை சேர்ப்பது மட்டுமா நோக்கம்? இல்லை. உயிர்ப்புடைய பண்பாட்டின் தொடர்ச்சிக்கு தகுதி வாய்ந்த புத்திலக்கியப் படைப்பு அவசியம். புத்திலக்கியம் மட்டுமன்றி, வேற்றுப் பண்பாட்டுச் சூழல்களிலே தோன்றிய பிற இலக்கியங்களின் மொழிபெயர்ப்பும் அவசியமே. முற்காலத்துப் புலவர்களும் இந்த உண்மையை உணர்ந்தனர். அதனாலேதான், அவர்கள் வடமொழியிலிருந்து கதைகளையும் காப்பியங்களையும் எடுத்துத் தமிழாக்கம் செய்தனர். அன்று அவர்கள் அறிந்திருந்த பிற மொழிகளுள் வடமொழியே வளம் மிகுந்ததாய் இருந்தது. அதனால், வடமொழி நூல்களே பெரும்பாலும் மொழிபெயர்க்கப்பட்டன.

இன்றைய நிலைமையோ வேறு; இன்று பல்வேறு மொழிகளின் பழக்கம் நமக்கு ஏற்பட்டுள்ளது, ஆங்கில இனத்தவரின் ஆதிக்கத்தின்கீழே கணிசமான அளவு காலம் நாம் இருந்தபடியாலும் வேறு சில வரலாற்றுக் காரணங்களாலும் ஆங்கில மொழி நமக்கு அறிமுகமாகி இருக்கிறது. ஃபிறெஞ்ச்சு, றஷ்யன், வங்காளி, மராட்டி, மலையாளம், ஹிந்தி, சீனம் முதலான மொழிகளில் ஓரளவு பழக்கம் உடையவர்களும் நம்மிடையே சிற்சிலர் உள்ளனர். இவர்



படிப்பகம்

கள் அவ்வப்போது சிற்சில மொழிபெயர்ப்பு நூல்களைத் தந்து வருகின்றனர். மொழிபெயர்ப்புச் செய்வோருள் ஆங்கிலத்திலிருந்து தமிழாக்கம் செய்வோரே அநேகர் ஏனைய மொழிகளிலிருந்து நேரடியாக மொழி பெயர்ப்பவர்களைவிட, ஆங்கில மொழிபெயர்ப்பிலிருந்து தமிழாக்கம் செய்ய வல்லவர்களே அதிகம்.

எது எவ்வாறாயினும், உலக மொழிகளிலிருந்து தமிழாக்கம் பெறும் நூல்களின் எண்ணிக்கை குறைவாகவே உள்ளது. திட்டமிட்டு அரசாங்க ஆதரவுடன் மேற்கொள்ள வேண்டிய பாரிய முயற்சி இது. அதில் நம்மவர்கள் இன்னும் முழுமனத்துடன் ஈடுபடத் தொடங்கவில்லை என்றுதான் சொல்ல வேண்டும்.

ஆயினும், ஆர்வமும் இலட்சிய வீறும் கொண்ட தனி மனிதர்கள் சிலர் மொழி பெயர்ப்புப்பணியைமுக்கியமானதாகக் கொண்டு அதில் ஈடுபட்டுவந்துள்ளனர். அப்படிப்பட்ட சிலருள் ஒருவர்தான் பழம் பெரும் எழுத்தாளர் கே. கணேஷ். அவர் பிறமொழிக்கதைகளையும் தமிழாக்கஞ் செய்து அவ்வப்போது நமக்கு வழங்கியுள்ளார். பிற மொழிக் கவிதைகளைத் தமிழிலும் கவிதையாகவே அமைத்துத் தருவது அவருடைய வழி முறையாகும். இந்த வகையிலே, அவர் முன்பு வழங்கிய 'ஹோ சி மின் சிறைக் குறிப்புகள்' சிறப்பாக நினைவுகூரத் தக்கது. இப்பொழுது வெளிவந்துள்ள ஹங்கேரியக் கவிதைகளும் அப்படிப்பட்டவையே. கணேஷின் தமிழாக்கத்திலே, தமிழோசையின் நாதம் சரியாகப் பேசுகிறது.

''எத்தனை நாள் துயின்றிருப்பாய் என்னருமைத் தாய்நாடே'' என்பது 1847 ஆம் ஆண்டிலே சாந்தோர் பெட்டோஃவ்பி இயற்றிய ஹங்கேரியக் கவிதை. ஒரு வகையிற் பார்க்கப் போனால், தூங்கிக் கிடக்கும் தாயகத்தைத் தட்டி எழுப்பும் எழுச்சிப்பாட்டு-திருப்பள்ளி எழுச்சி. திருப்பள்ளிஎழுச்சிகள் நமக்குப் புதியவை அல்லவே?

''கதிரவனும் புலர்ந்திட்டான்
கடுங்கதிர்கள் உன்னுறக்க
மதியுள்ளே ஊடுருவி
வலிவுணர்வு ஊட்டாதோ?
............ ............ ......
எத்தனை நாள் துயின்றிருப்பாய்
என்னருமைத் தாய் நாடே
வீடு பற்றி எரியும் வரை
வீண் துயில் நீ போக்குவையோ?
பீடு மணி எச்சரித்தும்
பெருந்துயிலில் மூழ்குவையோ?''

www.padippakam.com

இந்த பாட்டிலே, ''எத்தனை நாள் துயின்றிருப்பாய் என்னரு மைத் தாய் நாடே'' என்ற அடி மீட்டும் மீட்டும் (பல்லவி போல) வருகிறது. பாட்டைப் படித்து முடித்த பிறகும் உட்குரலாக மனச் செலவிலே ஒங்கி ஒலித்துக் கொண்டே இருககிறது.

''பத்திமையும் அடிமையையும் கைவிடுவான் பாவியேன்... .........'' என்று தொடங்கும் ஒரு தேவாரத்தைச் சுந்தரமூர்த்தி யார் பாடியுள்ளார். அதன் இறுதி அடிகள்இரண்டும் பின் வருவன

''முத்தினை மாமணிதன்னை வயிரத்தை மூர்க்கனேன்
எத்தனை நாள் பிரிந்திருப்பேன் என் ஆரூர் இறைவனையே.''

தேவாரப் பாட்டோசையும் தேசபக்திப் பாட்டோசையும் எவ்வளவு ஒற்றுமை உடையனவாய் ஒலிக்கின்றன! கடவுள் பேரில் எழுந்த துதிப்பாட்டுக்களையே அதிகமாக உடைய தமிழ் மொழி யில், தேசத்தையும் தெய்வமாகப் போற்றி வணங்குவது இந்த நூற்றாண்டிலே வழக்கமாகி விட்டது. அந்த வழமையின் வழியிலே தெய்வ பக்திப் பாட்டுகளின் பாணியிலே தேச பக்திப் பாட்டுக்களை யும் இயற்றி விடுவது தமிழ்க் கவிஞர்களின் பழக்கமாகி விட்டது. இந்த இடத்திலும் பாரதியாரே முன்னோடியாக விளங்குகிறார். பாரத மாதாவையும் பராசக்தியையும் ஒன்றாக்கிக் காட்டும் பாட் டுத் திறம் அவருடையது. அது ஒரு புறமாக, கே. கணேஷின் மொழி பெயர்ப்பிலே சுந்தரமூர்த்தியாரின் பாட்டோசை நாதம் பேசுவது எதனைக் காட்டுகிறது? அந்தப் பாட்டோசை நாதம் ஹங்கேரியக் கவிஞனின் இதய நாதத்துடன் பொருந்துகிறது என் றால் அதன் கருத்தென்ன? காலங்களையும் இடங்களையும் கடந்த- மனிதகுலம் முழுவதற்குமே பொதுமையான- உணர்வின் ஓசைகள் அடிப்படையான சில நாதலயங்கள்- மனித உடலியக்கங்களோடும் மன இயக்கங்களோடும் இசைந்த சில அடிப்படை அசைவுப் போக்குகள் உள்ளன என்பதைத்தான் இது காட்டுகிறது.

தேவாரத்திலே இப்படியான சொற்களும் ஓசைகளும் வரு வதனை மொழி பெயர்ப்பாளர் தெரிந்து வைத்திருந்தார் என்று நான் கருதவில்லை. ஆனாலும், எப்படியோ அந்தப் பொருத்தப் பாடு நேர்ந்திருக்கிறது. இது தற்செயலான உடனிகழ்வு- கொயின்சிடென்ஸ்! இந்த உடனிகழ்வு மனிதப் பொதுமைக்குச் சிறந்த சான்றாக அமைகிறது.

இத்தொகுதியில் வரும் பாட்டுகளிற் பெரும்பாலானவை தேசபக்திப் பாட்டுகளே. தனது நாட்டின் விடுதலைக்காக ஏங்கும் போராளியின் அறைகூவலாக அவை உள்ளன. 1848 இல் எழுந்த 'தேசியப் பாடலில்' பின்வரும அடிகள் உள்ளன-



படிப்பகம்

www.padippakam.com

''மலரும் காலம் வந்தது காண்
மக்யார் நாடே எழுந்திடுக
மலரும் விடுதலை வேண்டுவையோ
பூணும் விலங்கினை ஏற்பதுவோ?
......... .........
கையில் பூணும் விலங்கைவிட
கரத்தில் ஏந்தும் வாள் மேலாம்
கையில் விலங்கை ஏற்றிருந்தோம்
கரத்தில் வாளை ஏந்திடுவோம்''

மனிதன் எங்கிருந்தாலும் அவனது விடுதலை வேட்கைகளும் உரிமை உணர்வுகளும் ஒரே மாதிரித்தான் உள்ளன. கணேஷ் அவர்கள் மொழிபெயர்த்த ஹங்கேரியக் கவிதைகள் உணர்த்தும் உண்மை இது.

''பிறந்த மண்'' மீது கொண்ட பற்றினுலே போர்க் கீதங்களைத் தந்துள்ள கவிஞர் பெட்டோஃவ்பி, காதல் நினைவுகளையும் பிரிவு தரும் ஏக்கங்களையும்கூடப் பாடியுள்ளார். தொகுதியின் பிற்பகுதியில் வரும் சில அப்படிப் பட்டவை.

''காய்ந்த கிளையில் வீழ்ந்திடுமே
காலை எல்லாம் பனித்துளியும்
தேய்ந்த கண்ணீர் நனைந்திடுமாம்
துயரில் நம்மிரு கன்னத்தில்
பேரன்பே என் கண்மணியே
பிரியா விடையும் தாராயோ...''

இவை எல்லாம் அந்த ஹங்கேரியக் கவிஞனின் இதயத் துடிப்புகள்.

பதிப்புரையிலே சொல்லப்பட்டிருப்பது போல, ''இந்த மொழி பெயர்ப்புக் கவிதைத் தொகுப்பு, காலத்தின் தேவையால் சிகரம் வைத்தாற்போல் திகழ்கிறது.''

மொழிபெயர்ப்பின் முக்கியத்துவத்தை உணர்ந்த ஒரு மூத்த எழுத்தாளரின் பங்களிப்பு இது. இதிலே உலகப் புதுமை மணக்கிறது. தமிழின் நாதம் பேசுகிறது-



படிப்பகம்

www.padippakam.com

# சிங்களப் பத்திரிகைகள் சஞ்சிகைகள்

**1833 முதல் 1873 வரை** - இப்னு அஸுமத்

சிரேஷ்டத்துவமான சஞ்சிகை எனப் பார்க்கும் போது சிங்கள மொழியில் முதன் முதலாவதாக வெளிவந்த சஞ்சிகை, 'சாஸ்த்ரலஸ்காரய' எனும் சஞ்சிகையே ஆகும். இச் சஞ்சிகை 1855 ஆம் ஆண்டு, செப்டம்பர் மாதம் 13 ம் திகதி ஜோன் பெரெய்ரா என்பவரால் ஆரம்பிக்கப்பட்டது. இது சஞ்சிகை எனினும் இதனது ஆசிரியரின் அறிமுகப்படுத்தலின் போது இதை ஒரு பத்திரிகையாகவே அவர் குறிப்பிட்டு வந்துள்ளார். எழுத்தாளர் தானும் இப்படியே இதை தெரிந்து - கூறி வந்துள்ளனர் எனவும் அறிய முடிகிறது.

இந்த 'சாஸ்த்ரலஸ்காரய' வுக்கு முன்பாக இது போன்ற தொரு பிரசுரம் இந்நாட்டில் வெளியாகவில்லை எனவும், இதற்கு முன்பாக அல்லது இதுவரை காலம் இங்கு வெளியானது 'லங்கா நிதாஞய' பத்திரிகை மட்டுமே எனவும் இதனது முதல் ஆசிரியர் குறிப்பு கூறுகிறது.

இதன்பின்னர், 1854 ஏப்ரல் மாதத்தில் பட்டுவன்துடாவே பண்டிதுமா (Baduvon thutawe pantithuma) என்பார் 'யதலப' எனும் சஞ்சிகையினை வெளியிட வாரம்பித்தார். மொழியினை பிரபலப்படுத்தும் பணியில் இந்த சஞ்சிகை தம்மாலான பணியினை மிகத் திறமையாக மேற்கொண்டுள்ளது. இது பல வருடங்கள் தொடர்ந்து வெளியாகி இருப்பதற்கான சான்றுகள் உள.

1857 ல், ஜோன் பெரைரா மீண்டும் 'சியபஸ் லகரீ' எனும் மாதச் சஞ்சிகையினை ஆரம்பித்துள்ளார். இதனது முக்கியக் குறிக்கோள் எதுவெனில், பழைமையான சிங்கள இலக்கிய நூற்களிலிருந்து பெறப்பட்ட தொடிப்புகளை வெளியிடுவதும், அதன் மூலம் அந்த இலக்கிய நூல்களை சிங்கள வாசகர்களுக்கு அறிமுகப் படுத்தி வைத்தலுமே ஆகும். எனினும், இச் சஞ்சிகை வாசகர்களின் ஆதரவு கிடைக்காமையினால் இது ஒரு வருடம் கூட நீடிக்க வில்லை என்பதும் தெரிய வருகிறது.

1860 ல் முதலாவது சிங்களப் பத்திரிகை வெளிவந்தது. 'லங்கா லோகய' என்பது இதன் பெயர். இது வெளிவரும்



படிப்பகம்

www.padippakam.com

போது, முன் வெளிவந்த சிங்கள சஞ்சிகைகள் வாசகர்களிடையே 'படிக்கும்' - வாசிக்கும் தன்மையினை ஏற்படுத்தி இருந்தன என்பது குறிப்பிடத்தக்கது.

ஆயினும் பத்திரிகைகளில் கூட சஞ்சிகைகளின் வடிவமைப்பே காணப்பட்டன. இதற்குக் காரணம் கே. டி. பி. விக்ரமசிங்ஹாவின் கூற்றுப்படி, "பத்திரிகைக்கு முன்பாக சஞ்சிகைகள் இங்கு பிரபலமாகி இருந்தமை" எனவும் தெரிய வருகிறது.

பத்திரிகைகள் வெளிவர ஆரம்பித்ததன் பின்பாக 'லங்கா நிதானய' போன்ற சஞ்சிகைகளின் விளம்பரம், விற்பனை ஆகியன குறைந்தன எனினும் அவ்வப்போது மாத, இருமாத, காலாண்டு, அரையாண்டு என சஞ்சிகைகள் வெளிவரத்தான் செய்தன.

மொழி பிரதானப் படுத்தல், மதம், ஜோதிடம், வர்த்தகம், அரசியல் என சஞ்சிகைகள் தொடர்ந்து வெளி வந்தமை, சிங்கள மொழியில் பலதரப்பட்ட விடய தானங்களை அறியக்கூடிய வாய்ப்பினை ஏற்படுத்தியது.

முன் கூறிய மாதிரியான சஞ்சிகைகள் கிறிஸ்தவ மதத்தினை பிரபலப்படுத்தவும், கிறிஸ்து காலத்தினை நினைவு கூறுதற்கும் வெளியாகின எனினும் வர, வர யுத்த காலத்தினை நினைவு கூறுதற்கும் பௌத்த சமயத்தினை பௌத்த இலக்கியத்தினை பற்றிய தெளிவுகளை பிரசுரிப்பதற்குமான சஞ்சிகைகள் வெளிவந்தன.

கிறிஸ்து காலத்தினை நினைவு படுத்து முகமாக வெளிவந்த சஞ்சிகைகளில் 1862 ல் ஆரம்பித்த 'கிறிஸ்தியானி பிரஜக்ப்திய' 'சத்தர்ம பிரகரயை' 'பௌத்தவாக்ய கன்ந்தயை' ஆகியன முதலிடம் பெறுகின்றன.

1863 ல் மொஹொட்டி வத்த குணநந்த ஹிமி அவர்களால் வெளியிடப்பட்ட 'சம்யக் தர்சனய' எனும் சஞ்சிகையே முதலாவது சிங்கள பௌத்த சஞ்சிகையாகும். 1864 ல் வெளியான 'சாரார்த்த பிரதீபிகா' சஞ்சிகையில் புத்த காலகட்டுரை வைத்திய ஜோதிட கட்டுரைகள் என்பன வெளிவந்தன. எனினும் இச் சஞ்சிகையும் நீண்ட காலம் நிலைக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

1866 ல் ஐசக் டி சில்வா ஆசிரியராக இருந்து வெளியிட்ட 'ருவன் மல்தம' எனும் சஞ்சிகை கதைகளை வெளியிடுவதில் முக்கியத்துவம் பெற்ற சஞ்சிகையாகும். கிறிஸ்துவ மத சார்பானவர்



படிப்பகம்

www.padippakam.com

களின் இந்த சஞ்சிகையில் 'பைபிளில்' இருந்து எடுக்கப்பட்ட பல கதைகள் இதில் வெளிவந்தன. 1879 ஜூன் மாதம் ஆகும். போது பொருளாதாரத் தட்டுப் பாட்டினுல் இச் சஞ்சிகை நின்று விட்டது. ஆயினும் இதே சஞ்சிகை மீண்டும் 1882 ஜனவரி மாதத்தில் 'சுதர்மபோகாரி' எனும் சபையினுல் வெளியிடப்பட்டது. 1889 பெப்ரவரி முதல் இச்சஞ்சிகை ஜோன் விலியம்டி சில்வாவினுல் தினசரி வெளியீட்டு அச்சகத்தின் மூலம் அச்சிடப்பட்டு மீண்டும் வெளியிடப்பட்டுள்ளது. (1913 லும் இது மீண்டும் வெளிவந்துள்ளதாகவும் தெரிய வருகிறது)

1867 ல் மொஹெட்டிவத்தே குணநந்த ஹிமியினுல் ஆரம்பிக்கப்பட்ட 'சத்ய மார்கய' - பத்திரிகை என அறிவித்தாலும் இதுவும் இருவாரங்களுக்கொரு முறை வெளிவந்த சஞ்சிகையே. இது மத சார்பானது.

1873 - ஜனவரி முதலாம் திகதி ''சமய சங்கராவ்'' என்னும் சஞ்சிகை சுபாச்சார தர்மத்பி கம்பனியினுல், சுரதுர அச்சகத்தில் அச்சிடப்பட்டுள்ளதாக தெரிய வருகிறது.

---

# நிறவெறி

- ஸ்வப்னு

சுருண்ட முடியை நேராய்ச் செய்யினும்
கருமை மாற்றிப் பொன்னிற மாக்கினும்
சருமம் வெளுக்கச் சாயம் பூசினும்
சப்பை மூக்கைநீ செப்பனுக்கினும்
அவர்கள் போலவே ஆடை பூணினும்
அவர்கள் பேசுதல் போல பேசினும்
அவர்கள் பேர்களுள் ஒன்றைச் சூடினும்
அவர்கள் உன்னை அழைப்பது-
காப்பிரி



படிப்பகம்

www.padippakam.com

# 'கிராமத்து நினைவும்' நகரத்து வாழ்வும்

எஸ். கருணாகரன்

மௌனமாய்த் தனித்திருந்தெனினும்
உயிர்ப்புடனிருக்கும்
என் கிராமத்தின் நீர்வற்றியகுளத்திலும்
புல் வெளிகளிலும்
நிலவின் லயிப்பில் குளிக்கும் மனம்.

புழுதியின் மேல் முகம் நசித்துச் செல்லும்
இராணுவத் தடங்களையும்
மிதித்துச் சிதைக்கும் எங்களூர் மந்தைகள்

அச்சத்துடன் கலந்தெழிலும்
ஆக்காத்தி
தன் இருப்பில் தன் துணையுடன்.

புழுதி ஒழுங்கைகளில்
பசுக்கள் படுத்திருக்கும் கன்றுகளுடன்
மந்தையடைப்பதில்லை -
நடைமுறை மாறிய சூழல்

களிமண் தெருக்களில்
சாணம் புறநீக்கித் தடமிட்டுச் செல்லும்
மந்தையின் பின்னே
ஓர் விவசாயி அல்லது சிறுவன் செல்வான்
நட்பின் விசுவாசமுடன் வேட்டைநாய்
பின் நடக்கும்.

வெண்மணற் பரப்பில்
அன்றி நிலவில் நிழலொழுகும்
தென்னையின் நிழலூடே
நிலவை ரசித்திருப்பேன்.



படிப்பகம்

www.padippakam.com

மைதான இரவிலும்
என் மனம் சுதந்திரம் குளிக்கும்
ஊரெல்லைகளில் திரியும் காற்றுநான்

மனதின் சுதந்திரக் களிப்பை
இந்த நகரத்தில் இழந்தேன்.

பறவைகளின் ஒலியழகை
தனிமையின் ஸ்பரிசத்தை,
இயற்கையின் இருப்பை
புதைத் தெழும் நாகரீகக் குழைவு.

மின் முக்கும் ஒளியுறைவில்
நிலவின் புற நீக்கல்
மனிதனின் வளர்ச்சியும்
சூழலின் மறுதலிப்பும்.

நிலவின் ஒளிச் சிந்தலில்
நனைவார் எவருமிலர்.

நிமிர்ந்து வானைப் பார்க்கின்றேன்
பாதியாய் நிலவு துயர் வடித்து
என் முகம் பார்த்தழும்

ஜன்னலூடே;
சிறைப்பிடித்த காற்றில்
சுவாசம் நடத்தும் இயந்திர வாழ்வு.

என் கிராமத்து வீதிகளிலும்
புழுதி மண்ணிலும்
மந்தை மேயும் புல்வெளிகளிலும்
நடந்து திரியும் என் நினைவுகள்.



படிப்பகம்

www.padippakam.com

# பிரம்படி (2 கவிதைகள்)

- விநாயகன்

1. பிட்டுக்கு மண்சுமந்த
பிரான்மீது பட்டஅடி
அணையைக்
கட்டிமுடிக்காத பிழைக்காக
பிரம்பெடுத்த ஆள்மீது
பிரானை அடித்ததற்காக
ஆணையிட்ட பாண்டியன்மேல்
பிரம்பு அவனது என்பதற்காக
வாதவூரன்மீது
நொந்தழுது வெள்ளத்தை
வரவழைத்ததற்காக
வாணிச்சி மீது...
பிட்டு உதிர்ந்ததற்காக
ஊரார் மீது......
அடிக்க ஒரு பிரம்பு இருந்ததற்காக

O O O

2. துரோகி எனத் தீர்த்து
முன்னொருநாட் சுட்டவெடி
சுட்டவனைச் சுட்டது
சுடக்கண்டவனைச் சுட்டது
சுடுமாறு ஆணை
இட்டவனைச் சுட்டது
குற்றஞ் சாட்டியவனை
வழக்குரைத்தவனைச்
சாட்சி சொன்னவனைத்
தீர்ப்பு வழங்கியவனைச் சுட்டது
தீர்ப்பை ஏற்றவனைச் சுட்டது
எதிர்த்தவனைச் சுட்டது
சும்மா இருந்தவனையுஞ்
சுட்டது.

O



படிப்பகம்

www.padippakam.com

# அனட்டோலி பார்ப்பரா - சோவியத் கவிஞன் கே. கணேஷின் தமிழாக்கம்

கே. எஸ். சிவகுமாரன்

இளைய பரம்பரையினர் மத்தியில் நன்கு அறிமுகமில்லாத மூத்த எழுத்தாளர்களில் ஒருவர் கே. கணேஷ். விளம்பரமின்றியே நிலையான இடத்தைப் பெற்ற ஒரு சிலரில் இவரும் ஒருவர். மார்ட்டின் விக்கிரமசிங்ஹ, எதிரிவீர சரச்சந்திர போன்ற சிங்கள இலக்கியப் பிரமுகர்களையும் அணைத்து சுவாமி விபுலானந்தர் தலைமையிலே, இலங்கை எழுத்தாளர் ஒன்றியத்தை இவர் அமைத்துச் செயற்பட்டிருக்கிறார். இவருடைய பரந்த நோக்கத்தையும், எழுத்தாளனாக இவர் கொண்டுள்ள நெஞ்சத்தையும் வெளிப்படுத்துவதற்கு இது ஒன்றே போதும்.

கே. கணேஷ் சிறுகதை, கவிதை, திறனாய்வு போன்ற பல துறைகளிலும் ஈடுபட்டுள்ளார். சஞ்சிகையாளராக, கவிஞராக, மொழி பெயர்ப்பாளராக கதைஞராக, திறனாய்வாளராக, பேச்சாளராக, அமைப்பாளராக, ஆலோசகராக பல துறைகளிலும் சிறப்புப் பணியாற்றியுள்ள கணேஷ் இதுவரை 12 நூல்களை எழுதியுள்ளார்.

கே. கணேஷ் பழுத்த ஒரு கனி - முற்போக்குச் சிந்தனைகளைப் பச்சையாகப் பரிவர்த்தனை செய்யாது, எமது ஆழ்ந்த அறநெறிகள், தார்மீகங்கள், பண்பாட்டுக் கோலங்கள் போன்றவற்றில் அமிழ்ந்து பெறப்பட்டவற்றைத் தெளித்துத் தருபவர் என்பதை இவருடைய பார்ப்பரா போன்றவர்களின் கவிதைகளைத் தமிழ் மயமாய்த் தந்ததில் இருந்து நாமறியலாம்.

அனட்டலி பார்ப்பரா (*Anatoly Parpara*) என்ற ரஷ்யமொழிக் கவிஞர் பற்றி ஆங்கில மொழி வாயிலாக நாம் அதிகம் அறிந்ததில்லை. கணேஷ் தரும் தகவலின்படி பார்ப்பரா ரஷ்ய மொழி இலக்கிய ஏடான "மஸ்கோவா" வின் கவிதைப் பகுதி ஆசிரியராவர். ஐந்து கவிதைத் தொகுப்புகள், வரலாற்றுக் காவியம் ஒன்று, மற்றும் பல ஆய்வு நூல்களின் ஆசிரியர் பார்ப்பரா. அது மாத்திரமல்லாமல், பல இந்திய மொழிப் படைப்புகளை மொழிபெயர்ப்பு சகிதம் சோவியத் மக்களுக்கு அறிமுகப்படுத்திஞர். "இந்தியா குறித்து ஒரு சொல்" என்ற பார்ப்பராவின் நூல் அண்மையில் வெளியிடப்பட்டிருப்பதாக அறிகிறோம்.



படிப்பகம்

www.padippakam.com

தமிழ்க் கவிஞன் சுப்பிரமணிய பாரதி குறித்து பார்ப்பரா இயற்றிய பாடல் விதந்து கூறப்பட்டுள்ளது. இதற்காகவாகுதல் நாம் பார்ப்பராவை அறிமுகஞ் செய்து கொள்ளல் அவசியமாகிறது.

கணேஷின் தமிழாக்கத்தினூடாக பார்ப்பராவை நாம் ஓரளவு அறிந்து கொள்ளு முன்னர், தமிழாக்கம் செய்தவரான கணேஷின் கூற்று ஒன்றையும் நாம் மனதிற் பதித்துக் கொள்ள வேண்டும். இதுதான் அந்தக் கூற்று:

''பார்ப்பராவின் கவிதைகளில் கீழ் நாட்டின் குறிப்பாக பௌத்த இந்து தத்துவங்கள் இழையோடி உள்ளதையும், மகாகவி தாகூரின் தாக்கத்தையும் காணலாம்'' கணேஷின் கூற்று சரியானது என்பதை பார்ப்பராவின் கவிதைகள் காட்டுகின்றன.

இனி, இந்தப் பன்னிரெண்டு கவிதைகளையும் பார்ப்போம். முதலிலே, சுப்பிரமணிய பாரதியை இந்த சோவியத் கவிஞர் எவ்வாறு கணிக்கிறார் என்று கவனிப்போம். பாரதி ரஷ்யப் புரட்சி நிகழ்வுகளை நன்குணர்ந்தவன். புரட்சியின் சித்தாந்த உண்மைகளை முதன்முதலில் இந்தியாவில் பரப்பியவன் பாரதி. ரஷ்யாவின் அந்த நாள் உண்மை நிலைகளை ''சுதேச மித்திரன் மூலம் பரப்பியவன், புரட்சிப் பெருந்தத்துவத்தின் சாஎரத்தைத் திறந்து காட்டிய காந்தியை மகாத்மா என்று வாழ்த்தியவன் பாரதி. ஜெகம் அனைத்தும் எமது நாடு போல் சிறந்தவைதான் என்பதை உணர்த்தியவன் பாரதி. அனைத்துலகுக் கவிஞர்களும் பாரதி கவிதையைப் போற்றுகின்றனர்.

இந்த உண்மைகளை உள்ளடக்கிய பார்ப்பராவின் கவிதையைத் தமிழில் தருகையில் கணேஷ் முதலாவது செய்யுளில் உள்ள சில வரிகளை வேறு ஒழுங்கில் அமைந்திருந்தால் நன்றாயிருந்திருக்கும்.

உதாரணமாக - 'சித்தாந்த உண்மைகளை முதலிற் கண்ட' என்பதை 'சித்தாந்த உண்மைகளை முதலிற் கண்டாய்' என்றும் 'உரம் பெற்ற கொடுங்கோன்மை எதிர்ப்புச் சின்னமாய் உருவான சிரஞ்சீவி புதிய ருஷ்யாதனை' என்றும் அமைந்திருப்பின் நன்று.

○ ○ ○

'ஆக்ரா நகர்' என்ற தலைப்பிலே கணேஷ் தமிழாக்கியுள்ள கவிதையில் உயிரோட்டம் இருக்கிறது ஒத்திசை இருக்கிறது. எல்லாவற்றிற்கும் மேலாக தாஜ்மஹாலை உருவாக்கிய உழைப்பாளிகளின் ஆற்றலைக் கவிஞன் வாழ்த்துகிறான். 'வெண்பனி வெண்மை நிறை தீம்பாலை வெட்கவைக்கும் தோற்றத்தில்' என்ற வரி கவித்துவமாய் வந்தமைந்துள்ளது.



படிப்பகம்

www.padippakam.com

''இந்திய நன்ஞட்டிற்கு'' என்ற தலைப்புள்ள கவிதையிலே''யாதும் ஊரே யாவரும் கேளிர், எல்லோரும் ஓர் குலம் எல்லோரும் ஓரினம்''என்ற தமிழனின் உலகநோக்கைப் பெரிதும் வரவேற்று ருஷ்யக் கவிஞர் பார்ப்பரா பாடுவதை கணேஷ் பின் வருமாறு தருகிருர்.

''இத்தகைய வெளிப்பரப்பில்
இருப்பவர் உள்ளத்தின்
சித்தத்தில் எழுகின்ற
சிந்தனையில் உதித்ததுவாம்
இத்தரையில் வாழ்மக்கள்
எல்லோரும் உறவென்ற
மெத்த பெரும் கொள்கையதும்
விதைத்தார்கள்''

அனடோலி பார்ப்பரா மேலும் ஒரு படி சென்று.

''வெளி நாடும்
எல்லையற்ற ஸ்தெப்பி வெளி
என்ஞட்டில் உள்ளதுபோல்
இன்ஞட்டில் கண்டிடவும்
இணைப்புதனை உணர்கின்றேன்'' என்கிருன்.

இந்த இணைப்பு வேறுபாடுகளிடையே ஒருமைப்பாட்டைக் காண்கிறது. இதே கவிதையில் வரும்.

''அங்கொன்று இங்கொன்ருய் அமைந்துள்ளது சிற்றேரி

அவற்றுள்ளே காரெருமை காட்சிதரும் பொட்டைப்போல்'' என்ற உவமையும் ரசிக்கத் தக்கது. ○

குறிப்பிட்ட சூழலுக்குட்பட்ட எவரும் குறிப்பிட்ட விதத்தில் இயங்குவர் என்பதற்கு உதாரணமாக செவ்வண்ணம் இன்பத்தை யளிப்பதாய் சோவியத் சிறுமி கண்டு கேட்டு உண்டு உணர்ந்துள்ளான். நம்மில் சிலருக்கு பச்சை நிறம் குளிர்ச்சி தருவதாய் இருக்கக்கூடும். எனவே அவரவர் அனுபவத்தைப் பொறுத்துள்ளது. ○

''நற்செயல்'' என்ற செய்யுள் நமது ஆத்தி சூடி, கொன்றை வேந்தன், நன்நெறி, நல்வழி போன்ற நூல்களை நினைவுக்குக் கொண்டு வருகிறது. இதே போன்றே ''அறிவுரை'' என்ற முதற் செய்யுளும் அமைந்திருக்கிறது. ○

''உன்முகம்'', ''உன்னைக் குறித்த கவிதை''ஆகிய இரண்டும் ஒருவிதத்தில் காதற் பாடல் என்று நாம் விபரிக்கமுடியும்.



படிப்பகம்

''மழையும் மண்தரையும்'' என்ற கவிதையில் வரும் ''நனைந்த வொரு கடற்பறவை சிறகடித்துப் பறப்பதற்கு முடியாது தடுமாறும் நிலைபோல தமது உணர்வு தத்தித் தத்திச் செல்கிறது'' என்ற உவமையும் ரசிக்கத் தக்கது.

இதே கவிதையில் வரும்
''சொல்லைத் தொடர்ந்து
செயலின்றேல் அப்பொழுது
பொய்யே ஆட்சி செய்யும்'' என்ற கருத்தும்

சொந்த நாட்டை விட்டுப் பிரிக்கப்பட்ட கவிஞன் கவிஞனுவதில்லை, என்ற கருத்தும் வரவேற்கத் தக்க சிந்தனைகள் எனலாம்.

ஊழ், ''மலைப் பள்ளம் வாழ்மக்கள்' ''குண்டசோவா'' ''காட்சி ஆகிய மூன்று கவிதைகளிலும்' சொற் சிக்கனம், தேர்ந்தெடுக்கப் பட்ட காட்சிப் படிமங்கள் ஒருமுகப்படுத்திய செல்நெறி ஆகியன கட்டுக்கோப்பாய் அமைந்திருக்குமாயின், இவற்றை மேலும் நாம் ரசித்திருக்கலாம். ○

மொத்தத்தில், இக்கவிதைத் தொகுப்பு மூலம் சோவியத் கவிஞர் ஒருவரின் ஆக்கத் திறனையும், எல்லைக் கட்டையும் நாம் ஓரளவு அறிந்து கொள்கிறோம். பிறநாட்டு நல்லறிஞர் படைப்புகள் தமிழின் வளத்தை மேலும் மெருகுபடுத்தும். கே. கணேஷ் அவர்களுக்கு நமது நன்றிகள்.

## விமரிசனத்துக்கென கிடைக்கப்பெற்றவை

சிரமங்கள் பல நிறைந்த நெருக்கடியான இன்றைய சூழலில் முனைப்புடன் செயற்பட்டு கலை - இலக்கியப் படைப்புகளை வெளிக்கொணரும் கலை இலக்கியவாதிகள் உரிய வகையில் மதிக்கப்பட வேண்டியவர்கள். அந்த வகையில், தாயகம் விமரிசனங்களுக்கென கணிசமான பக்கங்களை ஒதுக்கி, வெளிவந்த ஆக்கங்களை பரந்துபட்ட வாசகர்களுக்கு அறிமுகப்படுத்தி வருகிறது.

எமக்கு அனுப்பப்படும் நூல்களுக்கு தகுதியான திறனாய்வாளர்களிடமிருந்து விமரிசனங்களைப் பெற்றுப் பிரசுரிப்போம்.

இனிவரும் தாயகம் திறனாய்வுக்குட்படுத்தவெனக் கிடைக்கப்பெற்றவை:

1. சாந்தனின் ''இன்னொரு வெண்ணிரவு'' சிறுகதைத் தொகுதி
2. சார்ள்ஸின் கவிதைத் தொகுதிகள்
3. கைலாசபதியும் நானும் - கே. எஸ். சிவகுமாரன்

www.padippakam.com

# இருநாடகங்கள் . . அரங்க அனுபவம்

எஸ். ரி. குமார்

மஹாகவியின் 'புதியதொருவீடு' பா நாடகம் யாழ். பல்கலைக் கழக நுண்கலைத்துறையினரால் கைலாசபதி கலையரங்கிலும் யாழ். பல்கலைக்கழகத் தமிழ் மன்ற மாணவர்களால் ''காத்தவராயன்'' நாடகம் யாழ். இந்து மகளிர் கல்லூரியில் ஒன்பதாவது தடவையாகவும் மேடையேற்றப்பட்ட பொழுது பார்க்கும் வாய்ப்புக் கிடைத்தது.

இந்நாடகங்களை அரங்கில் அமர்ந்து இரசித்த பொழுது இவற்றின் கருவும் உருவும் இன்றைய காலத்தில் என் உள்ளத்தை எவ்வாறு பாதித்தன என்ற என் "அனுபவத்தைப் பகிர்ந்துகொள்ள முனைகின்றேன்.

''கரைச்சல் சோலி'' யற்ற நாடகங்களிவை என்பதால் இன்றைய தொந்தரவு தொடர முடியாத மேடை நிகழ்வுகள் என்று நினைத்த எனக்கு சத்திய தரிசனமாய் சில செய்திகளை இந்நாடகங்கள் உணர்த்தின.

'புதிய தொரு வீடு' நாடகத்தினை துன்பியல் நாடகமாகவும் 'காத்தவராயன்' நாடகத்தினை மகிழ்நெறி நாடகமாகவும் என்னுள் வகைப் படுத்திக் கொள்கின்றேன்.

## 'புதியதொரு வீடு' - பாநாடகம்

இரண்டு தசாப்தங்களாக இந் நாடகத்தில் பல நெறியாளர்களும், பல கலைஞர்களும் பங்கேற்றுள்ளனர். ஏற்கனவே இந் நாடகத்தினைப் பல்கலைக்கழக மாணவர்களைக் கொண்டு நெறியாள்கை செய்தவரும் விரிவுரையாளருமாகிய கலாநிதி சி. மௌனகுரு அவர்களும் அரங்கக் கல்லூரி அதிபரும் விரிவுரையாளருமாகிய குழந்தை ம. சண்முகலிங்கமும் இந்நாடகத்தினை நெறியாள்கை செய்துள்ளனர்.

மீனவத் தளத்தினைக் காட்சிப்படுத்திய இந் நாடகத்தினை ஆரம்பத்தில் நெறியாள்கை செய்தவரும், மேடையாக்க முயற்சியின் போது மஹாகவியின் மூலம் பாட்கர்களையும் பாடல்களையும் உருவாக்க உறுதுணை புரிந்தவருமாகிய அ. தாசீசியஸ் 1970 களின் பிற்பாடு மேடையேற்றிய அரங்க அனுபவத்தின் விமர்



படிப்பகம்

www.padippakam.com

சனப் பேருக "பொறுத்தது போதும்" என்ற நாடகத்தினை அவரே எழுதி, நெறியாள்கை செய்தாரென்பதையும் இந்நேரம் நினைத்துப் பார்க்கின்றேன்.

"புதியதொரு வீடு" நாடகக் கதைப் போக்கில் சில தர்க்க ரீதியான விவாதங்கள் ஏற்கனவே செய்யப்பட்டிருப்பினும், இந் நாடகத்தின் கருப்பொருள் இன்றைய காலத்திலும் இன்னல் களில் "எது வந்ததெனின் என்ன அதைவென்று செல்வார்" என்ற மானுடத்தின் நம்பிக்கையை -வாழ்வியலை எமக்கு உணர்த்தி நிற்கின்றது.

"இந்நாடகத்தில் மாயன், மயிலி, மாசிலன் ஆகியோருக்கு நிகழும் இன்னலும் ஒரு குறியீடுதான். அது பொதுவான எல்லா மனித இன்னல்களையும் குறித்து நிற்கிறது" என இந்நாடக நூலின் பதிப்புரையில் எம். ஏ. நுஃமான் குறிப்பிடுவதும் கவ னங் கொள்ளத் தக்கது.

வாழ்வில் நெருக்கடி, மாற்றம் ஏற்படும் வேளைகளில் ஒழுக் கம், விழுமியங்களிலும் மாறுதல்கள் தூண்டப்படுகின்றன. இந் நேரங்களில் மனிதர்கள் இவற்றைத் தம் வாழ்வில் வெகு சுலப மாகவே நிகழ்த்திக் காட்டி விடுகின்றனர் என்பதை இந்நாடகம் சித்தரிக்கின்றது.

கண்ணுத்தை என்ற பாத்திரத்தின் வாயிலாக சாதாரண கிராமியத் தன்மையில் பட்டதை உள்ளபடி பேசும் பாங்கும், மயிலியின் மறுமணத்தை முன்னின்று நடத்துவதற்கு முயற்சிப் பதும் மறைக்காடர் நிகழ்த்தும் திருமணச் சடங்கும் புதிய வாழ் வுப் போக்கினை உணர்த்தும்.

மின்னல் இடி, புயல் மானுட உடல்களை அழித்துவிடுமெனி னும் மானுட ஆளுமையின் முகிழ்ப்பைத் தகர்த்து விட முடியாது. "கோடை கொடும்பனி மழை குளிரை அஞ்சிக், கோடிப் புறத் தினில் உறங்கி விடலாமோ, ஆடை களைந்து தலைமீதினில் அணிந் தோம், ஆழ் கடல் தயிர் எனக் கடைய வந்தோம்." என்ற மஹாகவியின் 'மீண்டும் தொடங்கும் மிடுக்கினை' மீனவர்களின் வாழ்வுப் போரிலே தரிசிக்க முடிந்தது.

"வெடுக்கென்று மின்னல், மின்னல், மின்னல் ... கன்னம் தெறிக்கும்படி இடி, இடி, இடி... காற்று மத்தாய்க் கடலைக் கடைகிறது..." என மின்னல், இடி, புயல், மீனவர்கள் என மேடையில் தோன்றிய நடிகர்கள் முன் மேடையில் ஆடிப் பாடி,



படிப்பகம்

www.padippakam.com

அசைவுகளூடாக வெளிப்படுத்தியமை சம்பவத்தின் பின்னணியை முன்னால் வைத்து நிகழ்த்தியமை மயிலியின் உறவில் ஏற்பட்ட மாற்றத்தில் சூழலின் நெருக்கடியை உணரவும், அதன் விளைவைப் புரியவும் உதவியது. புயலாக அபிநயித்தவர்களில் ஒரு பெண் மணியின் கண்கள் பரதத்தின் நளினத்தைக் காட்டியது பொருத்த மற்றிருந்தது. "பொன்னாலைப் பக்கத்தில், சந்தியாப்பிள்ளை சடலம் ஒதுங்கியதாம், ஐந்தாறு பேராம் அலுப்பாந்திப் பக்கமாய், வந்து மிதந்தவர்கள்! வாகைக் கரையோரம், இந்தியாக் காரர் இருபது பேர் தண்ணீரிற் செத்துச் சிதம்பி வந்து சேர்ந்தாராம் காலமை" எனக் கண்ணாத்தை சொல்வதும்: "சாதல் நிகழ்வதை தவிர்க்க முடியுமே? தாயோ, மகனோ, தகப்பனோ, பேரனோ, காயோ, பழமோ இக்காற்றுக்கு வீழ்கிறது... "எங்கே என்வீடு, என்சிறு வீடு, கொட்டில்தான் எங்கே அது??? "வீட்டையும் காண வில்லை... நீட்டுக்கு நின்ற நிரைப் பூவரசுகளும் எப்புறத்தும் காணோமே" என மாயன் கேட்பதும்;" (வெறியாட்டு - முருகையனின் பூவரசும் நினைவிலாடுகிறது) 'பிள்ளை பிடிகாரன்' என மன்னவன் சந்தேகிப்பதுவும்;" "பள்ளிக் கூடத்திலை படுக்கத் தேவையில்லை, கோயிலிலை கஞ்சி குடிப்பதற்கும் தேவையில்லை" என புயல் அகதிகள் நிலையை மாசிலன் சொல்வதும் இன்றைய நாளாந்த சம்பவங்களை நினைவூட்டி நாடகத்தைப் பார்வையாளருக்கு மிக நெருக்கமாகக் கொண்டு வந்தது.

மாயன் புயலில் சிக்குண்டு மரணமடைந்து விட்டானென்ற எண்ணத்தில் மயிலிக்கு மாயனின் தம்பியார் மாசிலனை திருமணம் செய்து வைப்பதில் முன்னின்ற மறைக்காடர் மாயனின் விரக்தி நிலையைக் கண்ணுற்று கோயில் மடத்தில் வந்து குடியிருக்கும்படி இறுதிக் காட்சியில் கோரிக்கை விடுப்பதைத் தவிர்த்திருக்கலாம் அனுபவ சாலியான மறைக்காடரின் பாத்திரத்துக்கு ஊறு விளைத்துவிடுகிறது.

மயிலி, மாசிலனை ஊராரின் நிர்ப்பந்தத்திலா, அல்லது நிலைமையின் யதார்த்தத்தைப் புரிந்த மனப்பக்குவத்தாலா மணம் புரிகிறாள்? மயிலி விரும்பி மாசிலனை விவாகம் புரிந்திருந்தால் மாயன் உயிருடன் மீளத் திரும்பிய போதும் மாசிலனுடன் தொடர்ந்து வாழ்வதாகத் தீர்மானிப்பதில் எவ்வித சலனமும் ஏற்படாது. ஊராரின் விலங்கத்துக்காகத்தான் மாசிலனை மயிலிக்குக் கட்டி வைத்திருப்பின் மயிலியின் தீர்மானம் வேறு விதமாக அமைத்துவிடும். மயிலியின் சுயவிருப்பம் எவ்வாறு இருந்தது என்பதனைப் பார்க்க முடியாதிருந்தது.



படிப்பகம்

www.padippakam.com

அரசரின் ஒப்பனையும் கண்ணனின் இசை அமைப்பும் நடிகர்களின் நடிப்புத் திறனும் ஏனைய கலைஞரின் ஒத்துழைப்பும் இணைந்து எம் போன்ற இரசிகர்களின் சிந்தனையைத் தூண்டியது.

மாயனுக்கு ஏற்பட்ட துன்பத்தை மக்களுக்கேற்பட்ட துன்பமாக அவையிலுள்ளோர் அனுபவித்து - துன்பம் பரவலானது, என்பதில் பெற்ற பொதுமை இன்ப உணர்வு செயலூக்கத்துக்காதாரமாய் அமைந்து விடும் வகையில் இந்நாடகம் மகிழ்வூட்டியது.

இன்னும், இன்னும் பல மேடையேற்றங்களைக் காண்பதும் அரங்க அனுபவங்களைப் பகிர்ந்து கொள்வதும் பயன் விளைப்பதாகும்.

## 'காத்தவராயன்' - இசைநாடகம்

''ஈழத்திரு நாட்டின் பாரம்பரியக் கலையைப்பேணுவோம்'' என்ற நோக்கோடு இந்நாடகம் மேடையேற்றப் பட்டது. கோயில் சடங்குகளிலும், நேர்த்திக்கடன்களுக்ாகவும் கிராமங்களிலே ஆடப்பட்டு வந்த ''காத்தான் கூத்து'' பல்கலைக்கழகத்தில் ''காத்தவராயன்'' என்று இசை நாடகமெனப் பெயர்பெற்று நிகழ்த்தப்பட்டு வருகிறது.

பழைய இசை, கூத்து வடிவங்களை நவீன நாடகங்களில் இன்றைய தேவைகளை ஈடுசெய்யும் விதத்தில் இணைத்தும், புகுத்தியும், மாற்றியும் பயன்படுத்திவரும் வேளையில் இக் கூத்துக்களை உள்ளபடியே பாதுகாக்கவும் முடியும் என்கின்ற முனைப்போடு இந்நாடகமேடையேற்றம் அமைந்தது.

முன்னைய காலத்தில் முழு இரவும் முழித்திருந்து பார்க்கும் இந்நாடகத்தை ஒன்றரை மணித்தியாலங்களில் சுருக்கி வேண்டாதவற்றை விலக்கியும், வேண்டியவற்றை அழுத்தியும் அரங்கேற்றியதை அவதானிக்க முடிந்தது.

கிராமியக் கலையான இக்கூத்து அடிமட்ட மக்களால் மாதக் கணக்கான ஒத்திகைகளின் பின்னர் ஆடப்படுவதும் நடிகர்கள் சுதாமாந்தரின் பெயரிலேயே கிராமத்தவர்களால் அழைக்கப்படுவதும் பொதுவான வழக்கம்.

இக்கூத்து பிறந்த கதை வளர்ந்த வரலாறு பற்றிய ஆய்வுகளும் கதாமாந்தரின் கற்பனைக்கு காரணமாயமைந்த காலத்தையும் கருத்துக்களையும் ஆராயும் பணியும் அறிஞர்களுடையது.



படிப்பகம்

'காத்தவராயன்' நாடகத்தை மேடையில் ஆடரசித்த பொழுது இன்றைய காலத்தேவையோடு இணைந்து அதனை எவ்வாறு அனுபவிக்க முடிந்தது எனச் சற்றுச் சொல்ல விரும்புகிறேன்.

பெருந்தெய்வங்களாகிய சிவன், விஷ்ணு ஆகிய கடவுளர்களின் ஆலயக் கடப்பைத்தாண்ட முடியாத நந்தனர் பரம்பரையினர் சிறுதெய்வ வழிபாடுகளில் தமது வாழ்வைக் கழித்தனர். அத்தகைய தெய்வங்களில் காளி, மாரி, வைரவர், காத்தான் ஆகியன அவர்களின் அன்புக்கும் பக்திக்குமுரியவையாயின.

காத்தான் மாரிஅம்மனுடைய வளர்ப்புப்பிள்ளை யெனினும் சிவனுக்கும், விஷ்ணுவுக்கும் பிறந்த பிள்ளை யென்பதால் அருள் பெற்ற வல்லமை வாய்ந்தவர் என்ற நம்பிக்கை சாதாரண மக்களிடம் ஆன்ம பலத்தை ஏற்படுத்துவது இயல்பே. அப்பிள்ளை கங்கை பெருக்கெடுத்தபோது அதிலிருந்து மக்களைக் காப்பாற்றிய காரணத்தால் காத்தவராயன் என்றும்; விளையாட்டிலே போட்டியிட்டு வென்றதனுல் தொட்டியத்துச் சின்னனை தோழனுக தொண்டனுக ஆக்கிக் கொள்கின்றுன் என்றும் அறிகிறேம்.

காட்டு மிருகங்கள் யானை முதலியன மக்களுக்கு இன்னல் விளைப்பதாக மக்கள் மாரியிடம் முறையிடவும் மாரிஅம்மன் காத்தவராயனைத் தொட்டியத்துச் சின்னனுடன் வேட்டையாடி வரும்படி பணிக்கவும், வேட்டையாடச் சென்ற வேளையிலே ஆரியப்பூமாலை என்ற அழகிய பெண் குளித்த பொய்கையில் மஞ்சள் மணத்தால் கவரப்பட்டு அவளை அடைவேன் என காத்தவராயன் காதலின் மேலீட்டால் தாயிடம் சொல்வதும்; மாரி ''நீ அவளைவிரும்பியதால் இருந்தாலும் சரி, இறந்தாலும் சரி'' எனச் சினங்கொண்டு ஏசுவதும் ''ஆரியப் பூமாலை பிறக்கும் பொழுதே அவளுடன் கூடவே கழுமரமும் பிறந்த தென்ற செய்தி தெரிந்த மாரிஅம்மன் செய்வதறியாது காத்தவராயனை தேவடியாளை வென்று 999 மகாராஜாக்களை சிறைமீட்டு வரும் படியும் அவளது மந்திரக்கோலைப் பெற்றுவரும்படியும் கூறவும் காத்தான் அவற்றையும் செய்து வருவதும் இவ்வாறுக சிலகடமைகளை நிறைவேற்றினுல் நீ ஆரியப் பூமாலையைத் திருமணம் செய்யலாமென அவ்வப்போது கட்டளையிடுவதும் இடையில் காத்தான் ஆரியப்பூமாலை வீட்டுக்குக் கிளிவடிவில் சென்று மாட்டிக் கொள்ளவும் சின்னன் அவற்றிலிருந்து மீட்டு விடுவதும் இறுதியில் கழுமரம் ஏறும்காத்தான் மிகவும் கஷ்டப்படும் வேளையில் வல்லத்து மாங்காளியின் அருள்பெற்று ஏறிவிடுவதாகவும் நாடகம் முடிவடைகிறது.

www.padippakam.com

இந்நாடகக் கதா பாத்திரங்களைக் குறியீட்டுப் பாத்திரங்களாகக் கருதி ரசிக்கின்ற பொழுது சில 'புதுமைகளை அவதானிக்க முடிந்தது. ஆரியபூமாலையை இலட்சியமாக - விடுதலை - சுதந்திரம் - இன்பவாழ்வு என்றிவ்வாறுகவும், காத்தவராயனை முன்னேறிய ஸ்தாபனமாகவும், மாரியம்மனை மக்களாகவும், வல்லத்து மாங்காளியை வீரத்தின் சின்னமாகவும், தொட்டியத்துச் சின்னனை நட்புசக்தியாகவும், நிபந்தனைகளை வெற்றி பெறுவதற்கு வேண்டிய பரீட்சைகளை தாண்ட வேண்டிய படிகளாகவும் மாரியம்மனைப் பிரிந்த காத்தான் சிறை பிடிக்கப்படுவதும் மக்களைப் பிரிந்த ஸ்தாபனம் வீழ்ச்சி பெறுவதும் இறுதியில் மாரீ காளியின் அருள் ஆசீர்வாதத்துடன்வெற்றி பெறுவதுமென்ற நிகழ்வுகள் குறியீட்டுப் பாங்கில் அனுபவிக்கும் பொழுது பெறும் ஆனந்தம் அதிகம் எனலாம்.

பாடலும் துள்ளல் ஆடலும் மிகவும் மகிழ்வை யூட்டுவனவாய் அமைந்தன. பெண் பாத்திரங்களில் நடித்த மாணவியர் நன்ருக நடித்தனர். மாரி அம்மனுக நடித்த செல்வி இ. பூங்கொடி இறுதிவரை குரல் கணீரெனப் பாடி நடித்தார். நடிகர் தெரிவும் பாத்திரப் பொருத்தமும் நாடகச் சிறப்புக்கு மெருகூட்டின.

வல்லத்து மாங்காளியின் ஒப்பனையில் கொடூரத்துக்குப் பதில் கனிவான ஒப்பனையும், ஆடம்பரமான ஒப்பனைச் செலவும் அதிகமாக விருந்தது. இந்நாடகத்தை தயாரித்து நெறியாள்கை செய்தவர் தமிழ்துறை விரிவுரையாளரான கலாநிதி. இ. பாலசுந்தரம் ஆவார்.

---

## திருத்தம்

சென்ற இதழ் அட்டை பின்பக்க விளம்பரத்தில் ''ஹிமாலயா மரக்காலை''இன் ஆங்கிலப் பெயர் "Himalaya Timber Works" என தவருகக் குறிப்பிடப்பட்டிருந்தது. சரியான பெயர் "Himalaya Timber Sales"

---



படிப்பகம்

www.padippakam.com

# வெளிநாட்டுக் கடிதங்கள்

- சிவகாமி

போய் ஓரிரண்டு மாதங்கள்
ஒழுங்காய் கடிதம் வரும்.
பின்னர்
மெல்ல மெல்ல
இடைவெளி கூடும்
பக்கங்கள் குறையும்.

இடையிடையே வரும்
கடிதங்களிலும்
படிப்பதற்குப் பெரிதாய்
ஒன்றுமில்லை.
ஏனெனில்
வருவன எல்லாமே
கிட்டத்தட்ட
ஒரே செய்தியைத்தான்
தாங்கிவரும்.

நாட்டு நிலமை
நன்றாக இல்லையாம்.
இம்முறையும் விடுதலைக்கு
ஊருக்கு வரமுடியாதாம்.
அதனால் அம்மா ஐயா
அங்குவர
ஒழுங்குகள் நடக்கிறதாம்.
பிள்ளைகள் பரதநாட்டியம்
பயில்கின்றனராம்.
"எங்கு போனாலும் நம்
தமிழர் கலாச்சாரத்தைப்
பேணவேண்டும் தானே?"
என அதற்கொரு
விளக்கமும் தருவார்கள்.
அகதிகளுக்குப்
பணம் சேர்க்க
புதுவருட தினத்தன்று
'புரோக்கிராம்'
கொடுத்தனராம்.

இவர்களுக்குப்
பதில் இறுக்க
என்னால் முடியாது.
மக்கள் மரணிக்க
ஓடிய நீங்கள்
கலாச்சாரத்தைப் பற்றி
எப்படிக் கதைப்பீர்கள்?
பேணுங்கள் நன்றே
கலாச்சாரத்தை அங்கு
உயிர்களைக் காக்கப்
போராடும் எமக்கு
நீங்கள் கூறும்
கலாச்சாரம்
வெறுப்பைத்தான் தருகிறது.

நாமும் ஒருகாலம்
நடனங்கள் ஆடினோம்
பாடல்கள் பாடினோம்
இப்பவும் கூட
ஆடவும் பாடவுமே
எமக்கு
அதிக நாட்டம்.
என்றாலும்
இவற்றுக்கெல்லாம்
இது வேளையல்ல.
இம் மண்ணையும்
மக்களையும்
பேணுவதற்காய்
மாய்கின்ற வேளை
ஆடலுக்கும்
பாடலுக்கும்
நேரம்தான் ஏது?



படிப்பகம்

www.padippakam.com

ஒரு காலம்
இம்மண்ணிலும்
மக்கள் எழுவர்
யுத்தங்கள் முடியும்.
அப்போது ஐயா
உங்கள் 'கலாச்சாரம்'
இங்கு செல்லாது.

ஏனெனில்
மக்கள் ஆட்சியுடன்
கூடவே
புதியதொரு
கலாச்சாரமும்
பரிண மித்துவிடும்.

## விரியும் மனித மனங்கள்

'ஹேர்'டர் முதலான சிந்தனையாளர்கள் தேசியத்தின் வேற்றுமை இயல்புகளை வற்புறுத்திய காலத்தில் 'க'தே ஒருவர்தான் பல்வேறு பண்பாடுகளிடையும் காணத் தக்க பொதுமைப் பண்புகளைப் பிரதானப்படுத்தினுர்.

*31-01-1827*இல் 'க'தே ஒரு சீன நாவலைப் படிக்க நேர்ந்தது. அதில் அவர் உன்னிப்பாகக் கவனித்தது அந்த நாவலின் விசித்திரக் கூறுகளையோ நூதனமான அந்நியத் தன்மையையோ அல்ல. அது ஐரோப்பிய இலக்கியங்களோடும் பலவிதங்களில் ஒத்துப் போவதை அவர் அவதானித்தார். ஹேர்'மனும் டொறதியாவும் என்னும் தமது காவியமும் சம்யுஎல் றிச்சட்சனின் ஆங்கில நாவல்களுங் கூட அந்தச் சீன நாவலோடு பல அம்சங்களிலே இசைந்து போவதை அவர் உற்று நோக்கினுர்.

கடக்க முடியாதவைபோலத் தோன்றும் பிரமாண்டமான இடைவெளிகளைக் கூடக் கடந்து விரியும் தன்மை மனித மனங்களுக்கு உண்டு. இதனை நன்கு உணர்ந்து விளக்கியவர் 'க'தே.

ஆதாரம்:யுனெஸ்கோ கூறியர்.



படிப்பகம்

www.padippakam.com

# ஒரு அரசியல் தலைவரின் இலக்கிய உணர்வுகள்

சி. கா. செ.

நாட்டின் சுதந்திரம் சுயாதிபத்தியம் என்பன எமது நாட்டின் கைகளிலேயே இருத்தல் வேண்டும். எமது மக்களின் விடுதலை அம் மக்களின் சொந்தப் போராட்டங்களினூல் முன்னெடுக்கப்படல் வேண்டும், விடுதலை என்பது அடிப்படையில் வர்க்க விடுதலையாக அமைதல் வேண்டும். அத்தகைய விடுதலையை வென்றெடுப்பதற்கு கோட்பாடு தழுவிய கொள்கையும், கொள்கைப் பிடிப்புடனுன ஸ்தாபன நடைமுறையும், இலட்சிய நோக்குடைய வெகுஜனப் புரட்சிகர போராட்ட வழிமுறைகளும் மக்கள் மத்தியில் கட்டி எழுப்பப்படல் வேண்டும். சிறிய போராட்டங்களின் அனுபவங்கள் பெரும் போராட்டங்களுக்கு வழிகாட்ட வேண்டும். இவற்றின் ஆதார சக்தி விடுதலை வேண்டி நிற்கும் மக்களாகவே இருத்தல் வேண்டும். அவ்வாருக ஒரு புரட்சிகரக் கோட்பாட்டு அடிப்படையில் முன்னெடுக்கப்படும் நீண்ட போராட்டப் பயணம் இறுதியில் சமுதாய மாற்றம் என்ற வரலாற்றுத் தேவையை நிறைவு செய்யும் அடக்கி ஒடுக்கப்பட்டு வரும் உழைக்கும் மக்கள் புதிய சமுதாயத்தில் வளமான வாழ்வைப் பெறமுடியும்.

இது வெறும் கற்பனை அல்ல. நடைமுறை யதார்த்தமான வரலாற்று நியதியாகும். இதற்கான மனித முயற்சி என்பது மிகக் கடினமானதும் தவிர்க்கமுடியாததாகும் அக்கடினமான பணிக்கு மனித வரலாற்றில் ஒவ்வொரு கால கட்டத்திலும் தம்மை அர்ப்பணித்த மகத்தான மனிதர்கள் இருந்தே வந்திருக்கின்ருர்கள். இந்த வகையில் நமது சகாப்தத்தில் அக் சடுமையான பணிக்கு தம்மை அர்ப்பணித்தவர்களில் கம்யூனிஸ்டுகள் முதன்மையானவர்கள் என்பதினைத் துணிவுடன் கூற முடியும். ஒவ்வொரு நாட்டினதும் மக்களினது வெவ்வேறு அளவிலான பிரத்தியேக நிலைமைகளுக்கு ஏற்றவாறு வரலாற்று பணியை அவர்கள் எண்ணற்ற இடர்கள் துன்பங்கள், தியாகங்கள் மத்தியில் நிறைவேற்றி வந்திருக்கிருர்கள். அவர்களின் மனிதகுல விடுதலைக்கானஅரசியல் நிலைப்பாட்டினையும் உயர்ந்த அரசியல் அர்ப்பணிப்பையும் ஆளும் அதிகார வர்க்கத்தின் அரசியல் நிலைப்பாட்டுடன் சமப்படுத்த முடியாது. கம்யூனிஸ்டுகள் என்போர் ஆளும் அதிகார வர்க்கங்களின் அரசியல் நிலைப்பாட்டுடன் இணங்கிப் போகும் போக்கிற்கு கீழிறங்கும் போது அவர்களின் மதிப்பு மங்கி மக்களால் நிராகரிக்கப்படுவர். நேர்எதிராக எதிர் நீச்



படிப்பகம்

www.padippakam.com

சலடித்து அதனால் வரும் துன்ப துயரங்களைச் துச்சமென மதித்து தியாகச் சுடர்களாக பிரகாசிக்கும் போது மக்கள் அவர்களைத் தமது வழிகாட்டிகளாகத்-தலைவர்களாக ஏற்றிப் போற்றுவர் அவர்கள் காட்டும் போராட்டப் பயணத்தில் படைநடப்பவர் களாக மக்கள் பங்கு கொண்டு தமது ஆற்றங்கள் அனைத்தையும் பயன்படுத்தி இறுதி வெற்றியை நோக்கி முன்னேறுவார்கள்.

இவ்வாறான உலகு தழுவிய கம்யூனிசப் பாரம்பரியத்தின் ஒரு முன்னுதாரணச் சின்னமாக நம்மிடையே வாழ்ந்து மறைந் தவர் தோழர் கே. ஏ. சுப்பிரமணியம். அவர் ஓர் ஆற்றல் மிக்க அரசியல் வாதி. அரசியல், அரசியல் வாதிகள் என்று கூறினாலே பலரின் ஞாபகத்திற்கு வருவது பொய் வாக்குறுதி, ஏமாற்று பதவி, புகழ், சொத்து-சுகம் தேடல் என்பவை தாம். மக்கள் அவ்வாறு ஞாபகப்படுத்திக் கொள்வதில் தவறு ஏதும் இருக்க முடியாது. காரணம் கடந்த நான்கு தசாப்தங்களிலான முதலா ளித்துவ பாராளுமன்ற அரசியலில் ஈடுபட்டவர்களில் பெரும் பகுதியினர் மேற்கூறிய இலக்கணங்களை உள்ளடக்கிவந்தவர்களே. ஆனால் இந்நிலைக்கு நேர்மாறான வழிகளில் இன்றைய சமுதாய அமைப்பையும் அதன் கோர விளைவுகளையும் இனம் கண்டு அவற் றைப் பாதுகாத்து நிற்கும் ஆளும் அதிகார சக்திகளுக்கு எதி ராக அடிமட்ட மக்கள் மத்தியில் தம் வேலைகளைச் சேவைகளாகி மக்கள் போராட்டங்களை கட்டி எழுப்பி அதன் மூலமாக நேர்மை யான அரசியல் வாதி என்ற பெயர் பெற்றவர்களில் தோழர் கே. ஏ, சுப்பிரமணியம் முதன்மையானவர். அவர் மிக இளம் வயதிலேயே பொதுவுடமைக் கோட்பாட்டின் பால் ஈர்க்கப்பட்டு அதன் முழு நேரத்தொண்டனாகி ஆளும் வர்க்கத்தின்-அரசு யந்திரத்தின் அடி, உதை, சித்திரவதை சிறை, தேடுதல் என் பவற்றை அடக்கி ஒடுக்கப்பட்ட மக்களின் சார்பாக அனுபவித்து தலைவராக வழிகாட்டியாக வந்தவர். அவரது வாழ்வு ஒரு தியாக வாழ்வு. அவரதுவழிகாட்டல் ஒரு போராட்ட வழிகா ட்டல் அவரது சிந்தனைபொதுவுடமைக் கொள்கைகளை எவ் வாறு மக்களின் வாழ்வு மாற்றத்திற்கு அவர்களினூடாக முன் னெடுத்துச் செல்வது பற்றியதே அதனாலேயே அடக்கி ஒடுக் கப்பட்ட மக்களின் விடுதலையை வேண்டி நிற்போருக்கு அவர் ஒரு உதாரணச் சின்னம் என்று கூற முடிகின்றது.

அத்தகைய அபூர்வத்தன்மை கொண்ட அரசியல் வாதியான தோழர் கே. ஏ. சுப்பிரமணியத்திடம் இலக்கிய உணர்வுகள் எப்பொழுதும் உயிர்ப்புடன் இருந்து வந்ததைக் காண முடியும்



படிப்பகம்

www.padippakam.com

அவர் அரசியலுக்கும் இலக்கியத்திற்கும் இடையிலான உறவைப் பற்றிய தெளிவான இயங்கியல் பார்வை கொண்டவராகவே இருந்து வந்தார். அதனாலேயே அடக்கி ஒடுக்கப்பட்ட மக்களின் விடுதலைப் போராட்டப் பயணத்தில் இலக்கியம் வகிக்க வேண்டிய பாத்திரத்தைப் பற்றியும் அதன் சக்தி மிக்க பயன்பாடு பற்றியும் மிகுந்த அக்கறை காட்டி வந்தார்.

அவரது ஆரம்ப கால இலக்கிய ஆர்வம் தென் இந்திய திராவிட இயக்கத்தின் சீர்திருத்தக் கருத்துக்களைக் கொண்ட இலக்கிய எழுத்தாளர்களினால் கவரப்பட்டிருந்தது அதை அடுத்து அவர் பாரதியின் பக்கம் திரும்பலானார். அன்றைய நிலையில் இந்தியக் கம்யூனிஸ்டான பி. ஜீவானந்தம் பாரதியை முற்றிலும் புதிய கோணத்தில் இலக்கியத்தினூடே மக்கள் முன் நிறுத்தி வந்த ஒரு காலமாகும் இக்காலகட்டத்தில் தோழர் மணியம் கம்யூனிஸ்ட் கருத்துக்களை உள்வாங்கி வந்ததால் இந்திய கம்யூனிஸ்ட் இலக்கிய வாதிகளின் ஆக்கங்களினால் ஈர்க்கப்பட்டதுடன் ஓர் பாரதி அபிமானியாகவும் மாறினார். அவ்வகை உந்துதலினால் சிறுகதைகள் சிலவற்றையும் கவிதைகளையும் எழுதினார். அதன் பிரசுரத்திற்காக அன்றைய பத்திரிகைகளுக்கும் அவற்றை அனுப்பினார். ஆனால் அவை பிரசுரமாகாமலே அவரிடம் திரும்பி வந்தன. காரணம் அதனிடையே காணப்பட்ட கருத்துக்களே. ஆக்க இலக்கியத்தின் முயற்சிக்கு பிரசுர உற்சாகம் என்பது இன்றியமையாத ஒன்றாகும், ஆனால் தனது ஆரம்ப கால ஆக்க இலக்கிய முயற்சியை கைவிட வேண்டியதாயிற்று. அவரது இலக்கிய ஆர்வமும் இலக்கிய உணர்வும் உள்ளூர வளர்ச்சியும் பெற்றே வந்தது.

தோழர் சுப்பிரமணியத்திடம் வளர்ந்து வந்ததும் இறுதி வரை அவரிடம் நிலைபெற்று நின்றதுமான இலக்கிய ஆர்வத்தினையும் இலக்கிய உணர்வினையும் மூன்று வகைப்படுத்தலாம்.

**ஒன்று:** முழுமையான மனிதகுல விடுதலை என்ற பரந்த இலட்சியத்தின அடிப்படையில் சர்வதேச ரீதியில் தோன்றி வளர்ந்து வந்த இலக்கிய ஆக்கங்களை ஆர்வமுடன் படித்து, சுவைந்து, மற்றவர்களுடன் பகிர்ந்து வந்ததும், அத்தகைய படைப்பாளிகளை மதித்துப் போற்றி வந்தமையுமாகும்.

**இரண்டு.-** மேற்கூறிய இலட்சிய அடிப்படையில் நமது தேசத்திலும் செழுமைமிக்க இலக்கியப் படைப்புக்களையும் படைப்பாளிகளையும் உறுதியான முறையில் உருவாக்கி வளர்த்தெடுத்தல் வேண்டும், என்ற தணியாத ஆர்வம்,



படிப்பகம்

மூன்று.- சமுதாய மாற்றத்திற்கான அரசியல் போராட்ட இயக்கத்தின் வளர்ச்சிக்கு உறுதுணையாக இருந்து மக்கள் மத்தியில் சேவை செய்யக் கூடிய ஓர் பரந்த கலை இலக்கிய இயக்கத்தின் தேவை பற்றிய ஆர்வம் மிக்க அக்கறை.

மேற்கூறிய மூன்று அம்சங்களையும் ஓரளவு விரிவு படுத்தி நோக்குவோமாயின் ஓர் நேர்மையான அரசியல் தலைவனிடம் உறைந்திருந்த இலக்கிய உணர்வின் ஆழ்ந்த தன்மையையும், உயர்ந்த குறிக்கோள்களையும் புரிந்து கொள்ள முடியும்.

முழுமையான விடுதலையை நோக்கி உயர்ந்த இலக்கியம் படைத்தளித்த றஷிய எழுத்தாளர்களான மார்க்சிம் கோர்க்கி, ஆஸ்ரோவஸ்கி பதேயிவ் போன்றவர்களினதும் சீனப் புரட்சியில் பிறந்த எழுத்தாளர்களான லூசுன், மாஓதுன், லாஓஷா, பாஜின் முதலானவர்களினதும், படைப்புக்களை இலக்கிய ஆர்வத்தின் அடிப்படையில் தோழர் மணியம் உணர்வு பூர்வமாகவே படித்து சுவைத்து வந்தார். யூலியஸ் பியூசிக் என்ற புகழ் மிக்க செக்கோஸ்சலவோக்கியாவின் புரட்சிகர எழுத்தாளனின் அனுபவ எழுத்துக்கள் ஒவ்வொன்றையும் மிக்க உணர்வும் உணர்ச்சியும் கொண்ட நோக்கில் தானும் சுவைத்து ஏனையவர்களுக்கும் எடுத்துக் கூறுவது அவரது தனிச் சிறப்பு என்றே கூற வேண்டும் ஹங்கேரியக் கவிஞன் பெற்றோபி, சிலிக் கவிஞன் பப்பலோ நெருடா, இந்திய மகாகவி பாரதி போன்றவர்களின் கவிதைகளில் மானுட விடுதலைக்கான கருத்துக்களின் வலிமையும் அடக்குமுறைகளுக்கு எதிரான போர்குண இயல்புகளையும் மக்களை நேசித்த அவர்களின் உயரிய நிலைப்பாட்டினையும் தோழர் மணியம் உயர்வாகவே மதித்துப் போற்றி வந்தார்.

இந்திய இலக்கியப் படைப்பாளிகளான ராகுல்ஜி, கே. ஏ. அப்பாஸ், ப. ஜீவானந்தம், சிதம்பர ரகுநாதன், நா. வானமாமலை குமாரன் ஆசான் எழுத்துக்களில் அதீத அக்கறை கொண்டிருந்ததுடன் ஈ. எம். எஸ். நம்பூதிரிபாட் அவர்களின் இலக்கிய விளக்கங்களை பயன்படத் தக்கவையாக ஏற்று வந்தார்.

ஒரு கலை இலக்கிய எழுத்தாளனின் எழுத்துக்களின் மூலம் அவனது மக்கள் நலன் சார்ந்த அல்லது மக்கள் நலன் சாராத நிலைப்பாட்டினை உலகக் கண்ணோட்டத்தினை இனம் கண்டு கொள்ள முடியும். ஏனெனில் அவனது எழுத்துக்களே அவனது எண்ணங்களைப் பிரதிபலிக்கும் ஆதாரமாகும். அதே போல் எந்த

www.padippakam.com

வகை எழுத்தாளர்களையும் எழுத்துக்களையும் ஒரு வாசகன் அல்லது இலக்கிய ஆர்வலன் விரும்பிப் படித்து, சுவைத்து, போற்றி மதிக்கிறனே அதன் மூலம் அவனது மக்கள் நலன் சார்ந்த அல்லது மக்கள் நலன் சாராத நிலைப்பாட்டினை - உலகக் கண்ணேட்டத்தினை இனம் கண்டு கொள்ளவும் முடியும். அந்த வகையிலே தோழர் மணியம் மனித குலத்தின் அடிப்படையான விடுதலைக்கு வழிகாட்டி நின்ற மாக்சிசக் கோட்பாட்டை தழுவி எழுந்த இலக்கியப் படைப்புக்களையும் அவற்றின் படைப்பாளிகளையும் போற்றிப் புகழ்ந்து மதித்து வந்தார்.

தோழர் மணியம் உலகம் தழுவிய இலட்சியத்தின் அடிப்படையில் அமைந்த இலக்கியங்களை மதித்துப் போற்றிய அதே வேளை அவற்றின் அடிப்படையில் நமது தேசத்தில் உயர்ந்த இலக்கிய படைப்புக்களையும் படைப்பாளிகளையும் உருவாக்கி வளர்க்க வேண்டும் என்ற தணியாத ஆர்வத்தினை இறுதிவரை கொண்டிருந்தார் என்பது மட்டுமன்றி அதற்காக தன்னுலான முயற்சிகளையும் செய்து வந்தார். அந்தவகையில் 1964 ம் ஆண்டுக்கு முற்பட்ட காலப்பகுதியில் இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கம் என்ற அமைப்பு எடுத்து வந்த இலட்சிய முயற்சிகளின் போது பல்வேறு கலை இலக்கிய எழுத்தாளர்களுடன் தொடர்பு கொண்டு தனது இலக்கிய உணர்வினைப் பகிர்ந்து வேலைகளிலும் தன்னுலான பங்களிப்பினை வழங்கி வந்தார். இக் காலத்தில் க. கைலாசபதி, இளங்கீரன், கே. டானியல், கவிஞர் பசுபதி, என். கே. இரகுநாதன், பிரேம்ஜி, டொமினிக் ஜீவா இராமநாதன், சி. தில்லைநாதன், சில்லையூர் செல்வராசன், மாது கல் கந்தசாமி போன்ற கலை இலக்கியப் படைப்பாளிகளுடன் நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

ஆனுல் 1964 ம் ஆண்டுக்குப் பின் கம்யூனிஸ்ட் இயக்கத்தில் ஏற்பட்ட பிளவானது கலைஇலக்கிய முனையிலும் பிரதிபலிக்கலே செய்தது முற்போக்கு எழுத்தாளர் சங்கமானது முனைப்பான பிளவைக் கொண்டிராத போதிலும் கருத்து முரண்பாடு இருந்து வந்ததன் காரணமாக அதன் இயக்கம் செயலிழந்து போனசூழலே உருவாகியது. இத்தகைய சூழலிலே தான் தோழர் மணியமும் ஏனைய இலக்கிய ஆர்வலர்களும் வசந்தம் என்னும் இலக்கிய சஞ்சிகையை வெளிக்கொணர்ந்தனர் இதில் செ. யோகநாதன் இ. செ. கந்தசாமி, பெனடிக் பாலன் நீர்வைப் பொன்னையன்; சுபத்திரன் போன்ற வளர்ந்து வந்த எழுத்தாளர்களுடன் இளங்கீரன் என். கே. ரகுநாதன் கே. டானியல் போன்றவர்களும் வசந்தம் சஞ்சிகையை மையமாக வைத்து எழுதி வந்தனர்



படிப்பகம்

www.padippakam.com

வசந்தம் கலை இலக்கிய சஞ்சிகையானது ஒரு குறிப்பிட்ட காலம் வெளிவந்த பின் நின்றுவிட்டதாயினும் அது உருவாக்கிய இலக்கிய தாகம் தொடரவே செய்தது. அத்தகைய தாக்கத்தினையும் ஆர்வத்தினையும் இலக்கிய உணர்வாகக் கொண்டவர்களில் தோழர் மணியமும் ஒருவராக இருந்து வந்தர்.

அத்தகைய உறுதி மிக்க இலக்கிய உணர்வே 1972 ம் ஆண்டிற்குப் பின் தேசிய கலை இலக்கியப் பேரவை எனும் கலை இலக்கிய அமைப்பு உருவாகுவதற்கு காரணமாயிற்று' தேசிய கலை இலக்கியப் பேரவையின் இலக்கிய சஞ்சிகையான தாயகம் முதல் இதழ் 1974 ம் ஆண்டு தமிழ்- சிங்கள புத்தாண்டு தினத்தில் தோழர் தணிகாசலத்தின் பெயரில் வெளிவந்தது. நெல்லியடியில் அம்பத்தாடிகள் என்ற சகோதர கலை இலக்கிய அமைப்பு நடத்திய புத்தாண்டு கலை விழாவில் பேராசிரியர் க. கைலாசபதி தாயகம் சஞ்சிகையை வெளியிட்டு வைத்தார். இம் முதலாவது தாயகம் சஞ்சிகையில் புதிய ஜனநாயகம் புதிய வாழ்வு புதிய நாகரிகம் என்ற தலைப்பிலான ஆசிரியத் தலையங்கம் வெளியாயிற்று. இத்தலையங்கம் கூட்டான கருத்துப்பரிமாறலின் வெளிப்பாடாயினும் அதன் அடிப்படையை தெளிவு படுத்தி எழுதியவர் தோழர் மணியம் என்பது வெளியில் தெரியாத ஒன்றாகும். அன்றிலிருந்து அவர் இறக்கும் வரை இரண்டு ஆசிரியர் தலையங்கம் தவிர்ந்த அனைத்து ஆசிரியத் தலையங்கங்களையும் ஆசிரியர்குழு ஊடாக தாயகத்திற்கு எழுதிவந்தார் என்பது இவ்வேளை குறிப்பிடத்தக்க தாகும் மேற்படி தலையங்கத்தின் மூலம் தேசிய கலை இலக்கியப் பேரவையினதும் தாயகம் சஞ்சிகையினதும் நீண்ட கால கலை இலக்கிய கொள்கையும் நோக்கமும் வெளிப்படுத்தப் பட்டது.

தேசிய கலை இலக்கியப் பேரவையும், தாயகமும் பரந்த அடிப்படையில் ஐக்கிய முன்னணி நோக்கில் தனது கலை இலக்கிய வேலைகளை முன்னெடுக்க வேண்டும் என்பதில் தோழர் மணியத்தின் ஆலோசனைகள் முன் வைக்கப்பட்டதாயினும் 1978 ம் ஆண்டு வரை அதனை முழுமையாக அதனால் முன்னெடுக்க முடியாது போயிற்று. காரணம் அதிதீவிர ஒரு முனைவாதக் கருத்துக்கள் அரசியலில் நிலவிய காரணத்தால் அதன் பிரதி பலிப்பானது தேசிய கலை இலக்கியப் பேரவைக்குள்ளும் எதிரொலிக்கவே செய்தது. இதன் காரணமாகத் தாயகமும் நின்று போக வேண்டியதாயிற்று.

1978 ம் ஆண்டு நடுப்பகுதிக்குப் பின்பு அரசியல் ரீதியில் ஒரு புதிய திருப்பம் ஏற்பட்ட பின்பு ஏனைய முனைகளில் நடத்



படிப்பகம்

www.padippakam.com

தப்பட்டது போன்ற விமர்சனம் -சுய விமர்சனம் கலை இலக்கிய முனையிலும் நடத்தப்பட்டு தேசிய கலை இலக்கியப் பேரவை யை புதிய உற்சாகத்துடன் முன்னெடுத்து தாயகத்தை பரந்த சக்தி களின் அரவணைப்புடன் வெளியிடுவதற்கான முடிவுகள் மேற் கொள்ளப்பட்டன. இத்தகைய இலக்கியத்துறைப் புனரமைப்பில் தோழர் மணியம் ஆற்றிய பங்களிப்பு தீர்க்கமானதாக இருந்து வந்தது. தேசிய கலை இலக்கியப் பேரவைக்கும் தாயகத்திற்கும் தோழர் மணியம் அடிப்படை இலக்குகளாக வகுத்துக் கொடுத்த கொள்கைகள் இன்றும் உயிர்ப்புடன் இருந்து வருகின்றன இவை எதிர் காலத்திலும் முன்னெடுக்க வேண்டியவையாகும் இது அவரது ஆழமான அரசியல் இலக்கிய உணர்வின் வெளிப் பாடாகும்.

தோழர் மணியம் ஒரு ஓயாத எழுத்தாளனே அன்றி உணர்ச்சி மிக்க பேச்சாளனே அல்ல என்பது எல்லோருக்கும் தெரிந்த விடயம். ஆனால் ஓயாத எழுத்தாளர்கள், உணர்ச்சி மிக்க பேச்சாளர்கள், ஆழம் மிக்க ஆய்வாளர்கள் என்போரை அவர அவர் திறமைகளை இனம் கண்டு அத்துறைகளில் புதிய புதிய ஆலோசனைகளை அவர்களுக்கு வழங்கி ஓயாது ஆக்கபூர்வக் கருத் துக்களையும் வழிவகைகளையும் வழங்கி வந்த ஒரு வற்றாத ஊற்று மூலமாக இருந்து வந்தார்.

அந்த வகையில் மறைந்த பேராசிரியர் கைலாசபதியின் இலக்கிய அரசியல் ஆற்றல்களை கட்சிக்கும் மக்களுக்கும் பயன் பெறவைத்ததில் தோழர் மணியத்திற்கு விஷேச பங்கு உண்டு. அவர்கள் அரசியலில் சமகாலத் தோழர்களாக இருந்ததினால் ஒருவரை ஒருவர் மதித்தும் ஒருவரை ஒருவர் புரிந்தும் செயல் பட்டு வந்தனர். 1974 ம் ஆண்டுக்குப் பிற்பட்ட காலத்தில் பேராசிரியர் கைலாசபதியும் தோழர் மணியமும் மிக நெருக்கமாக இணைந்து செயல்பட்டு வந்தனர். இலக்கியத்தில் மட்டுமின்றி செம்பதாகை, Red Banner ஆகிய அரசியல் பத்திரிகைகளிலும் கைலாசபதி தொடர்ந்து எழுதி வந்தார்.

1979 ம் ஆண்டில் லூசுன் நூற்றாண்டு விழாவினை தேசிய கலை இலக்கியப் பேரவை பேராசிரியர் கைலாசபதியின் தலைமையில் நடத்துவதற்கும், அதனைத் தொடர்ந்து பாரதி நூற்றாண்டு விழா வினை மாதாந்த ஆய்வரங்கு மூலம் நடாத்தி அக்கட்டுரைகள் பாரதி பன்முகப் பார்வை என்னும் நூலாக வெளிவருவதற்கும் தோழர் மணியம் வழங்கிய ஆலோசனைகள் என்றும் மறக்க முடியாத இலக்கிய உணர்வின் வெளிப்பாடுகளாகும்.



படிப்பகம்

www.padippakam.com

பேராசிரியர் கைலாசபதியின் இழப்பை ஒரு பெரும் இழப்பாகக் கருதியவர் தோழர் மணியம். ஆனால் துக்கத்தைப் பலமாக மாற்றி கைலாசின் இலக்கிய வழிகாட்டல்களையும் முன் முயற்சிகளையும் நாம் தொடர்ந்து முன்னெடுக்க அவரது வழியில் பல புதிய படைப்பாளிகளையும் கலைஞர்களையும் கலை இலக்கிய இயக்கத்தையும் முன்னெடுக்க வேண்டியதன் அவசியத்தை தோழர் மணியம் வற்புறுத்தி வந்தார். அதன் வழியாக ஏற்படுத்தப்பட்டதே கைலாசபதி ஆய்வரங்குத் தொடராகும் பாரதி ஆய்வரங்கைத் தொடக்கி அதில் தலைமைப் பங்கினை வகித்து வந்த பேராசிரியர் கைலாசபதி அவ் ஆய்வரங்கு நிறைவு அடைந்து நூல் வெளிவர முன்பே நம்மை விட்டு மறைந்துவிட்டார். அதேபோல் கைலாசபதின் ஆய்வரங்கிற்கு வித்திட்டு, வழிகாட்டி, பங்கெடுத்துவந்த தோழர் மணியம் அவ் அரங்கு நிறைவு எய்தி நூல் வெளிவர முன்பே நம்மைவிட்டு மறைந்துவிட்டமை ஒற்றுமையுடைய துர்ப்பாக்கியமாகும்.

1978ம் ஆண்டிற்குப் பின்னர் கடந்த பத்தாண்டு காலப் பகுதியில் பேராசிரியர் சி. சிவசேகரத்துடன் தோழர் மணியத்திற்கு இருந்துவந்த தொடர்பானது மிக நெருக்கமானதொன்றாகும், அத்தொடர்பினை அரசியலுக்கும், தரமான இலக்கிய வளர்ச்சிக்கும் பயன்படுத்தியதில் தோழர் மணியத்தின் ஆற்றல் தனித்துவமானதாகும். இதே காலப்பகுதியில்தான் மூத்த கவிஞரான இ. முருகையனுடனும் நெருக்கமான தொடர்புகளை தோழர் மணியம் ஏற்படுத்திக்கொண்டார். அதேபோல் பேராசிரியர் சி. தில்லைநாதன் எழுத்தாளர் கே. கணேஷ் ஆகியோருடன் தனது தொடர்புகளை வலுப்படுத்தி அதன்மூலம் அவர்களின் ஆற்றல்களைப் பொதுவாக மட்டுமன்றி தேசிய கலை இலக்கியப் பேரவைக்கும் - தாயகம் சஞ்சிகைக்கும் குறிப்பான பயன் விளைவிக்கக்கூடியதான வழிவகைகளை உருவாக்கிக் கொடுத்து வந்தார்.

தோழர் மணியத்திடம் நாம் கற்றுக்கொண்ட பலவற்றில் ஒன்றுதான் தன்னடக்கமான வேலை முறை. எந்த ஒரு சிறிய வேலையையும் அதன் அரசியல், இலக்கிய முக்கியத்துவம் கருதிப் பொறுப்புடன் செய்வதில் தன்னை ஈடுபடுத்திக் கொள்வதாகும். அவ்வாறு ஒரு வேலையைச் செய்ய ஆரம்பிக்கும்போது உள்ள அதே அளவு உற்சாகத்தையும், பொறுப்புணர்வையும் அவ்வேலை செய்து முடிக்கப்படும் வரை கொண்டிருந்து வெற்றிகரமாக அதனை நிறைவேற்றி வைக்கும் தன்மையாகும்



படிப்பகம்

www.padippakam.com

இந்த வகையில் தேசிய கலை இலக்கியப் பேரவையானது சென்னை புக்ஸ் நிறுவனத்துடன் இணைந்து நூல் வெளியிடும் முயற்சிகளில் ஈடுபட்ட வேளையில் தனது அரசியல் இலக்கியத் தொடர்புகளை தக்கபடி பயன்படுத்தி இலக்கிய நூல்கள் வெளி வருவதற்கு பேருதவி புரிந்து வந்தார். இது அவரது இலக்கிய உணர்வின் அதி உயர் வெளிப்பாடாகும்.

தோழர் மணியம் தனது இறுதி நேரம் வரை தனது துறை யான அரசியலில் எவ்வாறு தளர்வற்ற உறுதியினையும், செயல் பூர்வமான நடைமுறைகளையும் நம்பிக்கையுடன் செய்து வந் தாரோ அவ்வாறே 'தனது இலக்கிய ஆர்வத்தினையும் இலக்கிய உணர்வினையும் தனக்குப் பின்னும் பயன்படும் வழியில் செல் வதற்கான அடிப்படை வழிவகைகளை உருவாக்கிச் சென்றமை விசேஷ அம்சமாகும். அதில் முக்கியமானதுதான் தேசிய கலை இலக்கியப் பேரவை - தாயகம் என்பவற்றினூடாக பழைய தலை முறை கலை இலக்கிய எழுத்தாளர்களையும் புதிய தலைமுறை எழுத்தாளர்களையும் ஒன்றிணைத்து பொது இலட்சியத்தை நோக் கிய இலக்கிய இயக்கத்திற்கு வித்திட்டுப் சென்றமையாகும். ''நான்'', ,'நான்'' ''நான்'' என்று முழங்கி இலக்கியம் செய்யும் சிலர் ஒருநாள் அந்த ''நான்'' மறையும் போது அந்த இடத்தை நிரப்ப நாங்கள் உள்ளோம் என்று சொல்ல எவரும் இல்லாத இலக்கிய சூழலுக்குப் பதிலாக, நாம், நமது இலட் சியம், நமது குறிக்கோள் என்றவாறு பரந்த இலக்கிய நோக் குடன் பலதரப்பட்ட எழுத்தாளர்களின்- கலைஞர்களின் கூட் டுழைப்பை செயற்படுத்தி பரந்த இலக்கிய இயக்கத்தினையும்- உறுதி மிக்க இலக்கியப் படைப்பாளிகள் பலரையும் உருவாக்க உதவியதோடு மட்டுமன்றி எதிர்காலத்தில் மேலும் பல படைப் பாளிகள் சமுதாய மாற்றத்திற்கான போராட்டத்திற்குப் பயன் படுமாறு உருவாகக்கூடிய ஒரு இலக்கிய இயக்கத்தின் அடித் தளத்தை உருவாக்கியதில் தோழர் மணியம் தனது இலக்கிய உணர்வு மிக்க பங்களிப்பை வழங்கிச் சென்றுள்ளார் என்பது எமக்கு மனநிறைவுடைய செய்தியாகும். அதேபோல் தோழர் கள் நண்பர்கள் என்போருடன் இணைந்து தன்னுலான இலக்கிய ஆர்வம் மிக்க முயற்சிகளை உணர்வு பூர்வமாகச் செய்ய முடிந் ததில் தோழர் மணியமும் மனநிறைவுடன் இறுதிநேர இதய இயக்கத்தை நிறுத்திக்கொண்டமையும் நம் எல்லோருக்கும் ஓர் சிறந்த முன்னுதாரணமாகும்.

படிப்பகம்

www.padippakam.com

தன் சொல்லாலும் செயலாலும் மனிதகுல விடுதலைக்கான இலட்சியப் பாதையில் வாழ்ந்து போராடி மறைந்த ஒரு போராளியைப் பற்றிய பல்வேறு மதிப்பீடுகள் கொண்ட ஓர் நூலாக வெளிவந்து விற்பனையாகி வருகின்றது,

# தோழர் மணியம் நினைவு மலர்

வெளியீடு:
கே. ஏ. சுப்பிரமணியம்
ஞாபகார்த்தக் குழு.

| | |
|---|---|
| பக்கங்கள் | 118 |
| படங்கள் | 9 |
| அளவு | 140 X 215 mm. |
| விலை | ரூபா 20-00 |

கிடைக்குமிடம்:

## வசந்தம் புத்தக நிலையம்

405, ஸ்ரான்லி வீதி
யாழ்ப்பாணம்.

---

ஆமைச்சர், வைன்ரிங், கோண்றிப்பியர்
சகல வாகன எலெக்றிக்கல் வேலைகள்
ஆகியவற்றுக்கு நாடுங்கள்

# குணம்
# எலெற்றிக்கல் வேக்ஸ்

உரிமையாளர்:
வே. குணநாயகம்
(குணம்)

87, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்

படிப்பகம்

www.padippakam.com


# சிவம் வெல்டேர்ஸ்

சகலவிதமான
எலக்றிக் வெல்டிங்ஸ்
காஸ் வெல்டிங்ஸ்

வேலைகட்கு

சிவம் வெல்டேர்ஸ்
370, மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம்.

With the best compliments of

# SILVA WATCH WORKS

10, New Central Market
Hospital Road
Jaffna.
T'Phone: 23862

*Residence:*
"Annai Velankanni"
15, 1st Lane
Power House Road
Jaffna,
T'Phone: 23706


படிப்பகம்

www.padippakam.com

○ இலங்கையில் செய்திப் பத்திரிகையாகப் பதிவுசெய்யப்பட்டது.
Registered as a News Paper In Sri Lanka.

**தாயகம்**
பணி தொடர
நல் வாழ்த்துக்கள்

**நா. கதிரவேலு**
சந்தை - சதுக்கம்
சங்கானை

**பனை அபிவிருத்திச் சபையால்**
சுகாதார முறைப்படி தயாரிக்கப்பட்ட
- பனம் கிறஸ்
- பாணிப்பனாட்டு
- பனம் ஜாம்
- பனம்சிரப்
- பனம் பானம்

மற்றும்
அழகிய கைப்பணி, அழகுசாதனப் பொருட்களுக்கு
நாட்டின் முக்கிய நகரங்களில் செயலாற்றும்

**"கற்பகம்"**

விற்பனை நிலையங்களை நாடுங்கள்!
**பனை அபிவிருத்திச் சபை**
இல. 54, ஸ்ரான்லி வீதி யாழ்ப்பாணம்

இச் சஞ்சிகை தேசிய கலை இலக்கியப் பேரவைக்காக யாழ்ப்பாணம் 15/1, மின்சார நிலைய வீதியிலுள்ள க. தணிகாசலம் அவர்களால், யாழ்ப்பாணம் 407, ஸ்ரான்லி வீதியிலுள்ள யாழ்ப்பாண அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

படிப்பகம்